கோகுலம்

GOKULAM பிப்ரவரி '97 ரூ.5.00



ஆட்டம் பாட்டம் அலுத்தாலும்; தோட்டச் சமையல் அலுக்காது!



கோகுலம்

பிப்ரவரி 1997
மலர் : 15
இதழ் : 1

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் -பாரதியார்




அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கதையைப் பாராட்டி ஏராளமான வாசகர்கள் எழுதியுள்ளார்கள். ஒழுக்க நெறிகளும், சுயகட்டுப்பாடும்தான் நம் முன்னோர் நமக்கு வழங்கியுள்ள செல்வம். இதைக் கட்டிக் காக்கும் மனப்பக்குவத்தைத் தூண்டி விடுவதே காந்தியடிகளின் இலட்சியமாக இருந்தது. அந்த நெறிகளையே கதை அறிவுறுத்துகிறது என்று கோவையில் இருந்து ஓர் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

"உதயன் எங்கே?" புதிய திருப்பத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கோகுலம் சிறப்பாக இருக்கிறது என்று கூறினால் மட்டும் போதாது. இதை காசு கொடுத்து அதிக அளவில் வாங்கிப் படிக்க நண்பர்களையும் உறவினர்களையும் தூண்டுங்கள்.



பொங்கல் வாழ்த்து அனுப்பியுள்ள அனைவருக்கும் நன்றி. ரம்சான் கொண்டாடும் வாசகர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துகள். உங்கள் கோகுலம் இந்த இதழில் தனது 14வயதை முடித்து 15ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. அடுத்து வரும் இதழ்களில் புதிய மாற்றங்கள் நிறையக் காத்திருக்கின்றன. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

வரம்!



கண்டியூரில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். மூத்தவன் குணபதி உழைப்பாளி. போதுமென்ற மனம் கொண்டவன். இளையவன் கணபதி சோம்பேறி. பேராசை பிடித்தவன். இருவருக்கும் நெசவு தெரியும். ஆனால் சொந்தமாகத் தொழில் செய்யப் போதிய பணவசதி இல்லை. அதே சமயம் உள்ளூரில் வேலையும் கிடைக்கவில்லை. ஆகவே, அருகில் இருந்த நகரத்தை நோக்கிக் கால்நடையாகவே சென்று கொண்டிருந்தனர். களைத்து விட்டதால் வழியில் ஒரு மரத்தடியில் ஓய்வெடுக்க அமர்ந்தனர்.

அப்போது அவர்களின் முன் ஒரு ஒளி தோன்றியது. சில நிமிடங்களில் அது அழகிய தேவதையாக மாறியது. அந்த தேவதை இருவரையும் பார்த்து, 'மகனே...' என அன்பொழுக அழைத்தது.

"இன்று எனக்குப் பிறந்த நாள். நீங்கள் விரும்பும் ஒரு வரத்தைத் தரப் போகிறேன். உடனே கேளுங்கள்?" என்றது

"நான் உழைத்துச் சாப்பிடவே விரும்புகிறேன். அதனால் எனக்கு எந்த வரமும் தேவையில்லை" என அமைதியாக இருந்தான் மூத்தவன் குணபதி.

அதேசமயம் தம்பி கணபதியின் மனத்தில் பேராசை புகுந்தது.

ஏராளமான பொற்காசுகளைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ வேண்டும். ஆனால், குணபதி அப்படி இருக்க விட மாட்டான்... உழைத்துச் சாப்பிடு என்று வெறுப்பேற்றுவான். ஆக... எனக்குப் பொற்காசு கிடைக்குமுன்; அவனுக்கு இரண்டு கண்களும் போகட்டும் என நினைத்தான்.

என்ன ஆச்சர்யம்! மறு நிமிடம் அண்ணன் குணபதியின் கண்கள் பார்வை இழந்தன!

"தம்பி... கண்கள் தெரியவில்லையடா!..." என அண்ணன் கதறிய போது, தம்பி கணபதி மனத்திற்குள் சிரித்துக் கொண்டான்.

"இனி எனக்குப் பொற்காசுகள் கிடைக்கச் செய்...." என தேவதையை வேண்டினான் தம்பி.

உடனே தேவதை, 'மூடனே... நான் ஒரு வரம்தான் தருகிறேன் எனக்கூறினேன். இரண்டல்ல" என பதில் அளித்தது.

தேவதையின் பதிலைத் தம்பியுடன் கேட்டுக் கொண்டிருந்த அண்ணனின் மனம் வருந்தியது.

வி.ஆர். கிருத்திகா

"தேவதையே... தம்பிக்கு அவன் விரும்பும் பொற்காசுகளை வாரி வழங்கேன்..."

என்ன ஆச்சர்யம்...!

மறுநிமிடம்... தம்பியின் முன் ஒரு குடம் தோன்றியது. அதில் பொற்காசுகள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன...!

கண் போகக் காரணமாக இருந்த தம்பி மீது கோபம் கொள்ளாது அவனுக்குப் பொற்காசு கிடைக்க வேண்டும் என விரும்பிய அண்ணனின் பெருந்தன்மையைக் கண்டு வியந்தபடியே மறைந்தது தேவதை.

தனக்குப் பொற்காசுக் குவியல் கிடைத்தது கண்டு தம்பி கணபதி மகிழ்ந்தான். அதே சமயம் அவன் மனத்தில் மீண்டும் வஞ்சம் புகுந்தது. அண்ணன் குணபதி அருகில் இருந்தால் ஜாலியாக இருக்க விடமாட்டான். மாறாக இந்தப் பொற்காசுகளை மூலதனமாகக் கொண்டு தொழில் தொடங்கி உழைக்கலாம் எனக் கூறுவான். இவனை அருகில் வைத்திருக்கக் கூடாது. விரட்டி விட வேண்டும் எனத் தீர்மானித்தான்.

"கண் தெரியாத நீ... இனி இருப்பதும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான்" என்று விரட்டி விட்டான்.

குணபதி வருந்தவில்லை. "நீ நன்றாக இருந்தாலே போதும்... நான் எங்காவது பிழைத்துக் கொள்கிறேன்..." எனக் கூறி, தட்டுத் தடுமாறி தொடர்ந்து நடந்து நகரை வந்தடைந்தான்.

அங்கு நெசவுப் பட்டறை எங்குள்ளது எனக் கேட்டறிந்து அங்கு போய்ச் சேர்ந்து அதன் முதலாளியைச் சந்தித்தான்.


"ஐயா... எனக்கு நெசவு வேலை நன்றாகத் தெரியும்... கண் இல்லாவிட்டாலும் என் கை பேசும்... அதனால் என்னை நம்பி வேலை கொடுக்கலாம்..." என்றான்.

முதலாளி இரக்க சுபாவம் உள்ளவர். அதனால் குணபதியை வேலையில் சேர்த்துக் கொண்டார்!

ஆனால், பிரச்னை வேறொரு உருவில் வந்தது. அங்கு ஏற்கெனவே நெசவு செய்து கொண்டிருந்த ஒருத்தனுக்கு, குணபதியின் வருகை பிடிக்கவில்லை. அதனால் முதலாளி பார்க்காத நேரங்களில் குணபதியின் நெசவு வேலையில் குறும்பு செய்து... கத்தியினால்



குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா அவர்களின் இலட்சியங்களைப் போற்றி வளர்க்கப் பாடுபட்டுவரும் கோவையில் உள்ள 'வள்ளியப்பா இலக்கிய வட்டம்' இந்த ஆண்டுக்கான வள்ளியப்பா இலக்கிய விருதை, தம்பி சீனிவாசன் அவர்களுக்கு வழங்கியுள்ளது. 'தம்பி' என்று செல்லமாகக் குறிப்பிடப்படும் தம்பி சீனிவாசன் அவர்கள் சிறந்த குழந்தைக் கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், திறமையான நிர்வாகி. அவரது இத்தனை திறமைகளும் குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்கு மட்டுமல்லாது வள்ளியப்பா பொறுப்பேற்றிருந்த பல இலக்கிய அமைப்புகளுக்கும் பத்திரிகைகளுக்கும் பயன்பட்டு சிறக்க வைத்துள்ளன. முற்றிலும் தகுதியுள்ள ஒருவருக்கு இந்த விருதை வழங்கிச் சிறப்பித்துள்ள வள்ளியப்பா இலக்கிய வட்டத்தைப் பாராட்டுவதுடன், 'தம்பி' அவர்களையும் பாராட்டி மகிழ்கிறோம்.



பாராட்டுகிறோம்!

சென்னையில் உள்ள குழந்தை எழுத்தாளர் சங்கம், குழந்தைகள் தினத்தையும், சிறுவர் இலக்கியப் பரிசளிப்பு விழாவையும் நீதிபதி ஏ.ஆர். லட்சுமணன் அவர்கள் தலைமையில் அண்மையில் கொண்டாடியது. க. மகாலிங்கம் (ஏவி.எம். தங்கப்பதக்கம்), இது. சிவசுப்ரமணியன் (ஏவி.எம். வெள்ளிப் பதக்கம்), இரா.இராசேந்திரன் (ஏவி.எம்.தங்கப் பதக்கம்), தமிழ்நாகம் (ஏவி.எம். வெள்ளிப் பதக்கம்), அ. வெற்றிவேலன், பின்னலூர் மு.விவேகானந்தன் (செல்லப்பன் பரிசுகள்), செ. யோகநாதன், சுகுமாறன் (எல்லப்பா - ரங்கம்மாள் அறக்கட்டளைப் பரிசுகள்), நாகப்பா நாச்சியப்பன், யோ.சத்யன் (பார்க் டவுன் பெனிபிட் பண்ட் பரிசுகள்), செ. திலீப் குமார், கு. கிருத்திகா (மெட்டாலிக் காம்பனென்ட்ஸ் பரிசுகள்) ஆகியோருக்கு கல்வி அமைச்சர் மாண்புமிகு அன்பழகன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். 17 சிறுவர் நூல்கள் வெளியிடப்பட்டன. பரிசு பெற்றவர்களை வாழ்த்துகிறோம்.

சில இடங்களில் சுரண்டி அறுத்துவிட்டு... குணபதி செய்த வேலையைப் பாழ்படுத்தினான்!

உண்மையறியாது வெகுண்ட முதலாளி, குணபதியை, வேலையை விட்டு நிறுத்தி விட்டார்.

செய்வது அறியாது நடந்து கொண்டிருந்த குணபதியின் முன் மீண்டும் தேவதை தோன்றியது.

"உனக்கு நடந்த கொடுமையைப் பார்த்தேன். நல்லவர்களுக்கு இப்படி சோதனை வருவதை என்னால் தாங்க முடியவில்லை. ஆகவே, உனக்கு மேலும் ஒரு வரம் தரத் தயார்... உனக்கும் ஒரு குடம் பொற்காசுகள் தரட்டுமா மகனே?"

"வேண்டாம் தாயே... என் கண்களைத் திரும்பத் தந்தால் போதும்... அதைக் கொண்டு... உழைத்துப் பிழைத்துக் கொள்வேன்."

"அப்படியே... ஆனால் என் மனம்... உனக்கும் ஒரு குடம் பொற்காசுகளைக் கொடுக்க விரும்புகிறதே..." என்றது தேவதை மறுபடியும்!

"அப்படி ஏதாவது வழங்க உங்களுக்கு எண்ணம் இருக்குமானால்... நான் கேட்பதை அருளினால் போதும்... பொற்காசு வேண்டாம்..."

"சரி... உனக்கு என்ன வேண்டும்?"

"என் தம்பியின் பேராசையை அழித்து; அவனை மறுபடியும் என்னுடன் சேர்த்து வைக்க வேண்டும்.

"உன் எண்ணம் நிறைவேறட்டும்..." எனக்கூறி தேவதை மறைந்தது.

அன்று மாலையே தம்பி... அண்ணனைத் தேடி வந்தான். "நீ இல்லாத போதுதான் உன் அருமை எனக்குப் புரிந்தது அண்ணா. இனி நீ இல்லாமல் நான் இல்லை. கிடைத்த பொற்காசிலும் பாதியைத் தருகிறேன்..."

"பொற்காசை மூலதனமாகப் போடும் முதலாளியாக நீயே இரு... உனக்கு உழைக்கும் தொழிலாளியாகவே நான் இருந்து விடுகிறேன்..." என அடக்கத்துடன் கூறினான் அண்ணன்!

அறிவுடையவர்கள் எது நேர்ந்தாலும் தன் நிலையை இழக்காது மற்றவர்களை விடச் சான்றோர் என நிரூபிப்பர்.



நீ மட்டும் எப்படி?

மாயன்

அவர்கள் மேனிலை முதலாமாண்டு மாணவர்கள். சென்னை விமான அதிகாரிகள் குடியிருப்பு மேனிலைப் பள்ளியில் படிப்பவர்கள். அவர்களில் சிலருக்கு சென்னை புதியது. நகரம் மட்டுமன்று. பள்ளி, தெரு, வீடு எல்லாமே புதிதுதான். ஏனென்றால், அந்தச் சிலர் வேறு நகரத்திலிருந்து வந்தவர்கள். இவர்களைத் தவிர, விமான ஊழியர் குடியிருப்பைச் சுற்றியிருந்த பகுதிகளில் வசித்த ஒரு சிலரும் கூடத் தங்கள் பிள்ளைகளை அதில் படிக்க வைத்திருந்தனர்.

மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கில பயிற்சி முறையில் படித்து வந்தவர்களாக இருந்தார்கள். மிகச் சிலரே தமிழ்ப் பயிற்சி பெற்றவர்கள். அதிலும், அந்த ஆண்டு மேனிலைப் பள்ளி முதலாமாண்டு வகுப்பில் ஆங்கிலம் போதனா முறையில் - தமிழைப் பாடமாக மட்டும் எடுத்துப் படித்தவர்கள் சந்திரகுமார், ரங்கராஜன், மனோஜ், கார்த்திக் மட்டுமே. இவர்களின் பெற்றோர், அந்தக் குடியிருப்பை நம்பி அங்கே கடைவைத்துப் பிழைத்து வந்தவர்கள். இவர்கள் நால்வரும் தொடர்ந்து தமிழ்ப் பாடம் எடுத்துப் படிக்க விண்ணப்பித்தவர்கள்.

மற்றவர்கள் எல்லோருமே கீழ் வகுப்பிலேயே தமிழுக்குப் பதிலாக வேறு மொழியான பிரெஞ்சு எடுத்துப் படித்து, தேர்ந்து வந்தவர்கள்.

அதனால், பள்ளி நிர்வாகத்தினர் அந்த நால்வரின் பெற்றோரை வரவழைத்தனர்.

“உங்கள் பிள்ளைகள் நால்வர் மட்டுமே தமிழ்ப்பாடம் - கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இந்த நால்வருக்காக மட்டுமே ஒரு தமிழ் ஆசிரியரை நியமித்து, தமிழ் வகுப்பைத் தனியாக நடத்த இயலாத நிலையில் எங்கள் நிர்வாகம் உள்ளது. தயவுசெய்து எங்களை மன்னிக்கவும். மற்ற மாணவர்களைப் போல பிரெஞ்சு மொழி கற்பதானால் எங்கள் பள்ளியிலேயே இவர்கள் தொடர்ந்து படிக்கட்டும். இல்லையேல்... எதனையும் நாங்கள் வற்புறுத்தவில்லை... எங்கள் நிலைமை இப்படி...” என்று அவர்களிடம் நிர்வாகிகள் பேசினர்.

விமானத்துறை ஊழியர்களுக்கான பள்ளியில் அவர்களைச் சேர்த்துக்

கொண்டதே பெரிய காரியம். அதனால், பிள்ளைகளும் பெற்றோரும் கலந்து பேசினர்.

இப்பொழுது மற்ற இருபத்தியாறு மாணவர்களுடன், சந்திரகுமார், ரங்கராஜன், மனோஜ், கார்த்திக் ஆகிய நால்வரும் சேர்ந்து பிரெஞ்சு கற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

அதில் யாருக்கும் கடினம் தோன்றவில்லை. ஆங்கில போதனா முறையில் படித்து வந்தவர்கள் ஆதலினாலும், பிரெஞ்சு பாடங்களை ஆங்கிலம் மூலம் கற்றுத் தந்ததினாலும் அவர்கள் சுலபமாகவே படிக்க முடிந்தது. மாணவர்களெல்லாம் ஏற்கெனவே பிரெஞ்சு எடுத்து படித்தவர்களாக இருந்தாலும் கூட அனைவருக்கும் ஆரம்ப அடிப்படையிலிருந்தே பிரெஞ்சு கற்பிக்கப்பட்டு வந்தது.

மாணவர்களும் ஆர்வமும் அக்கறையுமாகக் கற்று வந்தனர்.

ஒருநாள்.

பிரெஞ்சு ஆசிரியர், மாணவர்களை நெப்போலியனைப் பற்றி ஒரு சிறு கட்டுரையை வீட்டில் எழுதிக் கொண்டு வருமாறு பணித்தார்.

ஒரு வாரம் காலம் அவகாசமும் கொடுத்தார்.

மாணவர்களில் சிலர், 'ஒரு வாரம் காலம் அவகாசம் இருக்கிறதே!' என்று ஆறு நாட்களை வீணாகக் கடத்தி விட்டனர். ஏழாவது நாள் மண்டையைக் குடைந்து கொண்டு சிரமப்பட்டனர்.

சந்திரகுமார் தன் அப்பாவிடம் உதவி கேட்டான். "எனக்கு ஆங்கிலமே தெரியாது. தெரிந்த தமிழில் நாலுவரி கடிதம் எழுதவே கஷ்டப்படுவேன். ஏதோ நாம் தான் மோட்டார் ஒர்க் ஷாப்பில் மெக்கானிக்காக வேலை செய்து பிழைக்கிறோம். நம் பிள்ளையாவது நல்லபடியாகப் படித்து உயர்ந்த நிலையை அடையட்டுமே என்று படிக்க வைத்து வருகிறேன். நான் கட்டுரையை எழுதித் தருவதா? அதுவும் பிரெஞ்சு மொழியில்...?!!'' வாயைப் பிளந்தார் அவர்.

"கட்டுரைதானே...! நெப்போலியனைப் பற்றித்தானே... கவலைப்படாதே! ஜமாய்ச்சுடறேன்! ஆனால் ஒரு கண்டிஷன். இப்பொழுது எங்கள் ஆபீஸில் ஆடிட் வேலை நடக்குது... ஒரு மாதம் மூச்சுவிட முடியாது! அப்புறம் பாரேன்...'' என்று நீட்டி முழக்கினார் ரங்கராஜனின் தந்தை. அவர் குடியிருப்பில் ஒரு தட்டச்சுப் பயிற்சி நிலையத்தை நடத்தி வந்தார்.

ஒழுங்காக கட்டுரையை எழுதிக் கொண்டு வந்தது கார்த்திக் மட்டும்தான்.

"உலகம் என்பது ஒரு நாடக மேடை; அதில் பல்வகையான மக்கள் தோன்றுவார்கள்" என்று பாடினார் உலக மகாகவி ஷேக்ஸ்பியர். மாபெரும் வீரர்கள் தோன்றுவார்கள். சக்ரவர்த்திகள் தோன்றுவார்கள். சான்றோர்கள், ஞானிகள், துறவிகள், கலைஞர்கள் தோன்றுவார்கள். வீரத் தந்தைமார்களும் தாய்மார்களும் தோன்றி, வீரப் புதல்வர்களைப் பெற்றுத் தருவார்கள். அப்படி உலகத்தில் தோன்றிய மாபெரும் வீரர்களுள் ஈடும் எடுப்பும் இல்லாத மாவீரன் நெப்போலியன். உழைப்பு,



உறுதி, விடாமுயற்சி, ஊக்கம், எச்சரிக்கை, துணிவு ஆகிய ஆக்கப் பண்புகள் மிகுதியாகப் பெற்றவன். இத்தகைய மாவீரன் வாழ்க்கையில், நாம் கற்றுக் கொள்ளத்தக்க பாடங்களும் படிப்பினைகளும் பல உண்டு. அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முயல்வோம்...''

கார்த்திக் எழுதிய கட்டுரையின் அறிமுகமே எல்லோரையும் நிமிர்ந்து உட்கார வைத்தது. ஆசிரியர் முழுக் கட்டுரையையும் உரக்கப் படித்துக் காட்டினார்.


''ஆகா! என்ன சிறப்பான ஆரம்பம்! எவ்வளவு கருத்துச் செறிவு...'' என்று புகழ்ந்து பாராட்டினார்.

வகுப்பே வாயைப் பிளந்து ஆச்சரியமாக கார்த்திக்கைப் பார்த்தது.

கார்த்திக் வெட்கத்தினாலும் கூச்சத்தினாலும் முகம் கவிழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

''எல்லோருமே ஒரே





"காலையிலிருந்து உன்னைக் காணவில்லையே. எங்கே போனாய்?"
அம்மா நாகம்மா சினிமா பார்க்க!
— ஆர். பிரகாசம்

பள்ளியில், ஒரே வகுப்பில், ஏன் ஒரே ஆசிரியரிடம்தான் பயில்கிறோம். வேறு டியூஷன் வைத்துக் கொண்டதும் இல்லை. சந்திரகுமாரும் அப்படித்தான். அன்னவருக்கும் பாடப் புத்தகமும் ஒன்றேதான். அப்படியிருக்க கார்த்திக்கால் மட்டும் எப்படி இவ்வளவு சிறப்பாக – ஒரு அந்நிய மொழியில் – பிரெஞ்சு மொழியில் கட்டுரை வரைய முடிந்தது?" என்று எல்லோரும் தீவிரமாகச் சிந்தித்தனர்.

அவனுடைய திறமை ஆசிரியருக்குக் கூடத் திகைப்பாக இருந்தது.

"கார்த்திக், இவ்வளவு சிறப்பாகக் கட்டுரை எழுத உன்னால் மட்டும் எப்படி முடிந்தது?" என்று கேட்டார்.

"ஐயா! என் அப்பா இந்தக் காலனியில் நடமாடும் இஸ்திரி வண்டி வைத்துப் பிழைப்பவர் என்பது உங்களுக்கும் தெரியும். அவரிடம் இந்தக் காலனிவாசிகள் மட்டுமல்லாது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் கூட வாடிக்கையாளர்கள். அப்பாவைத் தேடி அடிக்கடி ஒருவர் வருவார். அப்பாவும் அவருடன் அன்பாகப் பேசுவார். பழகுவார். இருவரும் பொது விஷயங்களைப் பற்றி நீண்ட நேரம் பேசுவார்கள். சிறுவனான என்னுடன் கூட அவர் அன்புடனும், பாசத்துடன் பேசுவார். அவர் அருகில் உள்ள மாதாகோவில் பாதிரியார் என்று பிற்பாடு தெரிந்து கொண்டேன்."

"சில சமயங்களில் அவரோடு அப்பாவும் நானும் விடுமுறை நாளில் கடற்கரைக்குப் போவோம். அப்பொழுதெல்லாம் அவர் என் படிப்பைப் பற்றியே நிறையப் பேசுவார்."

"பல சமயங்களில் நான் மட்டும் அவரோடு கடற்கரைக்குச் செல்வேன். அப்பொழுதெல்லாம் அவர் மாதா கோயிலில் பாடப்படும் இசைப் பாடல்களை மெல்லப் பாடுவார். எனக்கு மொழி தெரியாவிட்டாலும் அவைகளை நான் சரியாக உச்சரிக்கக் கற்றேன். தவறு செய்யும்போது அவரே திருத்துவார். பிறகுதான் சொற்களின் பொருளைத் தெரிந்து கொண்டேன். சின்னச் சின்ன பிரெஞ்சு பாடல்களைக் கூட அவர் பாடுவார். அவருக்கு பிரெஞ்சு, ஆங்கிலம் மட்டுமல்ல, லத்தின் மொழியும் கூடத் தெரியும். அவர்தான் எனக்கு பிரெஞ்ல் புதிர்கள், வேடிக்கைக் கதைகள், விநோதக் கதைகள், விடுகதைகள் ஆகியன சொல்வார்."

"அவரோடு பழகியதால் பிரெஞ்சு மொழியில் ஏராளமான பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் நான் கஷ்டப்பட்டாமலேயே படிக்காமலேயே; எளிதாகக் கற்றுக் கொண்டேன்."

"அதோடு, பள்ளி விடுமுறை நாட்களில் – காலை நேரங்களில் நூலகத்திற்குச் சென்று சிறுவர் பத்திரிகைகள், பெரியோர், தியாகிகள், வீரர்கள், சிந்தனையாளர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்து வந்தேன். பெரும்பாலும் அவை தமிழ்தான். இருந்தாலும் அவைகளை நான் தமிழில் பதியவைத்துக் கொண்டு, பிரெஞ்சில் வெளியிடமுயன்று வந்தேன். அதன் விளைவுதான் இது. அதனால்தான் கட்டுரையை எல்லோரையும் விடச் சிறப்பாக என்னால் எழுத முடிந்தது" என்றான் கார்த்திக்.

இப்பொழுது பாதிரியாரிடம் பாட்டும், பொருளும் கேட்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதே போல் நூலகத்திற்கு வருவோர் எண்ணிக்கையும் கூடி விட்டது. காரணம் ஒரு மொழியை எப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள்தான் புரிந்து கொண்டு விட்டார்களே?



உதயன் எங்கே?

6. அன்பு மனம்

அன்றைய தபாலில் வந்திருந்த கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மார்கரெட் அம்மையார், டென்மார்க்கில் உள்ள தலைமையகத்திலிருந்து கடிதம் வந்திருப்பதைப் பார்த்தார். உடனே மற்றெல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டுப் பரபரப்புடன் அதைப் பிரித்துப் படித்தார். படிக்கப் படிக்க அவர் முகத்தில் கவலை அதிகரித்துக் கொண்டே வந்தது.

கடிதத்தை மேஜையின் மீது வைத்துவிட்டு சிந்தனையில் ஆழ்ந்த அம்மையார், அழைப்பு மணி ஒலிப்பதைக் கேட்டு, "வரலாம் வாருங்கள்!" என்றார்.

வார்டன் வைரவநாதன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

''உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். உட்காருங்கள்'' என்று எதிரேயிருந்த இருக்கையைக் காட்டினார் மார்கரெட் அம்மையார். உலோக விளிம்பிட்டதன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்துவிட்டு வார்டனின் முகத்தையே ஏறிட்டு நோக்கினார்.

சிந்தனை படிந்திருந்த அம்மையாரது முகத்தைப் பார்த்ததுமே, ஏதோ முக்கியமான காரியத்தைத்தான் பேசப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்டார் வார்டன். இருக்கையில் அமர்ந்தவாறே, ''என்ன மேடம், ஏதாவது முக்கிய விஷயமா?'' என்று கேட்டார்.

"ஆமாம்" என்று தலையசைத்த அம்மையார் சற்று நேர மௌனத்திற்குப் பின், "இன்னும் இரண்டு மாதங்களில் கோடை காலம் ஆரம்பித்து விடும் இல்லையா?'' என்று கேட்டார்.

அவர் என்ன சொல்ல உள்ளார் என்பதை ஓரளவுக்குப் புரிந்து கொண்ட வார்டன், "ஆமா மேடம். வெயில்காலம் வந்துட்டாலே ஒரே தண்ணீர் திண்டாட்டந்தான்.... சுத்தமா குடிக்கக் கூடத் தண்ணீர் இருக்காது... மறுபடி மழைக்காலம் வரும் வரை, காய்கறித் தோட்டத்துல இருந்து வருமானமும் கிடைக்காது. ஆனால், நமக்குத்தான் இதுபற்றிப் பிரச்னையே இல்லையே? இந்தக் கோடை காலத்துக்காக தலைமையகத்துல இருந்து, ஒவ்வொரு வருடமும் உதவிப் பணம் அனுப்பறாங்களே? அப்புறம் ஏன் மேடம், கவலைப்படறீங்க?'' என்று கேட்டார்.

தலைமையகத்திலிருந்து வந்திருந்த கடிதத்தை அவரிடம் காட்டிய திருமதி மார்கரெட், "இந்த மாதிரி ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து உதவிப்பணம் தருவது கஷ்டம் என்று அங்கிருந்து கடிதம் வந்திருக்கிறது. அதைப் பற்றிப் பேசத்தான்

வி.ர.வசந்தன்

உங்களை உட்காரச் சொன்னேன்" என்ற போது அவர் குரலில் கவலை அதிகமாகத் தொனித்தது.

அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வார்டன், "என்னது! உதவிப் பணம் கிடைக்கலேன்னா, வர இருக்கிற வறட்சியான மாதங்களை எப்படிச் சமாளிக்கிறது? மாட்டுப் பண்ணையில இருந்து வர்ற வருமானம், பாதி செலவுக்குக் கூடப் போதாதே?" என்றார் கலவரத்துடன்.

கவலை தோய்ந்த முகத்துடன் அவரைப் பார்த்த அம்மையார், "செலவினங்களை எல்லாம் சுருக்கிக் கொள்ளும்படி ஆலோசனை சொல்லி இருக்கிறார்கள். அதோடு, கோடைக் காலத்திலும் வருமானம் வரும்படியாக திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும்படியும், அதற்கு வேண்டிய மூலதனம் திரட்ட ஏற்ற திட்டத்தைத் தலைமையகத்திற்கு அனுப்பும்படியும் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

வார்டன் சலிப்புற்ற குரலில், "நானே இதை ரொம்ப நாளா சொல்லிக்கிட்டிருக்கேன்" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்று அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினார் திருமதி மார்கரெட்.

'மேடம், நானூறுக்கும் அதிகமான அனாதைப் பிள்ளைகளுக்கு இங்கு புகலிடம் கொடுத்திருக்கோம். அவங்க கொஞ்ச நேரம் நம்ம தோட்டத்திலேயும், பால் பண்ணையிலேயும் வேலை செய்துட்டு, மிச்ச நேரமெல்லாத்தையும் பள்ளிக் கூடத்துல வீணாக்கறாங்க.... அப்படிப் படிச்சாலும் நாளைக்கு வாழ்க்கையில் முன்னேற வழியுமில்ல! வீண் செலவுதான்... அதுக்குப் பதிலா ஏதாவது தொழில்ல இப்பவே பழக்கி விட்டோம்னா, நமக்கும் வருமானத்துக்கு வருமானம், அதோட அவங்களுக்கும் பிழைக்க ஒரு வழி கிடைக்கும் இல்லியா?"

வார்டன் சொன்னதைக் கேட்ட திருமதி மார்கரெட் பதிலெதுவும் பேசாமல் மௌனமானார். தீர்க்கமான சிந்தனை அவர் மனத்தில் ஓடுவது முகத்தில் தெரிந்தது. பின் அமைதியான குரலில், "மிஸ்டர் வைரவநாதன், நீங்கள் சொல்வதை நானும் ஒப்புக் கொள்கிறேன். இந்தப் பள்ளிப் படிப்பினால் வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை தான்... ஆனால் அவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்ற பின்னணியைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ...சமுதாயத்



தின் கீழ்மட்டத்தில், ஒழுங்கற்று எதையும் திட்டமிடாத வாழ்க்கைப் போக்குக்கு பழகியவர்கள்.... அவர்களுக்கு ஒரு செப்பனிடப்பட்ட வாழ்க்கையை அமைப்பதுதான் நமது முதல் இலட்சியம். அதற்கு இந்த பள்ளிப் படிப்பு நிச்சயமாக உதவுகிறது என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. ஒரு குறிப்பிட்ட அளவு கல்வி பயின்ற பின், அவர்களின் திறமைக்குத் தகுந்தவாறு தொழில்களில் பழக்குவது தான் நல்லது.... நாளைய சமுதாயத்தில் அவர்களும் கட்டுப்பாடுள்ள மக்களாக வாழ வேண்டும் அல்லவா?" என்று கேட்டார்.



வார்டனின் நெற்றி சுருங்கியது. "வருமானத்தைப் பெருக்கறதுக்கு வேற வழி எதுவும் இருக்கிறதா எனக்குத் தெரியல்ல மேடம்.... இந்த ஊருக்குள்ள நிறைய தீப்பெட்டி கம்பெனி, பீடி கம்பெனியெல்லாம் இருக்கு... அதுல சின்னப் பசங்களுக்கு நிறைய வேலை கிடைக்கும்.... நமக்கும் பிரச்சனை இல்லாமப் போகும்" என்றார்.

மார்கரெட் அம்மையாரின் முகத்தில் புன்முறுவல் தோன்றி மறைந்தது. "ஒன்றை மட்டும் நாம் மறந்து விடக்கூடாது வைரவநாதன்... இங்கே நாம் ஒரு வியாபார நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கவில்லை. பீடி கம்பெனிக்கும், தீப்பெட்டி கம்பெனிக்கும் அனுப்புவதாக இருந்தால் இப்படி ஒரு இல்லத்தை நடத்துவதற்கே அர்த்தமில்லாமல் போய் விடும்... அன்பும், தொண்டுள்ளமும்தான் இந்த நிறுவனத்தின் ஆதார சக்திகள். யாருமில்லாமல் நம்மை நம்பி வந்த இந்த ஏழைச் செல்வங்களை இதற்கு மேல் வதைக்க நான் விரும்பவில்லை. ஓடி விளையாடி இன்பமாகப் பொழுதுபோக்க வேண்டிய இந்தப் பிஞ்சுகளுக்கு, இங்கு ஏற்கெனவே நாம் தரும் வேலையே அதிகம் என்று நினைக்கிறேன்" என்றார்.

'அப்படீன்னா இந்தப் பிரச்சனையை எப்படித்தான் சமாளிக்கிறது?' என்று கேட்ட வைரவநாதனின் குரலில் அதிருப்தி பெரிதும் காணப்பட்டது.

"சிக்கனந்தான் ஒரே வழி. நம்முடைய ஒவ்வொரு செலவினத்தையும், மறுபரிசிலனை செய்ய வேண்டும். நாம் வியாபாரிகளுக்குத் தரும் காய்கறிகள் மற்றும் பாலுக்கு சரியான விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகந்தான். அதை இப்போதைய சந்தை விலைக்குச் சரிபார்த்து மாறுதல் செய்ய வேண்டும்... இந்த வறட்சியான மாதங்களுக்கு வேண்டிய பணத்தை, மழைக் காலங்களில் சேமித்தாக வேண்டும்... பால் மாடுகளை அதிகமாக வாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்தால் ஓரளவு சமாளிக்க முடியும் என்று

நினைக்கிறேன்'' என்ற திருமதி மார்கரெட், வார்டனின் கருத்தை அறியும் ஆவலில் அவர் முகத்தைப் பார்த்தார்.

வார்டனின் முகம் இறுகிப் போயிருந்தது. ஆர்வமற்ற குரலில், "இதுவெல்லாம் சொல்றதுக்கு நல்லாத்தான் இருக்கு... ஆனா நடைமுறைக்கு சாத்தியப்பட்டு வருமான்னு யோசிக்க வேண்டாமா மேடம்?'' என்றார்.

அவரது இந்தப் பதிலை ஓரளவு எதிர்பார்த்தவராகத் தோன்றிய அம்மையாரின் உதடுகளில் அமைதியான புன்முறுவல் தவழ்ந்தது. "முயற்சித்துப் பார்ப்போம்... சாத்தியப்படா விட்டால் பிறகு வேறு வழிகளைச் சிந்திப்போம்'' என்றவர், "சரி, வைரவநாதன், நாம் மீண்டும் இது தொடர்பாக மறுபடி பேசலாம்'' என்றார்.

வார்டன் எழுந்து சென்றதும், ஆழ்ந்த பெருமூச்சுடன் நாற்காலியில் நன்கு சாய்ந்து கொண்ட திருமதி மார்கரெட் கண்களை மூடிக் கொண்டு சிந்தனையில் மூழ்கிப் போனார். முகத்துக்கெதிரே குவிந்திருந்த கரங்களில் விரல்கள் மட்டும் பிரிவதும் சேர்வதுமாயிருந்தன.

வெகுநேரம் சிந்தித்துக் கொண்டிருந்தவர், தன்னெதிரே பணியாளர் அருமைநாயகம் வந்து நின்று மெதுவாக, "அம்மா'' என்று அழைப்பதைக் கேட்டு, 'என்ன' என்று கண்களில் கேள்வியைத் தேக்கி அவரைப் பார்த்தார்.

"ஒண்ணுமில்லேம்மா. அமர்சிங் ஐயா உங்களைப் பார்க்க வந்திருக்கார்... வாச்



சொல்லவா?" என்று கேட்டு, பதிலை எதிர் பார்த்துப் பணிவுடன் நின்று கொண் டிருந்தார் அருமைநாயகம்.

"ஓ, வரச் சொல்லுங்கள்" என்றவாறு நிமிர்ந்து உட்கார்ந்த திருமதி மார்கரெட் டின் முகத்தில் பழைய அமைதி தோன் றியது.

பணியாளர் வெளியே சென்ற அடுத்த நிமிடத்தில் பிரபல தொழில் அதிபரும், ஜோதிபுரத்திலும் அதன் சுற்றுப்புறங்களி லும் இருந்த பல தொழிற்சாலைகளுக்குச் சொந்தக்காரருமான அமர்சிங் உள்ளே நுழைந்தார்.

அவரை வரவேற்று அமரும்படி சொன்ன திருமதி மார்கரெட் கண்களில் ஆர்வம் மின்ன, "என் பிள்ளைகள் எல் லாம் எப்படி இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

அவர் 'என் பிள்ளைகள்' என்று குறிப் பிட்டுக் கேட்டது கருணையில்லத்தில் வளர்ந்து, கல்வி பயின்று பின் அமர் சிங்கின் பல்வேறு தொழிலகங்களில் வேலைக்குச் சேர்ந் திருப்பவர்களைப் பற் றித்தான்.


அமர்சிங் முகத்தில் மகிழ்ச்சி பொங்க, "உங்க இல்லத்துல இருந்து வர்றவங்க ரொம்பக் கெட்டிக்காரங்க... அவங்க கிட்ட இருக்கிற சுயக்கட்டுப்பாட் டையும், கடமை உணர்வையும் வேறு யார்கிட்டேயும்



பார்க்க முடியலே. வேலையில அவங்க காட்டற ஆர்வமும், குறிப்பிட்ட நேரத்துல, தரப் பட்டுள்ள வேலையைச் செய்து முடிக்கிற பொறுப்பும், மற்றவங்களுக்கு ஒரு முன் மாதிரியா இருக்கு... சந்தேக மில்லாமல் வாழ்க்கையில முன்னுக்கு வந்துருவாங்க" என்றார்.

அவர் பேசப் பேச திருமதி மார்கரெட்டின் முகத்தில் பெருமிதமும், மகிழ்ச்சியும், ஒரு தாய் மனத்தின் பூரிப்பும் தோன்றின. அவர் உற்சாகக் குரலில், "மிஸ்டர் அமர் சிங், தாய்ப்பறவைகளின் இறகுகளில் இருந்து தவறி விழுந்து விட்ட இந்த இளம் குஞ்சுகளின் மேல், இந்தச் சமுதாய ஓநாய்களின் கூரிய நகங்கள் பதித்து விடாமல் பாதுகாக்கத்தான் நான் இரவும் பகலும் இங்கே போராடிக் கொண்டிருக்கிறேன். வெவ்வேறு சூழ்நிலைகளில் இருந்து வருகிற இவர்களை அன்பு என்ற ஒரே கயிற்றால் கட்டி வைத்திருக்கிறேன். நல்ல நெறிகளையும், கடமை உணர்வையும் வெறும் கட்டுப்பாடுகளால் மட்டுமே கொண்டு வந்து விட முடியாது என்பது நான் அனுபவத்தால் கண்ட உண்மை. இந்த அனாதைப் பயிர்களின் வேர்களுக்கு அன்புதான் தண்ணீர். பாதுகாப்பாக இருக்கிறோம் என்ற நம்பிக்கைதான் நாம் அமைத்துக் கொடுக்கும் வேலி" என்றார் உணர்ச்சிவசப்பட்டவராக.

அவர் சொன்னதை ஆமோதிப்பது போல் தலையை அசைத்துப் புன்னகை புரிந்தார் அமர்சிங். "உண்மையிலேயே உங்களது நோக்கமும், உழைப்பும் வீண் போகல... யாரை ஏமாற்றலாம், எப்படிப் பொறுப்பை உதறிக்கிட்டு ஓடலாம் என்கிற மனோபாவம் வளர்ந்துகிட்டிருக்கிற இன்றைய உலகத்தில், கண்ணாடிக் கற்களுக்கிடையே சுடர்விட்டு ஜொலிக்கிற மணிக் கற்களாக உங்க பிள்ளைகள் பிரகாசிக்கிறாங்க... இப்பக் கூட என் தொழிற்சாலைகள்ல வேலை செய்ய இருபது பேர் வேணும், வேலைக்கான பயிற்சியையும் எங்க தொழிற்சாலைகளிலேயே அவங்க எடுத்துக்கலாம்.... அதுதான் இப்பவே சொல்லி வச்சிரலாம்னு வந்தேன்" என்று தான் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார்.



"நான் நேற்று ஸ்கூலுக்கு லீவ் போட்டிருந்தேனே, ஆசிரியர் ஏதாவது சொன்னாரா?"

"அப்பாடா. இன்னிக்குத்தான் வகுப்பு அமைதியா இருக்குன்னார்!"

— எஸ். மகேந்திரன்

சற்று நேரம் மௌனமாக இருந்த அம்மையார், "இந்த வருஷம் பள்ளி இறுதி வகுப்பை நாற்பத்தாறு பேர் முடிக்கிறார்கள். அதில் சிலர் படிப்பில் நல்ல திறமையைக் காட்டுவதால், மேலும் படிக்க வைக்க நினைத்திருக்கிறேன். மற்றவர்களை உங்கள் தொழிற்சாலைகளில் நீங்கள் அமர்த்திக் கொள்ளலாம். இறுதித் தேர்வு முடிவுகள் வந்த பின் இதைப் பற்றி முடிவு செய்யலாமே?" என்றார்.

'சரி'யென்று தலையசைத்த அமர்சிங், மேலும் சற்று நேரம் பேசிவிட்டு விடை பெற்றார்.

பிறரது துன்பம் கண்டால் மனம் தாளாது தவித்துப் போகும் இந்தக் குணம் திருமதி மார்கரெட்டுக்குப் பிறவியிலேயே அமைந்திருந்தது. அவர் சிறுமியாக இருக்கும்போது மற்ற குழந்தைகள் அழுவதைப் பார்த்தால் தானும் அழுதுகொண்டு உட்கார்ந்திருப்பார். சிறுமி மார்கரெட்டின் இந்தச் செயல் வெகுநாள் வரை அவள் பெற்றோருக்குப் புரியாத புதிராகவே இருந்தது. வளர வளர துன்பத்தில் வாடும் பிறருக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற துடிப்பு அவரிடம் உருவாகி அதுவே ஒரு இலட்சிய வெறியாக வளர்ந்து வந்தது.


அவருக்கு இருபது வயதிருக்கும்போது இரண்டாம் உலகப் போர் உச்சக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போதுதான் உலகமே அதிர்ச்சியடைந்து ஸ்தம்பித்துப் போன அந்தப் பயங்கர நிகழ்ச்சி நடைபெற்றது.

1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆறாம் தேதி ஜப்பான் நாட்டின் ஹிரோ

நாய்க்கும் பூனைக்கும் மூக்குக் கண்ணாடி!

மனிதர்கள் மூக்குக் கண்ணாடி அணிவார்கள்; தெரியும். விலங்குகளும் மூக்குக் கண்ணாடி அணிவது தெரியுமா? பிராணிகளுக்கும்கூட மூக்குக் கண்ணாடி தயாரிக்கும் நிறுவனம் உலகத்தில் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இந்த நிறுவனத்தின் பெயர் மோர்லிமைர். இது பிரான்ஸில் பாரிசில் இருக்கிறது. நாய்களுக்கும், பூனைகளுக்கும் பலவிதமான கண்ணாடிகளை இந்நிறுவனம் தயாரிக்கிறது! பூனை, நாய்களின் கண்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கிறார்கள். பரிசோதித்து பார்வைக் குறைவைப் போக்க தேவையான 'பவர்' உள்ள கண்ணாடியை இதற்கென உள்ள டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். பார்வைக் குறை தவிர பேஷனுக்காகவும், அலங்காரத்திற்காகவும்கூட பூனைகளுக்குக் கண்ணாடி போடுகிறார்கள்!

- பாளை பசும்பொன்



ஷிமா நகரம் சற்று நேரத்தில் நடக்கவிருக்கும் பயங்கரத்தை உணராமல் என்றும் போல அமைதியுடன் விழித்தெழுந்தது. காலை எட்டு மணியளவில் திடீரென்று அமெரிக்க போர் விமானங்களின் உறுமல் விண்ணில் எழ, என்ன ஏது என்று மக்கள் நிதானிப்பதற்குள் 'லிட்டில் பாய்' என்ற பெயரைத் தாங்கிய சக்திவாய்ந்த அணு குண்டு அந்நகரத்தின் மீது வீசப்பட்டது.

மிக பயங்கர வெப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டு வெடித்த அந்த அணு குண்டு சில வினாடிகளில் பல்லாயிரக் கணக்கான மனிதர்களை எரித்து சாம்பலாக்கியது. மண்ணும், மரமும் கட்டிடங்களும் தீப்பிழம்பாய்ப் பற்றி எரிந்தன.


சற்று நேரத்தில் உலகம் முழுவதற்கும் அந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. உலகத்தின் பல நாடுகளிலும் இருந்து உதவிக் கரங்களும், நேசக் கரங்களும் ஜப்பானை நோக்கி நீண்டன. மார்கரெட்டின் மனம் அந்தச் செய்தி கேட்டுத் துடித்தது. துன்பத்தில் வாடுகிற அந்நாட்டு மக்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்று அவர் நினைத்தார். நண்பர்களின் அச்சுறுத்தல்களையும், உறவினர்களின் எதிர்ப்பையும் மீறித் தன்னம்பிக்கை ஒன்றையே துணையாகக் கொண்டு, ஒரு உதவி நிறுவனத்தின் மூலம், அந்த இள வயதில் ஜப்பான் வந்து சேர்ந்தார்.

அங்கு கண்ட காட்சிகள் அவரது நெஞ்சத்தை உருக்குலைய வைத்தன. எங்கு திரும்பினாலும் பிணக்குவியல்கள்; கையிழந்து, காலிழந்து துடிக்கும் மனிதர்களின் வேதனைக் குரல்கள்; தாயை தந்தையை இழந்து தவிக்கும் குழந்தைகளின் ஏக்கப் பார்வைகள்; உதவிக்காக ஏங்கித் தவிக்கும் அந்த இளம் பூக்களின் கண்ணீர் கண்கள்; எங்கும் அனாதைகள், அனாதைகள்...

அன்றிலிருந்து அனாதைக் குழந்தைகளுக்கு உதவுவதைத் தன் வாழ்வின் இலட்சியமாக ஏற்றார் மார்கரெட்.

சில வருடங்களுக்குப் பின், ஒரு இராணுவ டாக்டரைத் திருமணம் செய்து கொண்டார். உலகில் அனாதையாக விடப்படுகிற குழந்தைகளுக்கு ஒரு தாய் வேண்டும் என்பதாலோ என்னவோ, இவ்வளவு அன்புள்ளம் கொண்ட அவருக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. அவருக்கு முப்பத்தைந்து வயது நடக்கும்போது அவரது கணவர் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அதிலிருந்து திருமதி மார்கரெட்'ன் வாழ்க்கை அனாதைச் செல்வங்க . . டு ஒன்றிப் போயிற்று.


(தொடரும்)



எங்கள் ஊரில் நடந்தது!

சிலபஸ்

எங்கள் வகுப்பு ஆசிரியர் மிகவும் நகைச்சுவையாகப் பேசுவார். ஒரு நாள் பக்கத்து வகுப்பு ஆசரியர் எங்கள் வகுப்பு ஆசிரியரிடம் வந்து "சிலபஸ் எங்கே?"



என்று கேட்டார். அதற்கு எங்கள் ஆசிரியர் "சில பஸ் தானே? ரோட்டில் ஓடுகிறது" என்று கூறியவுடன் வகுப்பே சிரிப்பு மழையில் நனைந்தது.

அதிராம்பட்டினம்,

செ.த.அப்துல்ரெஜாக்

இரண்டு விளம்பரம்!

விநாயகர் சதுர்த்திக்கு முன்தினம். கடை வீதி சென்று அப்பா பொருள்களை வாங்கி வந்திருந்தார். அவைகளைப் பார்த்து விட்டு சுட்டிப் பையன் அடுப்படியில் இருந்த அம்மாவிடம் வந்து, 'அப்பா, இரண்டு விளம்பரம் வாங்கி



வந்திருக்காங்க' என்றான்! விநாயகர் சதுர்த்திக்கும், விளம்பரத்திற்கும் என்ன சம்மந்தம் என்று புரியாமல் அம்மா வந்து அப்பொருள்களைப் பார்த்தாள். அங்கு விளாம் பழங்கள் இரண்டு இருந்தன! சுட்டிப் பையன் அதைத்தான் விளம்பரம் என்று கூறி விட்டான்' என்று புரிந்தவுடன் அனைவரும் சிரித்து விட்டோம்."

மன்னார்குடி, டி. சாந்தி.

பெரியது எது?

நான் ஒன்பதாம் வகுப்பு. அன்று எங்களுக்குத் தமிழ் வகுப்பு. தமிழாசிரியர் வந்து "தானம்" என்ற தலைப்பில் பாடம் நடத்தினார். கண்ணப்பன், மற்றும் பாரி, பேகன் போன்றவர்களையெல்லாம் உதாரணம் கூறிவிட்டு, ஒரு ஐய வினாவை எழுப்பினார். ""உலகிலேயே கண்தானம் பெரிதா, இரத்த தானம் பெரிதா?" என்று



எங்களிடம் கேட்டார். அனைவரும் தெரிந்ததைச் சொன்னோம். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து "இது இரண்டையும் விட நம்ம பள்ளி மைதானம் தான் பெரியது'' என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பு அலையில் மூழ்கியது.

விழுப்புரம், ந.துரை.

நல்லகாலம்!

முதல் வகுப்பில் சுட்டிப் பெண் காயத்ரி படிக்கிறாள். டி.வி. பார்க்கும் போதெல்லாம் அதில் வருவதைப் பற்றி விளக்கம் கேட்டுக் கொண்டிருப்பாள். ஒருநாள் டி.வி. பார்க்கும்போது "பெண்



சிசுவைக் கொல்வது சட்டப்படி குற்றம். அவ்வாறு எங்கேனும் நடந்தால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவும்" என்று விளம்பரம் காட்டப்பட்டது. உடனே காயத்ரி "அப்பாடியோ! நல்ல காலம்! நான் வளர்ந்து விட்டேன். இனிமேல் யாரும் என்னைக் கொல்ல முடியாது'' என்று சொல்லிக் கொண்டாளே பார்க்கலாம். வீட்டில் எல்லோரும் இன்னமும் கூட அதை நினைத்து நினைத்து சிரிக்கிறோம்.

திருவாரூர், கே.ஆர். சேகர்.

நின்றால் தான்!

ஊரிலிருந்து எங்கள் சகோதரி மகன் வந்திருந்தான். மூன்று வயதிருக்கும். அவனுடன் நாங்கள் சினிமாவுக்குச்



சென்றிருந்தோம். இடைவேளையின் போது பலரும் எழுந்து போவதைக் காட்டி 'வா, நாமும்போவோம். படம் முடிந்து விட்டது' என்றேன் வேடிக்கைக்காக. அதற்கு அவன் "படம் இன்னும் முடியவில்லை" என்றான். "உனக்கு எப்படிடா தெரியும்?" என்று கேட்டேன் வியப்புடன். மேலே ஃபேன் சுற்றுவதைக் காட்டி "இது நின்றால்தான் படம் முடியும்'' என்றான் மழலையுடன்.

மன்னார்குடி, த. வரதன்

சும்மா தர மாட்டாங்க!

ஒரு நாள் மீன் மார்க்கெட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒருவர், தனக்குத் தெரிந்த நண்பரைப் பார்த்ததும், "என்னங்க இந்தப் பக்கம்? என்று கேட்டார். உடனே வந்தவர் யதார்த்தமாக, "சும்மாந் தாங்க மீனு வாங்கிட்டுப் போகலாமுன்னு வந்தேன்'' என்றார். உடனே அவர் "இங்கே யாரும் சும்மா மீனு தரமாட்டாங்



களே! காசு கொடுத்தால்தான் கொடுப்பாங்க?" என்றார். மீன் கடையில் இருந்த அனைவரும் சிரித்தனர். நண்பர் முகத்தைப் பார்க்க வேண்டுமே.

நீர்விளங்குளம், பா.காளிதாசன்.

டிக்கெட் குறையுது!

எங்கள் ஊரிலிருந்து பக்கத்து ஊருக்கு அரசுப் பேருந்து ஒன்றில் சென்று கொண்டிருந்தேன். பேருந்தில் அதிகக் கூட்ட மில்லை. நடத்துனர் பயணச் சீட்டைக் கொடுத்து விட்டுத் தனது குறிப்பேட்டில் ஏதோ குறித்துப் பார்த்து விட்டு, பிறகு எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று எண்ணினார். எண்ணிப் பார்த்து



விட்டு ''இன்னும் யாருப்பா சீட்டு வாங்கல? ஒரு சீட்டு குறையுதே?" என்றார். யாரும் பேசவில்லை. ஒரு கிராமத்துப் பெண்மணி நடத்துனரைக் கூப்பிட, அவர் எரிச்சலாக ''என்னம்மா?'' என்றார். "டைவரு டிக்கட்டு வாங்கிப்புட்டாரா? கேளுங்க?" என்றார் பெண்மணி. சூழ்நிலையை மறந்து அனைவரும் சிரித்தோம் நடத்துனர் உட்பட.

காப்பரத்தாம்பட்டி,

கே. ராஜாதிருவேங்கடம்.

டிரைவர் வேண்டும்!

எங்கள் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். பாடம் தவிர பொது அறிவுக் கேள்விகளும் கேட்பார். சரியான விடையைச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் கடுமையான தண்டனை அல்லது அபராதம் விதித்து விடுவார். ஒரு நாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது தூக்கத்தில் இருந்த ஒரு மாணவன் அவர் கண்ணில் பட்டு விட்டான். அவனை



"பஸ்ஸை ஓட்ட வைக்க டீசல் வேண்டுமா? சக்கரம் வேண்டுமா?" என்று கேட்டார். உடனே அவன் "டிரைவர்தான் வேண்டும்!'' என்றானே பார்க்கலாம். வகுப்பில் இருந்த அனைவரும் சிரித்து விட்டோம். ஆசிரியர் உட்பட!

கபிஸ்தலம்,

கே.ஆர். ரவிவர்மன்.

படிப்பை முடித்ததும்?

ஒருநாள் எங்கள் தமிழ் ஆசிரியர், "நீங்கள் படிப்பை முடித்து விட்டு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நானும் என் நண்பர்களும் மேற்படிப்பு படிக்கப் போவதாகக் கூறினோம். சிலர் தொழில் செய்யப் போவதாகக் கூறினார்கள். "எல்லோரும் ஏன் ஒரே மாதிரியான பதிலைக் கூறுகிறீர்கள்! சற்று வித்தியாசமாகக் கூறுங்களேன்?" என்றார் ஆசிரியர். உடனே என் பக்கத்தில் அமர்ந்



திருந்த நண்பன் வேகமாக எழுந்து 'ஐயா நான் படிப்பை முடித்த உடன் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்றான். அவ்வளவுதான்! ஆசிரியர் உள்பட வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் சிரிப்புக் கடலில் மூழ்கினோம்.

தக்கோலம், ஷே. தமின் அன்சாரி

சுக்கு நூறு இல்லே!

எங்கள் சித்தி பெண் சரண்யா மிகவும் துறுதுறுப்பு. எப்போது பார்த்தாலும் ஏதாவது விஷமம் செய்து கொண்டே இருப்பாள். ஒருமுறை சித்தி அழகான கண்ணாடி டம்ளரை வாங்கி வந்திருந்தார். சரண்யாவிற்கு எட்டாத உயரத்தில் வைத்திருந்த போதிலும்



சரண்யா அதை விடவில்லை. ஒரு நாற்காலியைப் போட்டு எடுக்க முயன்றிருக்கிறாள். அது கைதவறிக் கீழே விழுந்து உடைந்து விட்டது. சித்தி ஆத்திரத்துடன் "இப்படிச் சுக்கு நூறாக உடைத்து விட்டாயே?'' என்று அடிக்க வந்தபோது "சுக்குநூறா இல்லேம்மா. எட்டுத் துண்டாகத்தான் உடைத்திருக்கிறேன்'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கூறினாள் சரண்யா. சித்தி மட்டுமல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

கொக்கலாடி, பி. லெட்சுமி

காலை எடு!

சித்தி மகன் மிகவும் சுட்டி.



விடுமுறைக்காக ஊரிலிருந்து வந்திருந்தான். அவனுக்கு தமிழ் சொற்றொடரைப் பிழையின்றி எழுதக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு சொற்றொடரில் அவன் 'மெத்தை வாங்கினான்' என்பதற்கு பதிலாக, 'மொத்தை வாங்கினான்' என்று எழுதியிருந்தான். அதைப் பார்த்து விட்டு, 'காலை எடு' என்றேன். உடனே அவன் ''காலை எடுத்தால் நொண்டியாகி விடுவேனே?'' என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்பலைதான்!

ஈரோடு,

ச.மகேஷ்.

நீயா, நானா?

வீட்டுக்காரர் அறைக்குள் நுழைந்தார். டியூப் லைட் சுவிட்சைப் போட்டார்.

உடனே அவ்விளக்கு ஒளி தரவில்லை.

மினுக்... மினுக் என்று எரிந்ததே தவிர, பிடித்துக் கொள்ளவில்லை. வோல்டேஜ் குறைந்து விட்டது. அது, டியூப் லைட் எரியும் அளவுக்குப் போதுமானதாக இல்லை.

டியூப் லைட் ஒளிராததால் அவர் 40 வாட் பல்ப் விளக்கைப் போட்டார். போட்டவுடன் ஒளி தந்தது!

"டியூப் லைட்டை அணைக்க வேண்டாம். கொஞ்ச நேரம் கழிந்து வோல்டேஜ் சரியானதும் அது பிடித்துக் கொள்ளும்" என்று உள்ளே திரும்பி மனைவியிடம் சொல்லிவிட்டு மேசையடியில் அமர்ந்து எழுத ஆரம்பித்தார்.

அப்போது - பரிகாசம் கலந்த குரலில் 40 வாட் பல்பு சிரித்தது.

''ஏ நெட்டைக்குழல் டியூப் லைட்டாரே...! எங்கேய்யா போச்சு உங்க சக்தி?''

மினுக்கியபடியே இருந்த டியூப்லைட், "நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் எனக்கு சக்தி அதிகம்தான். எவ்வளவு நீட்டத் திறகு - வெள்ளையாக இருக்கிறேன் பார்?" என்றது பெருமிதத்துடன்.


"இந்த ஜம்பத்தில் ஒன்னும் குறைச்சல் இல்லே. இப்ப என்ன ஆச்சு? உன்னை விட நான்தான் பிரகாசமாக இருக்கிறேன்" என்றது 40 வாட்.

வீட்டுக்காரருக்கு அதிசயமாக இருந்தது. பல்புகள் பேசுகின்றனவே! அண்ணாந்து பார்த்து கவனித்தார்.

''ஆனாலும் உன்னை விட 'அதிக ஒளி எனக்குத்தான். நீங்க 4, 5 பேர் தரும் ஒளியை, நான் ஒருத்தனே தருகிறேனே?'' என்றது டியூப் லைட் குரல் இறங்காமல்.

"என்ன பேசி என்ன...? இப்போது உன்னால் மினுக்கத்தானே முடியுது?" என்றது 40 வாட் கிண்டலாக.

''அப்படிச் சொல்லாதே. வீட்டுக்காரர் வந்தவுடன் என்ன செய்தார் கவனித்தாயா? என் ஸ்விட்சைத்தான் போட்டார். அவருக்கு மட்டுமில்லை. எல்லோருக்குமே என்னைத் தான் பிடிக்கும்" என்றது டியூப் லைட்.



"ஐயா டியூப் லைட்டாரே. எளிதில் புரிந்து கொள்ள முடியாதவர்களை. "டியூப் லைட்" என்றுதான் மக்கள் அழைப்பார்கள். ஆனால் நாங்கள் கற்பூரம் மாதிரி. நெருப்பு பட்டவுடன் பற்றிக் கொள்கிற மாதிரி நாங்கள் சுவிட்ச் போட்டவுடன் ஒளிரத் தொடங்கி விடுவோம்" என்றது 40 வாட்.

"பல்பாரே. உன் உருவம் போலவே மூளையும் கோணாமாணா! அதனால்தான் இப்படிப் பேசறே!" என்று பரிதாபமாகச் சொன்னது டியூப் லைட்.

ஐந்து நிமிடம் கழித்து, வோல்டேஜ் சரியாகி விட, டியூப்லைட் பிரகாசமாக எரிந்தது. வீட்டுக்காரர் 40 வாட் பல்பை அணைக்கப் போனவர், யாரோ கூப்பிடவே, அறையை விட்டு வெளியே போனார்.

"'பல்பாரே... இப்போ என் பிரகாசத்தைப் பார்த்திரா...? நான் ஒளிர ஆரம்பித்த உடனேயே உம்மை அணைக்கப் போய் விட்டாரே வீட்டுக்காரர்!''

பல்பு மௌனமாக இருந்தது.


"பல்பாரே. தலை கனம் கூடாது. பத்து நிமிடம் வோல்டேஜ் குறைந்தது. என்னால் செயல்பட முடிந்ததா. இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்மையும் மீறிய சக்தி உண்டு மனிதர்களுக்குக் கடவுள்... நமக்கு மின்சாரம்" என்று டியூப்லைட் தெளிவு பெற்றது.

அப்போது உள்ளே வந்த வீட்டுக்காரர் மனைவி, ''என்னங்க, கழிப்பறை விளக்கு எரியலே. இந்த பல்பைக் கொண்டு போய் அங்கே போடுங்க" என்றாள் 40 வாட் பல்பைக் காட்டியபடியே.

40 வாட் மூக்கைப் பொத்திக் கொண்டது.

டியூப்லைட் அதைப் பரிதாபமாகப் பார்த்தது!

— பி.ஆர். பார்த்தசாரதி



மண்புழு ஆஹா?

தோட்டத்திலிருந்து நீலா அலறும் குரல் கேட்டது.

"பாம்பு பாம்பு! குட்டிப் பாம்பு!"

நம்பி, அம்மா, அப்பா எல்லோரும் அலறி அடித்துக் கொண்டு தோட்டத்துக்கு ஓடினார்கள். சித்தப்பா ஒரு கம்பையே தூக்கிக் கொண்டு ஓடினார்!

"அதோ பாருங்க... அந்த நந்தியாவட்டை மரத்துக்குக் கீழே..." என்று நீலா கையைக் காட்டினாள். எல்லோரும் பார்த்தனர்.

வெளிர் ரோஜாவின் வண்ணத்தில் சுமார் ஓரடி நீளத்திற்கு ஒரு மெல்லிய பாம்பு மண்ணில் அசைந்து கொண்டிருந்தது!

''இது என்னது புது மாதிரிப் பாம்பா இருக்கே! பலப்பத்தின் பருமன் கூட இல்லையே!'' என்றார் அப்பா.

"சுறுசுறுப்பாக் கூட இல்லையே!" – இது அம்மா.

"அதானே! பாம்புன்னா என்னமா சுறுசுறுப்பா நெளியும்! ஒருவேளை இரை விழுங்கின மயக்கத்துல இருக்கோ?" – இது நம்பி.

"இது பாம்பே இல்லே. பாம்பாக இருந்தால்தானே சுறுசுறுப்பா நெளியும், தடிமனா இருக்கும்?" என்றார் சித்தப்பா.

"இது பாம்பு இல்லையா! அப்படின்னா என்ன இது?''

"இது மண் புழு."

"இத்தனை நீளமா இருக்கே!"

''மண்புழுவில் ஆயிரம் வகை இருக்கு. கால் இக்குச்சி நீளத்திலிருந்து மூன்று மீட்டர் நீளம் வரை இருக்கும். தென்னிந்தியாவில் சாதாரணமாகக் காணப்படும் வகைக்குப் பெயர் மெகாஸ் கோலக்ஸ் மாரிட்டி MEGASCOLEX MAURITI. தமிழ்நாட்டில் சர்வசாதாரணமா ஓரடி நீளத்துக்கு இருக்கும். நீங்களெல்லாம் நகரவாசிகள். மண்ணை மிதித்துப் பார்க்கும் வாய்ப்புக் கூட இல்லாதவர்கள். இல்லேன்னா மண்புழுவுக்கும் பாம்புக்கும் இப்படி வித்தியாசம் தெரியாது பதறுவீர்களா?"

"சித்தப்பா, இந்த மண் பாம்பைக் கையில் எடுத்துப் பார்க்கலாமா?" என்று ஆவலுடன் கேட்டாள் நீலா.

''அம்மா, அது மண் புழும்மா. மண் பாம்பு இல்லே! புழுன்னா அரிசி, ரவைல இருக்கிற மாதிரி ரொம்பச் சின்னதாத்தான் இருக்கும்னு நினைச்சிட்டிருக்கீங்க... அது தப்பு."

''மன்னிச்சுக்குங்க சித்தப்பா. இந்த மண்புழுவைக் கையில் எடுத்துப் பார்க்கலாமா?''

''எடுக்கலாம்மா. தீங்கு இல்லை. ஆனால், எண்ணெய் தடவின அப்பள மாவு மாதிரி வழுவழுன்னு அருவருப்பா இருக்குமே?'' என்று தயங்கிய சித்தப்பா, "உனக்கு அதை அருகே எடுத்துப் பார்க்கணும். அவ்வளவுதானே?'' என்று கேட்டுவிட்டு, ஒரு பெரிய பிளாஸ்டிக் பேசினை எடுத்து வந்தார். குனிந்து, மண்புழுவுடன் சுற்றி இருந்த

ரேவதி

மண்ணைத் தோண்டி எடுத்து, பேசினில் வைத்துக் கொண்டு வந்து மேசை மேல் வைத்தார். எல்லோரும் சுற்றி நின்று குனிந்து பார்த்தனர்.

"அப்பா! பலூன் மாதிரி எத்தனை மென்மையா இருக்கு!" என்று தொட்டுப் பார்த்து வியந்தாள் நீலா.

நம்பி ஒரு குச்சியைக் கொண்டு வந்து அதை மெதுவாகத் தூக்கிப் பார்த்தான். குச்சியில் இரண்டாக மடிந்து தொங்கியது மண்புழு.

"சித்தப்பா, இதை மீன் தொட்டியில் போட்டு வீட்டில் வளர்க்கலாமா?" என்று கேட்டாள் நீலா.

சித்தப்பா சிரித்தார்.

"நீருக்குள் இதனால் வாழ முடியாதும்மா. அதனால்தான் மழைக் காலத்தில் மண்ணுக்கு மேல் வந்து விடுகிறது."

"அப்போ இதைத் தொட்டப்போ தோல் ஈரமா இருந்துதே!"

"மண்புழுவின் தோல் ஈரமாகத்தான் இருக்க வேண்டும். அதற்காக நீரிலும் முழுக்க இதனால் வாழ முடியாது. இது தன் தோல் வழியாகத்தான் மூச்சுவிடும். இப்படி மூச்சுவிட, தோல் ஈரப்பதமாக இருப்பது அவசியம். தோல் உலர்ந்து போனால், மூச்சு கூட விட முடியாமல் இறந்துவிடும்" என்றார் சித்தப்பா.

"விசித்திரமான உடம்பு அமைப்பு உடையதாக இருக்கும் போல் இருக்கே இந்த மண் புழு!" என்றான் நம்பி.

"அப்போ வெயில் காலத்தில் இது என்ன பண்ணும்? எங்கே வாழும்?"

"கோடையில் நிலத்தின் மேற்பகுதி உலர்ந்து விடுமே? அதனால் நிலத்தின் ஆழத்திற்குச் சென்று விடும்."

"எப்படிப் போகும்?"

"மண்ணைக் குடைந்து குடைந்துதான் போகும். இப்படிக் குடைந்து போவதற்கு வசதி



யாக இதன் வாய்ப்பகுதி அமைந்திருக்கிறது. இது வாயைத் திறந்து கொண்டே தான் குடையும். அதனால் மண் வாய்க்குள் செல்லும். மண்ணில் உள்ள தாவர, ஜீவ சத்துக்களை இதன் குடல் ஏற்றுக் கொண்டு, மீதி மண் வால் பக்கமாக வெளியே வந்துவிடும். இப்படி இது குடைந்து வெளியேற்றும் மண் மென்மையாக சத்து நிறைந்ததாக இருக்கும். அதோடு, இப்படி இது மண்ணைக் குடைவதால், மண்ணுக்குள் நல்ல காற்றோட்டம் ஏற்பட்டு, எளிதாக வேர்கள் நிலத்தில் ஊடுருவி உறுதியாக நிற்க வழி ஏற்படுகிறது. இதனால் தான் மண் புழுவை விவசாயிகளின் நண்பன் என்கிறார்கள்'' என்றார் சித்தப்பா.

"சித்தப்பா இதன் உடல் மோதிரங்களைக் கோத்தது போல் இருக்கே!"

"ஆமாம். இதை segment என்பார்கள்."

"இதுக்கு மேல் சின்னப் புள்ளி மாதிரி என்னமோ இருக்கே!"

"ஆமாம். நன்றாகப் பார்த்தால் இவை தெரியும். பின்னாலிருந்து வால் நோக்கித் தடவினால் இதை உணரக்கூட உணரலாம். ஆங்கிலத்தில் இவைகளை சீட்டோ என்பார்கள். பாம்பு சட்டைத் தோலை அடிக்கடி உரிப்பது போல் இந்த சீட்டோ பலமுறை உதிர்ந்து உதிர்ந்து புதிதாக முளைக்கும்."

''சித்தப்பா, மண்புழுவின் உடலில் இரத்தம் இருக்குமா?"

"கண்டிப்பா இரத்தம் உண்டும்மா. அதுவும் செந்நிறமாகத் தான் இருக்கும். நம்து இரத்தத்திற்கு சிவப்பு வண்ணம் தரும் ஹிமோகிளோபின் என்ற நிறமி, மண்புழுவின் பிளாஸ்மா நீரிலும் உண்டு."

"நமக்கு இருப்பது போல் மண்புழுவுக்கு இதயம் உண்டா சித்தப்பா?"

நமக்கு இருப்பது போன்ற இதயம் கிடையாது. ஆனால், விரிந்து சுருங்கும் தன்மையுடைய பக்கக் குழாய்கள் முதுகுப்புறத்தில் எட்டு இணைகளாக அமைந்துள்ளன. இவைகளைப் பக்க இதயங்கள் (Lateral Hearts) என்பார்கள். இப்படிக் கூறுவதனால் மண்புழுவுக்கு எட்டு இதயங்கள் வரை உண்டு என்று எடுத்துக் கொள்ளலாம்."

"இது ஆண் புழுவா?



அறிவியல் உண்மைகள்

* நம் நாட்டில் சாதாரணமாகக் காணப்படும் மண் புழு இனம் MEGASCOLEX MAURITI.

* வளையங்களால் (SEGENT) இணைக்கப்பட்ட உடல். கால் தீக்குச்சி நீளத்தில் இருந்து மூன்று மீட்டர் நீளம் வரை இருக்கும்.

* தோலில் ஈரப்பசை இருக்க வேண்டும். இதன் வழியாகவே சுவாசிக்கும். ஈரப்பசை இல்லாத கோடைக்காலத்தில், மண்ணைக் குடைந்து மண்ணுக்கு அடியில் சென்று வாழும்.

* கண்கள் இல்லை; காதுகள் இல்லை. ஆனால் ஒளியையும் அதிர்வையும் உணரும் ஆற்றல் உண்டு.

* வாயைத் திறந்தபடி மண்ணைக் குடையும். தின்ற மண், வால் வழியே வெளியேறி நாங்கூழ் கற்கள் (WORM CASTS) என்ற பெயரில் நிலத்திற்கு உரமாகிறது. குடைவதால் மண் புரட்டப்பட்டு காற்று உள்ளே புகுந்து மென்மையாகி மண்ணின் சத்து கூடுகிறது.

* உடல் கண்டங்களில் உள்ள புள்ளிப் பகுதியில் இருந்து சுரக்கும் திரவம் இதன் உடலை ஈரப்பசையுடன் வைத்து, நோய்க் கிருமிகளின் தாக்குதலிலிருந்தும் காக்கிறது. இவை அடிக்கடி உதிர்ந்து முளைக்கும்.

* உடல் இரத்தம் செந்நிறமானது. பிளாஸ்மா நீருடன் ஹிமோகுளோபின் என்ற நிறமி சிவப்பு நிறத்தை அளிக்கிறது.

* பக்க இதயங்கள் (LATERAL HEARTS) எட்டு வரை உண்டு.

* மண்புழுக்கள் தீங்கிழைக்காதவை. நிலத்தை மென்மையாகவும், சத்துமிக்கதாகவும் வைக்க இயற்கை அன்னை தந்துள்ள நன்கொடை மண் புழு. ரசாயன உரங்களால் ஏற்படும் நச்சுத்தன்மை, சுற்றுப்புற மாசுபடவைத் தவிர்க்க, அதிக அளவில் மண்புழுப் பண்ணைகளை வளர்த்துப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

* மண்புழுவின் பிற்பகுதி பிரிக்கப்பட்டால் அல்லது இழந்து விட்டால் பின் பகுதியை மறுபடி வளர்த்துக் கொள்ளும். ஆனால், முன்பகுதி வெட்டப்பட்டாலோ, அல்லது இழந்தாலோ, பின்பகுதியால் இந்த முன்பகுதியை முன்போல் வளர்த்துக் கொள்ள முடியாது. இதுவும் இயற்கையின் நன்கொடை.

இல்லை, பெண் புழுவா சித்தப்பா?''

''மண்புழுக்கள் எல்லாமே ஆண் பெண் புழுக்கள்தாம்மா! கேட்க அதிசயமா இருந்தாலும், இதுதான் உண்மை. ஒரே புழுவே ஆணாகவும் இருக்கும்; பெண்ணாகவும் இருக்கும்.''

''மண்புழுவில் இத்தனை வியப்பான செய்திகளா!''

''இன்னமும் கேட்டுக்கோம்மா. மண் புழுவுக்குக் காது கிடையாது, கண் கிடையாது, கால் கிடையாது. ஆனாலும் ஒளியையும் அதிர்வுகளையும் உணரும் ஆற்றல் இதற்கு இருக்கிறது. இயற்கையான முறையில் மண்ணின் சத்தை மேம்படுத்த மண் புழுக்கள் உதவுகின்றன. ரசாயன உரங்களால், மண்ணும் சுற்றுப்புறமும் மாசுபடுவதைத் தடுக்க, மண் புழுக்களை அதிக அளவில் வளர்த்து பயிர்வளர்க்க அரசு மண்புழுப் பண்ணைகளைத் தொடங்கி வருகிறது.''

''அப்போ இனிமே இதை மண் புழுன்னு கூப்பிடாதீங்க சித்தப்பா. பொன் புழுன்னு கூப்பிடலாம்'' என்றாள் நீலா.

எல்லோரும் சிரித்தனர்.



"தேர்வில் நான் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கினேன்டா."

"பரவாயில்லையே, ஆனா அதுக்குள்ள எங்க அம்மா என்னை எழுப்பிட்டாங்க."




"பரீட்சைல பாஸானதுக்காக எங்க அப்பா அடிச்சார்டா."

"ஆச்சரியமா இருக்கே!"

"ஒரு சப்ஜெக்ட்ல பாஸானா அடிக்கத் தானே செய்வாங்க?"

– பா. ஜெயக்குமார்




"வகுப்பில் எல்லோரும் உட்கார்ந்திருக்க நீ மட்டும் ஏண்டா நடந்து கொண்டிருக்கே!"

"எனக்கு தூக்கத்துல நடக்கிற வியாதி சார்."



"வில் வீரன் அர்ஜுனனுக்கு அவரோட மகன் கடிதம் எழுதினா எப்படி ஆரம்பிப்பார்?"

"அம்புள்ள அப்பா."



"தீபாவளி முடிஞ்சு ஒரு மாசம் ஆச்சு. உங்க வீட்டுக் கொல்லையில வெடிச் சத்தம் கேக்குது!"

"தீபாவளிக்கு பத்த வச்ச வெடியேதான்! இப்பத்தான் திரிபுடிச்சு வெடிக்குது."

– அ. பேச்சியப்பன்



சிரிப்.... சிரிப்.... சிரிப்.... சிரிப்.... சிரிப்.... சிரிப்... சிரிப்...

கோகுலம்

1997 பிப்ரவரி
இந்த இதழில்..

ஆட்டம் பாட்டம் அழுக்காழும்

பொழுதுபோக்கு என்றவுடன் நினைவுக்கு வருபவை விளையாட்டு வகைகள். டி.வி. வீடியோ, திரைப்படங்கள், பத்திரிகைகள்தான். ஒரு மாற்றம் வேண்டாமா? இவைகளைத் தவிர பொழுதுபோக்குக்கு உதவுபவை வேறு எதுவுமே இல்லையா?

மேல்நாடுகளில் எல்லாம் விடுமுறை என்றால் குடும்பத்துடன் வெளியூர் போவதுதான். நகரத்தின் நெருக்கடி, தூசு மிகுந்த சுகாதாரக் குறைவான சூழல், வீடியோவின் தாக்கம் இவைகளில் இருந்து விடுபட்டு, சுத்தமான காற்று, பசுமையான சூழ்நிலையில் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருந்து கழிக்கத் துடிக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட, விடுமுறை என்றால் வீட்டில் உள்ள குழந்தைகள் எல்லாம் ஒன்று சேருவார்கள். வீட்டின் தோட்டப் பகுதியில், அல்லது தென்னந்தோப்பு, நதிக் கரைகளில் கூட்டாஞ்சோறு ஆக்குவார்கள். ஆளுக்கு ஒரு காய் கொண்டு வருவார்கள். எல்லாவற்றையும் போட்டு கூட்டாஞ்சோறு ஆக்குவார்கள். குழந்தைகளிலேயே சமையலறை அனுபவம் பெற்றவர்கள் தலைமை தாங்கி இதை முன்னின்று நடத்துவார்கள். மற்ற குழந்தைகள் இதற்கு ஒத்துழைப்பார்கள். இதற்கு என்று சின்ன அடுப்பு, சோறு வடிக்கும் சின்ன வெண்கலப்பானை, குட்டி அரிவாள்மனை, கரண்டி, வட்டில் எல்லாம் இருக்கும். இவை மண்ணால் ஆனவையாகத்தான் பெரும்பாலும் இருக்கும். திருவிழா கடைகளில் இந்த 'சொப்பு செட்' கண்டிப்பாக இருக்கும்.

இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் இந்த மாதிரி சொப்பு வைத்து விளையாடுவது தேவையா என்று

தோட்டச் சமையல் அழகு!

கேட்கலாம். இது வெறும் விளையாட்டு மட்டும் அல்ல. விட்டுக் கொடுக்கும் உணர்வை வளர்க்க உதவுவது.

சிலருக்கு பரங்கிக்காய் பிடிக்காது. வீட்டில் செய்தால் "வேண்டாம்" என்று ஒதுக்கி வைத்து விடுவார்கள். நண்பர்கள் உறவினர் வீட்டில் விருந்து என்றால் அங்கேயும் பரங்கிக்காய் செய்தால் "பிடிக்காது" என்று விலக்கி விடுவார்கள். ஆனால் கூட்டாஞ் சோறு ஆக்கும் விளையாட்டில், ஒருவன் பரங்கிக்காய் கொண்டு வந்தால் அதையும் சமையலில் சேர்த்து விட்டால் அங்கே "வேண்டாம், பிடிக்காது" என்று ஒதுக்க முடியாது. பத்துப் பேர் கூடும்போது நம்முடைய விருப்பு வெறுப்புக்கு முக்கியத்துவம் தராது நடந்து கொஞ்சம் விட்டுக் கொடுக்கும் உணர்வு வந்து விடும். இது எத்தனை பயன்தரும் பெரிய மாற்றம்!

சாதம் என்றால் தட்டிலே வந்து விழும் பண்டம், அல்லது ஓட்டலில் காசு கொடுத்துச் சாப்பிடும் பண்டம் என்று நினைப்பவர்கள் பலர் உண்டு. இவர்கள் எல்லாம் சமையலறையையே எட்டிப் பார்க்காதவர்கள். சமையல் என்பதற்கு என்னென்ன தேவை, எவ்வளவு தேவை, எத்தனை பேர் சேர்ந்து செய்யும் முயற்சி என்பதை நேரிடையாக உணரவைக்கும் அரிய வாய்ப்பு. இதைப் பார்த்த பிறகுதான், "அடடா! அம்மா இத்தனை கஷ்டப்படுகிறாளா? இனிமேல் நாமும் உதவ வேண்டும்" என்ற எண்ணம் தோன்றும்.

தன்னாலும் சமைக்க முடியும் என்ற தன்னம்பிக்கை வளர இது ஒரு வாய்ப்பு. இதில் இத்தனை இருக்கிறதா என்கிறீர்களா?

அட்டையில் சிறுமி காயத்ரி, சிறுவன் சுரேஷ்குமார்

வண்ணப்படம் : ஸ்ரீஹரி

பழமொழி என்ன? – போட்டி முடிவு

சென்ற ஆண்டில் (1996) கோகுலம் நடத்திய போட்டிகளில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்ட போட்டி என்ற பெருமையை இது பெறுகிறது. பெரும்பாலானவை சரியான விடையே! கடைசியில் குலுக்கல் முறையே பரிசுக்கு உரியவர்களை முடிவு செய்ய உதவியது.

சரியான விடை : பார்த்தால் பூனை; பாய்ந்தால் புலி!

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

P. சத்தியராஜ், திருச்சி – 14.
என். கனகதாரா, மதுரை – 1.
R. இந்துபாரதி, சேலம் - 636 302.
ஐ. நசீமா, குளித்தலை.
கே. ராஜேந்திரன், நல்லாலம்.
அ. சீனுவாசன், புதுவை – 1
இ. அன்பழகன், புதுவை – 10.
ஏ. ஜாபர் அலி, பாலக்காடு அஞ்சல், கேரள மாநிலம்.
எஸ். எம். ஹக்கிம், சத்தியமங்கலம்.
B. சாம்பவி, சென்னை – 17.
ப. காளிதாசன், வேட்டனூர் போஸ்ட்.
F. ஷெர்லி, எண்ணூர், சென்னை – 57.
எம். இளவரசி கண்மணி, மதுரை – 20.
எம்.ஏ.ஏ. யூனுத், ஸ்ரீலங்கா.
எச். ஸ்ரீராம், புதுதில்லி – 67.
சி. சீதா, ஹுப்ளி, கர்நாடக மாநிலம்.
D. சார்லஸ், தில்லையாடி.
ஆர். எப்ஸிபால், எஸ்.டி.மன்காட் அஞ்சல் – 629 172.
ஆர். அங்கையற்கண்ணி, சொக்கநாதபுரம் போஸ்ட்.
எஸ். பிரசன்னா, காரைக்கால் – 2.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்துள்ளவர்களுக்கு நன்றி!

மயிலு ஒயிலு!

தோகை விரிக்குது மயிலு - அதன்
தோற்றமோ அழகு ஒயிலு

பாட்டுக் கொடுக்குது குயிலு - அதில்
பனியாய் தோன்றுது வெயிலு


தத்திக் குதிக்குது முயலு - கூடவே
தாவிக் குதிக்குது அணிலு

மூங்கில் ஆடுது ஆட்டம் - அதன்
மொறு மொறு சத்தம் சீற்றம்

இலைகள் உரசும் சப்தம் - அதுவே
ஏழிசை ஆகுது நித்தம்

- மாத்தூர் பரமசிவம்.







கடிகாரம்

டிக்டிக் டிக்டிக் கடிகாரம்
டில்லி மாமா கடிகாரம்

எங்கள் வீட்டு கடிகாரம்
என்னை எழுப்பும் கடிகாரம்

குக்கூ வென்றே எழுப்பிடுமாம்
குறித்த மணிக்கு கடிகாரம்

நிற்காமல் தினமும் ஓடுமாம்
நிமிடம் காட்டும் கடிகாரம்

காலம் நமக்குப் பொன்னானதை
காட்டி உணர்த்துது கடிகாரம்

உழைப்பு உதவி இரண்டினையும்
உலகுக்கு உணர்த்துது கடிகாரம்

- சி. அருண்பிரகாஷ், கோவை.

எங்கே வெண்ணிலா?

வெண்ணிலா அழகு வெண்ணிலா
வானில் ஏது வெண்ணிலா?

வெண்ணிலா அழகுப் பொன்னிலா
வந்து ஜொலிப்பது கண்ணிலா?

வானில் காணோம் வெண்ணிலா
வந்தது அம்மா முகத்திலா?

- ஸ்ரீவிஷ்ணுவர்த்தன், சென்னை - 50.



நாமும் உதவலாம்!

மழையாம் மழையாம்
கன மழையாம்!

வானத்தில் மின்னல்
பெரு மழையாம்

மழையின் வெள்ளம்
பெருஞ் சேதம்

மக்கள் துன்பம்
பெருஞ் சோகம்

கொஞ்சம் கொடுத்தால்
துயர் தீரும்

பஞ்சம் பசியும்
அழிந் தோடும்

மிஞ்சு உள்ளங்கள்
நாம் கொடுத்தால்.

ஞாலம் என்றும்
புகழ் பாடும்!

- டி. கலையரசு, அனந்தபுரம்.






தபால் பெட்டி

சிவப்பு வர்ணப் பெட்டி - எங்கள்
தெருவில் உள்ள பெட்டி
எவர்க்கும் உதவும் பெட்டி - கடின
இரும்பில் செய்த பெட்டி!

உறவைப் போன்று நமக்கு - தினமும்
உதவும் சிறந்த பெட்டி!
திறக்கும் நேரம் காட்டும் - மிகக்
கீர்த்தி வாய்ந்த பெட்டி!

அழகாய் தெருவின் ஓரம் - நாம்
பார்க்க நிற்கும் பெட்டி
எழுதிப் போடும் கடிதம் - அனைத்தும்
ஏற்கும் தபால்பெட்டி

- மு. ருக்மணி, தேனி.







வானம் பார்!

நீல வானை நிமிர்ந்துபார்
நீந்தும் வண்ண மேகம்பார்!

காலையில் கதிரவன் தோன்றும்பார்
கணக்காய் மேற்கே மறையும் பார்!

இரவில் உலவும் நிலவைப் பார்
எழிலாய் சிமிட்டும் விண்மீன் பார்!

சரமாய்ப் பொழியும் மழையைப் பார்
சத்தம் போடும் இடியைப் பார்!

மின்னல் ஒளியின் கீற்றைப் பார்
மனதைக் கவரும் வான்வில் பார்!

இயற்கை பொழியும் அழகு எல்லாம்
இறைவன் அளித்த மாட்சியே பார்!

- எம். சேக் உசேன், வடகரை.



அருப்புக்கோட்டையிலிருந்து புக்குவாக்கா வரை!

அருப்புக்கோட்டை தமிழ்நாட்டில் உள்ள நகரம். புக்குவக்கா என்பது ஜப்பானில் உள்ள நகரம். இந்த நகரத்தில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஆசியா - பசிபிக் நாடுகளுக் கிடையேயான உலகக் குழந்தைகள் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் பங்குகொள்ள 44 நாடுகளில் இருந்து 360 மாணவியர்கள் கலந்து கொண்டனர். இந்தியாவில் இருந்து இம்மாநாட்டில் கலந்து கொள்ள எட்டுப் பேர் தேர்வு






• ரயில் பயணம்

செய்யப்பட்டனர். இதில் தமிழ்நாட்டில் இருந்து தேர்வு செய்யப்பட்ட இருவருள், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த ஜெ. வைஷ்ணவி தேவியும் ஒருத்தி. இப்பொழுது அருப்புக்கோட்டைக்கும் புக்குவக்காவுக்கும் என்ன தொடர்பு என்பது புரிந்திருக்குமே?

வைஷ்ணவிதேவி அருப்புக்கோட்டையில் உள்ள செளடாம்பிகா கான்வென்ட்டில் 8-ஆம் வகுப்பில் படித்து வரு



• தங்கியிருந்த குடும்பத்தினரோடு



• டால்பின் ஷோ


கிறாள். குழந்தைகள் மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்றவர்களைத் தேர்ந்தெடுக்க ஆயிரக்கணக்கான சிறுமிகளிடையே தேர்வு நடத்தியது இந்திய ஜூனியர் சேம்பர் இயக்ககம். தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட இருவருள் வைஷ்ணவி தேவியும் ஒருத்தி என்பது எத்தனை பெருமைக்கு உரியது!

ஜப்பானில், ஒரு குடும்ப விருந்தாளியாக ஒவ்வொரு சிறுமியையும் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் தன. ஜப்பான் மொழி தெரியாத வைஷ்ணவிதேவி அங்கே இதை எப்படிச் சமாளித்தாள் என்பது சுவையான அனுபவம் அல்லவா? அதைப் பற்றிக் கேட்ட போது வைஷ்ணவி தேவியே விளக்கினாள்.

"எனக்கு மட்டுமல்ல என்னைப் போல் அங்கே வந்திருந்த பல நாடுகளைச் சேர்ந்த சிறுமிகளுக்கு ஜப்பான் மொழி தெரியாது. அதனால், ஜப்பானுக்குக் கிளம்பும் முன்பே எங்களைப் போன்றவர்களுக்கு அங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிப் பயிற்சி மாதிரிக் கொடுத்தார்கள். அவர்களுடைய கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் எப்படிப் பட்டவை, அவைகளை நாம் எப்படி மதிக்க வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள். அதோடு ஆங்கிலம் ஜப்பான் மொழி அறிந்தவர்கள் எங்கள் கூடவே இருந்தார்கள். ஆனால், இதெல்லாம் ஓரளவுக்குத்தான் பயன்பட்

• ஜப்பானிய உடையில்





"சிரிக்காத நாடு எது?"
"சிரியா"தான்!
— பாளை பசும்பொன்

டன்" என்று சிரித்தாள் வைஷ்ணவி தேவி. அவளே மறுபடி தொடர்ந்தாள் :

"பழக ஆரம்பித்த ஒருசில மணி நேரங்களிலேயே எங்கள் முகமே எங்களுக்கு என்ன தேவை, நாங்கள் என்ன நினைக்கிறோம் என்பதையும் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் தெரிவிக்க ஆரம்பித்து விட்டன. மொழிபெயர்ப்பாளரின் உதவி குழப்பமடையும்போது மட்டுமே தேவைப்பட்டது. எந்த நாட்டவர் ஆனாலும் ஒத்த வயதில் நாங்கள் விரும்பும் இசை, கலை, ஆடல், பாடல் எல்லாம் ஒரு கருத்தில் அமைந்தவையாகத்தான் இருக்கும் என்ற உண்மையை உணர முடிந்தது."

"நான் அவர்களுக்கு சில பாடல்களைப் பாடிக் காட்டினேன். அவர்கள் ஆர்வமாகச் சிலவற்றைக் கற்றுக் கொண்டார்கள். அதே போல் நானும் சில பாடல் மெட்டுகளைக் கற்றேன். நம்முடைய ஓவியம், இசை எல்லாமே அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. அதேபோல் அவர்களுடைய இசையும் கலைகளும் பண்பாடும் யாரையும் ஈர்க்கக்கூடியவை."

"நான் ஒரு பள்ளிக்குக் கூடச் சென்று பார்த்து வந்தேன். அவர்களுடைய கற்கும் முறை எல்லாம் ஒன்றுதான். கால்குலேட்டரை அதிகம் பயன்படுத்துகிறார்கள், ஆனால், ஓரளவுக்கு மேல் கற்ற பிறகே. விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதில் நம்மைப் போலவே தனிக் கவனம் எடுத்துக் கொள்கிறார்கள். அழகை மிகவும் நேசிக்கிறார்கள். அதனால் எந்தப் பொருளையும் அது அற்பமாக இருந்தாலும் சரி, அழகுடனும், கலைநயத்துடனும் தயாரிக்கிறார்கள். மலர்களிடத்தில் தனி ஈடுபாடு. விதம் விதமான கண்கவர் மலர்களை வைத்து வீட்டை அழகுபடுத்தி வைக்கிறார்கள். நம்மைப் போல் அதிகமாகத் தொடுப்பதில்லை."

"மாநாடு எப்படி நடந்தது? அதன் செய்தி என்ன?"

"மிகச் சிறப்பாக நடந்தது. 44 நாடுகளைச் சேர்ந்த சிறுமிகளுடன் கலந்து பழகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது எத்தனை அரிய வாய்ப்பு! உலக அமைதிக்கு, கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவை பெரிதும் உதவும் என்பதை உணர முடிந்தது."

"அணுகுண்டு வீசப்பட்ட ஹிரோஷிமாவுக்குப் போனாயா?"

"போகவில்லை என்பது வருத்தம்தான். இந்த நாசத்தின் தாக்கத்தை ஒவ்வொரு ஜப்பானியக் குடும்பத்திலும் உணர முடிகிறது. உலகத்தில் மறுபடி போர் பயங்கரமும் குண்டு வீசல் என்ற உணர்வு நடக்கவே கூடாது என்பது ஒவ்வொரு ஜப்பானியச் சிறுவரிடமும் ஆழமாகப் பதிந்திருக்கிறது."

ஜப்பான் மற்றும் பிறநாட்டுச் சிறுமிகள் கொடுத்த அன்பளிப்புப் பொருள்களை வைஷ்ணவிதேவி பெருமையோடு எடுத்துக் காட்டினாள்.

கலர் பாக்ஸ், வண்ணப் பென்சில்கள், வரையப்பட்ட வாழ்த்து அட்டைகள், பூ வேலை செய்யப்பட்ட கைக்குட்டைகள், பசில்கள் (PUZZLES) பேனாக்கள், மடக்கு கலை விசிறிகள் என்று அந்தப் பட்டியல் நீண்டது.

"நீ அவர்களுக்கு என்ன கொடுத்து விட்டு வந்தாய்?"

"இதே போல் வாழ்த்து அட்டைகள், வண்ணப்பட அட்டைகள், தபால்தலைகள், பல வண்ண உருவ சாவி வளையங்கள், கை வளையல்கள்" என்று சொல்லி நிறுத்திய வைஷ்ணவி தேவி, "இவற்றுடன், நம் பாரதத்தின் பண்பாட்டை அமைதி விரும்பும் நமது நல்லெண்ணத்தை" என்று சிரித்தாள்.

ஆயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் வைஷ்ணவி தேவியைப் பாராட்டி வாழ்த்துகிறோம். – ரே.

கண் திறந்தது!

கதை, அமைப்பு : ரே


ஓவியம் : சசி







கடிகாரம் எப்போ வேணுமானாலும் வாங்கிக்கலாம். பழனிக்கு நண்பர்களோட போக முடியாதேப்பா?
சரி பாலா. உன் விருப்பம்போலவே பண்ணு. கைச் செலவுக்கு ஏதாவது பணம் தரப் பார்க்கறேன்.
எப்போ கிளம்பறீங்க?
வரவெள்ளிக்கிழமை
கைக்கு தேன்குழல் தரேன்.
அடுத்த நாள்—
பாலா, பவளப் பாட்டி உன்னைக் கூப்பிட்டாள்
எதுக்கு? நெல்லிக்காய் பவளமாலை அறுந்து போச்சா? போனவாரம்தானே கோத்துக் கொடுத்தேன்!
கஷ்டம் தெரிஞ்ச பையன், நாணய மானவன்னு பாட்டிக்கு உன்னிடம் தனி அன்பு.
தெரியும்மா. இல்லேன்னா, பவள மாலை அறுந்தா பிள்ளை பேரனைக்கூட அழைக்காது, என்னைக் கோத்துத் தரச் சொல்லுவாளா?
அன்று மாலை—
பாட்டி, வரச் சொன்னீங்களாமே...?
வா பாலா. இப்படி உட்கார்...


இந்த ஆண்டும் உதவிப் பணம் கிடைச்சிருக்காமே! கிடைக்கலேன்னாதான் அதிசயம். நீ பெரிய ஆளா வருவே. நாணயமா, கை நிறைய சம்பாதிப்பே. இந்தா கடலை உருண்டை....
எதுக்கு வரச் சொன்னீங்க?
பழனிக்குப் போறாயாமே?
ஆமாம் பஸ்ல போறோம். விபூதி, பஞ்சாமிர்தம் வாங்கிட்டு வரணுமா?
ஆமாம். அதோட இன்னொரு உதவியும் பண்ணனும். கதவை மூடிட்டுவா சொல்றேன்.
கதவை மூடியாச்சு பாட்டி. சொல்லுங்க!
எனக்குப் பத்து வயசுல மஞ்சள் காமாலை வந்தது. பிழைப்பது சந்தேகம்கிற நிலை...
அப்புறம்...!
பழனிக்கு வரதா வேண்டிக்கிட்டேன். கிருத்திகை விரதம் இருந்து உண்டியல்ல பணம் போட்டுக்கிட்டு வரேன்.



பழனிக்குப் போகலையா?
முடியலையே ராஜா! குடும்ப பாரம் தடுத்து வைச்சிட்டுதே!
உண்டிப்பணம் மட்டும் போட்டுக்கிட்டு வரீங்களா?
ஆமாண்டா கண்ணா.
ரொம்ப வருஷம் ஆயிருக்குமே!
இப்போ எனக்கு அறுபத்தைஞ்சு வயசு. பத்து வயசுல ஆரம்பிச்சேன்?
எத்தனை பணம் போடுவீங்க பாட்டி?
ஒரு ரூபாய்தான்.
அப்போ சுமார் எழுநூறு ரூபாய் உண்டியல்ல சேர்ந்திருக்கும்னு சொல்லுங்க...!
ஆமாம். இனிமே எங்கே பழனிக்குப் போக முடியப் போறது? உண்டியலை நம்பிக்கையானவங்ககிட்ட தந்து போடச் சொல்லணும்னு காத்திருந்தேன்... நீ போறதா சொன்னாங்க. நிம்மதியாச்சு.
எம்மேல அத்தனை நம்பிக்கையா பாட்டி!
உன்னை நம்பலேன்னா என்னையே நம்பலேன்னு அர்த்தம் ராஜா!


சாமி ரூம்ல மண் உண்டி இருக்கு. கொண்டா...
இதோ...! ஏகமா கனக்குதே பாட்டி...!
இருந்தா என்ன? பஸ்லதானே போறீங்க? ஒரு அட்டைப் பெட்டில அப்படியே வைச்சு மூடி எடுத்துக்கிட்டுப் போயி உண்டியல்ல போட்டுடு...
சரிபாட்டி
இந்த இருபது ரூபாயை கைச் செலவுக்கு வச்சுக்க.... பவளப்பாட்டியின் அன்பளிப்பா இருக்கட்டும்.
பாட்டி.... இதை நான் வாங்கறது தப்பு. எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா என்னை வீட்டுலயே சேர்க்க மாட்டார்...
என் ராஜா... நீ நல்லா இருக்கணும்... சங்கை சுட்டா கரியாவா போகும்? இதுல பாட்டிக்குப் விபூதியும் பஞ்சாமிர்தமும் வாங்கிக்கிட்டு வா.
அப்ப சரி. தாங்க!




பழனியை அடையும்போது இரவாகி விட்டது.
சார் காலையில்தானே மலை ஏறி தரிசனம்? கொஞ்சம் ஊரைச் சுற்றிப் பார்த்து வரோமே?
சரி, மணி எட்டு, ஒன்பதுக்குள் திரும்பிடணும். யாரும் தனியாகப் போகக் கூடாது.
சரிசார்...
ஒருமாணவன் வந்து—
சார். பாத்ரூமில் இந்த வாட்ச் இருந்தது...
பாலாஜின்னு பட்டைல எழுதியிருக்கே! நம்ம பாலாஜியோடதா?
சார், நம்ம பாலாஜிக்கு ஏது சார் கைக்கடிகாரம்?
நம்ம வகுப்புல கைக்கடிகாரம் இல்லாதவன் பாலாஜி ஒருவன்தான் சார்.
அவனுதா இருக்கவே முடியாது சார்!


சுற்றுலாவுக்கு வந்ததற்காகவே அவன் எத்தனை நாள் பட்டினி கிடக்கப் போறானோ?
எல்லோரும் சிரித்தனர்.
பாலாஜி அறைவாசலில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தான்.
உண்மையைத்தானே சொல்றாங்க? இருந்தாலும் மனம் புண்படுது!
பாலாஜி, சும்மா ஊரை சுத்திட்டு வரலாம்? கிளம்பு.
ஆசிரியர் கூட அனுமதிச்சிட்டார். கிளம்பு.
நான் வரலே. தலை வலி. இங்கேயே ரெஸ்ட் எடுத்துக்கறேன். நீங்களெல்லாம் போயிட்டு வாங்க.
எல்லோரும் போன பிறகு—
ஒரு கைக்கடிகாரம் கூட வாங்கிக்க வசதி இல்லாமல் என்ன வாழ்க்கை இது!



சத்திய சந்தன் என்று பெயர் வாங்கிய அப்பா, என்ன மகிழ்ச்சி கண்டார்? அவருக்கே கூட கைக்கடிகாரம் இல்லையே! இதுவரை ஒரு சினிமாகூட அப்பா பார்த்தது இல்லையாமே!
அவருக்கு வேண்டாம். யாரும் கேட்கமாட்டார்கள். ஆனால் என் நிலை அப்படி இல்லையே?
உண்டியல் பணம்தான் இருக்கே! உடைத்து வாட்ச் வாங்க எடுத்துக் கொண்டு, மீதியைப் போட்டால் பாட்டிக்குத் தெரியவா போகிறது!
வாசலில் ஒருவர் வந்து—
தம்பி, அருமையான கைக்கடிகாரங்கள் இருக்கு. வேணுமா?
பழனி ஆண்டவரே அனுப்பி வைச்சு ஊக்குவிக்கிற மாதிரி என்ன இருக்கு! பழனியப்பா, மன்னித்துவிடு!
தம்பி! என்ன கண்ணை மூடி சாமி கும்பிடறே! வாட்ச் ஏதாவது வேணுமா?
என்ன விலையாகுங்க? நல்லதா ஒண்ணு வேணும்?


இருநூறு ரூபாய்க்கு நல்ல வாட்ச் இருக்கு தம்பி.
தேதி கிழமை போட்டிருக்குமா?
தேதி, கிழமை, மாதம், ஆண்டு எல்லாம் போட்டது நானூறு ரூபாய் ஆகும். கறுப்பு டயல். டக்கரா இருக்கும்.
இத பார்.
வாட்ச் மாதிரியே விலையும் டக்கராத்தானே இருக்கு? குறையுங்க விலையை.
இருபத்தைஞ்சு குறைச்சுக்க.
முன்னூறுன்னா வாங்கிக்கறேன்.
சரி தம்பி. பணத்தை எடு.
ஐயா, அரைமணி கழிச்சு வாங்க பணத்தைத் தந்து வாங்கிக்கறேன்.
விற்பவர் போனதும்—
தனியா தங்கிட்டது நல்லதா போச்சு. உண்டியலை உடைக்க வேண்டியதுதான்...




ஹார்மோனிய இசை கேட்கிறது–
ஒரு சிறுவன் விந்தி நடந்து பாடியபடி வந்தான்.
அருகே வந்ததும்–
அண்ணா, ஒரு பாட்டு கேட்கறீங்களா? கருணை காட்டுங்க...
இந்தா இருபது காசு!
அண்ணா. நான் பிச்சைக்காரன் இல்லே...
அதிகக் காசு கேட்க, இது ஒரு வழியா?
இல்லவே இல்லை அண்ணா. உங்களுக்குப் புடிச்ச ஒரு பாட்டைக் கேளுங்க. வாசிச்சுக் காட்டறேன். ஒரு ரூபாய் கொடுங்க. கலையைக் காட்டி காசு கேட்கிறேனே தவிர பிச்சை கேட்கலே.
அட! பரவாயில்லையே! சின்ன வயதில், கால் ஊனத்திலும் இப்படி உயர்ந்த கொள்கையா! பாராட்டறேன் தம்பி... உன் பேர் என்ன?



அருள், அண்ணா... என்னபாட்டு கேளுங்க...?
சிக்கு மங்கு சிங்குமங்கு சின்னபாப்பா தெரியுமா?
நல்லாத் தெரியுமே. ஆனா இந்த மாதிரி உயர்ந்த கொள்கைப் பாட்டையெல்லாம் யார் கேட்கிறாங்க இப்போ! கேளுங்க.
பாட்டு முடிந்ததும்—
இந்தா ஒரு ரூபாய்.
நன்றி அண்ணா. இன்னொரு பாட்டு வேணுமா?
பாட்டுக்கு ஒரு ரூபாய் தந்து கேட்கும் அளவுக்கு நான் பணக்காரப் பையன் இல்லே அருள். நீ போகலாம்
அண்ணா, ஒரு உதவி.
திண்ணையில் ஆர்மோனியத்துடன் உட்கார்ந்தான்.
சீக்கிரம் சொல்லு? உள்ளே வேலை இருக்கு?



எல்லோரும் வரதுக்குள்ள உண்டியலை உடைக்கணுமே! இவன் வேற...!
அண்ணா எனக்கு சொந்த ஊர் அரக்கோணம்
எங்கப்பா அரக்கோணம் ஜங்ஷன்லே போர்ட்டர். நேர்மையானவர். நான்கு ஆண்டுகளுக்கு முன்–
யாரோ தெரியலையே! மயக்கம் போட்டுக் கிடக்கிறாரே!
மருத்துவ மனையில்
ஐயா, நினைவு வந்திட்டுதா? பிளாட் பாரத்துல மயங்கி விழுந்திட்டீங்க. நான்தான் இங்கே கொண்டு வந்து சேர்த்தேன்.
நன்றி. நெடுநாள் பிரார்த்தனை. பழனியாண்டவருக்கு இந்த வெள்ளி வேலைச் சாத்தணும். உங்க பொறுப்பு.
ஐயோ இறந்துட்டாரே!


வேலைச் செலுத்த நான், அம்மா, அப்பா பழனிக்கு வந்தோம். வரவழியில் பஸ் விபத்து. நான் மட்டுமே தப்பினேன். அதுவும் கால் ஊனத்துடன்.
கேட்கவே அழுகை வரதே!
பஸ் கம்பெனி தந்த நன்கொடைல ஹார்மோனியத்தை வாங்கிக்கிட்டு பாடிக் காசு கேட்டுப் பிழைக்கிறேன். தமிழ், தெலுக்கு, இந்தி, மலையாளம் எல்லாம் பாடுவேன்...
சரி அருள். சீக்கிரம் விஷயத்துக்கு வா. என்ன உதவி பண்ணணும்?
என் அப்பா நேர்மை யானவர். விபத்தில் பறிபோன வேல், இன்னொருவர், அவரை நம்பித் தந்தது. இருந்தாலும் அதைச் செலுத்த முடியாது அப்பா மறைந்தது என் மனதை அறுத்துக் கொண்டே இருக்கிறது.
மேலே சொல் அருள்!
எப்படியாவது அவரால் செலுத்த முடியாது போன வேல் காணிக்கையை நாம் செலுத்துவதே அப்பாவின் நேர்மைக்கு நான் செலுத்தும் காணிக்கை என்று முடிவு பண்ணிக் கொண்டேன்.
என் ஹார்மோனியம் என்னைக் கைவிடவில்லை. இந்த ஐந்து ஆண்டுகளில் பாடிப் பிழைத்து ஆயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன் அண்ணா...
அப்படியா!


ஆயிரம் ரூபாயையும் தாரேன். வெள்ளீல ஒரு வேல் வாங்கி, தேவஸ்தானத்தில் செலுத் துங்க. நானே போனால் ஏதுடா உனக்கு திருட்டுப்பயலேன்னு சந்தேகப்படுவாங்க. உதவு வீங்களா அண்ணா?
அப்பாவைப் பொய்யனாக்கி விடக்கூடாது என்பதற்காக இந்த ஏழை ஊன முற்ற அருள், எத்தனை பாடு படுகிறான்! இவனுடைய மன உறுதி எங்கே? என் ஈனத்தனம் எங்கே?
என்ன தயக்கம் அண்ணா? இது திருட்டுப் பணம் இல்லே. விரல்கள் புண்ணாக ஹார்மோனியம் வாசிச்சு சம்பாதித்தது.
கண்டிப்பா உதவுவேன் அருள். என்னிடம் கூட ஒரு காணிக்கை உண்டி இருக்கு. அதைச் செலுத்தும்போது, உன் வேலையும் தேவஸ்தானத்திலே செலுத்திவிடுகிறேன். நண்பர்கள் வந்ததும் வேல் வாங்கப் போகலாம்.
நன்றி அண்ணா.
வாட்ச்காரர் திரும்பி வந்தார்.
தம்பி. பணம் ரெடியா?


ஐயா, மன்னிச்சுடுங்க. வாட்ச் இப்போ வேண்டாம்னு வேண்டியவர் சொல்லிட்டாரு!
யார் தம்பி அவரு?
அவர் பெயர் மனசாட்சிங்க.
சரியான மரைகழண்ட கேஸ் போல இருக்கு!
அண்ணா, உங்களை லூஸ்னு திட்டிக்கிட்டே போறார்! கைகடிகாரம் அவசியம்தானே அண்ணா?
அவசியம்தான். ஆனா அதைவிட அவசியம் நேர்மைன்னு உணர்ந்துக்கிட்டேன் அருள். உங்க அப்பாவைப் போல், உன்னைப்போல், எங்கப்பாவைப்போல் நானும் நேர்மையானவன் அருள்.
அடுத்த நாள் பாட்டியின் உண்டியலுடன் அருளின் வேலையும் செலுத்தினான் பாலாஜி.
முருகா! உன் வேல், அசுரனை மட்டும் அழிக்கவில்லை. என் ஈனத்தனத்தையும் அழித்து விட்டது!

பூனைக்குட்டி




மியாவ் மியாவ் பூனையாம்
மறைந்து கத்தும் பூனையாம்
சியாம் தேசப் பூனையாம்
சின்னகுட்டிப் பூனையாம்!

வெள்ளை வண்ணப் பூனையாம்
வீட்டில் வளரும் பூனையாம்
பல்லை காட்டும் பூனையாம்
பதுங்கி ஒளியும் பூனையாம்!

பாலைக் குடிக்கும் பூனையாம்
பகலில் தூங்கும் பூனையாம்
வாலைக் காட்டும் எலிகளை
விரட்டிப் பிடிக்கும் பூனையாம்!

சுத்த மிக்க பூனையாம்
சோம்பல் அறியாப் பூனையாம்
அத்தை கொடுத்த பூனையாம்
அழகுக் குட்டிப் பூனையாம்!

- நே. சேவியர் தயனந்த்,
சென்னை - 78.



குருவிகள்

சிட்டுக் குருவி வந்தன
சன்னல் அருகே குந்தின!

அங்கிருந்த கண்ணாடி
அழகு பார்க்க வைத்ததாம்!


உள்ளிருந்த உருவத்தை
உற்று உற்றுப் பார்த்ததாம்!

கொத்தி கொத்திப் பார்த்ததாம்
கிட்ட கிட்ட அழைத்ததாம்!

மதித்து அழைத்தும் பயனில்லை
மிரட்டிப் பார்த்தும் பயனில்லை

சோர்வு கண்ட குருவிகள்
சினந்து விரைந்து சென்றதாம்!

- ச. கண்ணகி, மிட்டூர் அஞ்சல்.



நண்பன்

பாலன் எந்தன் தோழன்
பழக நல்ல நண்பன்

பள்ளி கூட்டிச் செல்வான்
பாடம் சொல்லித் தருவான்


கூடி ஆட வைப்பான்
குழந்தை போல சிரிப்பான்

பண்டம் தின்னக் கொடுப்பான்
பார்த்து அதை ரசிப்பான்

இந்த பாலன் போல
இனிய நண்பர் உண்டோ?

- க. சாந்தி, சிறுபுலியூர்.







பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வாசம் மிக்க பூக்கள்
சின்ன சின்ன பூக்கள்
சிரிக்கும் அழகுப் பூக்கள்!

மென்மை மிகு பூக்கள்,
மிக்க அழகுப் பூக்கள்
பெண்கள் விரும்பும் பூக்கள்
பெருமை தரும் பூக்கள்!

வண்டு மொய்க்கும் பூக்கள்
வகை வகையாம் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்!
கவிதை பாடும் பூக்கள்!

- டி. புவனேஸ்வரி, சென்னை - 61.

அழகு

கடலுக்கு அழகு அலைகளாம்!
காட்டிற்கு அழகு மரங்களாம்!

மயிலுக்கு அழகு தோகையாம்!
மானுக்கு அழகு மேனியாம்!

செடிக்கு அழகு மலர்களாம்!
சுடருக்கு அழகு வெளிச்சமாம்!

உடலுக்கு அழகு தூய்மையாம்!
உள்ளத்தின் அழகு நேர்மையாம்!

- ஜே. அனு. சுஹாசினி, பொன்னேரி.



சார் தபால்!

✉ பொன்ராசனின் 1997 பிறந்தது பாடல் மிக அருமையாக இருந்தது. இந்த நூற்றாண்டின் அறிவியல் சாதனைகளின் வியப்பு, வரப்போகும் நூற்றாண்டில் என்னவெல்லாம் நிகழுமோ என்ற மலைப்பு எல்லாம் மிக அழகாகக் கூறப்பட்டுள்ள அருமையான படைப்பு! -வலிவலம் இரா. தேசிகன், மதுராந்தகம் எல்லப்பா திருமாறன், குடந்தை. ராமநாராயணன், மணியாச்சி தாமு. சிதம்பரநாதன், மாங்காடு எஸ். பாலாஜி, திருமலை கு. பவனவல்லி, திருச்சுழி சுந்தர் அழகேசன், குன்றக்குடி இரா. விஜயலட்சுமி, விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ தொடர்கதையில் பரபரப்பு இல்லை எனினும் எதிர்பார்ப்பு உள்ளது. மார்க்கரெட் அம்மையார் மறக்க முடியாத குணசித்திரமாக மனத்தில் இடம்பிடிக்க ஆரம்பித்து விட்டார். - பொன்.மலை கி. திருவேங்கடம், பவானி சங்கர் வி. பசவப்பன், பருகூர் ஏ. லத்தீப், விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ எல்லோரும் முதலில் படிப்பது சின்ன பாபுவின் திக்திக்திக்கைத்தான்! என்னமாய் வாழைப்பழத்தில் ஊசியைச் சொருகுவது போல் அறிவியல் நோக்கை உணர்த்தி வைக்கிறார்! பாராட்டத்தக்க முயற்சி! - விருதுநகர் பால்பாண்டியன், திருமங்கலம் வி. பொன்னப்பன், வேலங்குடி கி. லாவண்யா, சித்தம்பாளையம் எ. அலமேலு, குமாரவயல் கோ. சம்பந்தப்பா, சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், திருவாரூர் க. பழனிமுருகேசன்.

✉ 'பயப்படுத்திப் பாஸ்' எழுதியவரின் பெயரை வெளியிடலாகாதா? அருமை போங்கள்! - அரக்கோணம் என். முத்தலீப், முட்டுக்காடு. து. நம்பி, மணலி எஸ். முத்துராக்கு, தரங்கை. மா. சாரதா, மேலப்பாதி எஸ். ராஜலட்சுமி.

✉ பரிசு பெற்ற சிறுகதையான 'எனக்கு வேண்டாம்!' எங்களைப் போன்ற மாணவ சமுதாயத்தின் உள்ளப் போராட்டத்தைப் படம் பிடித்துக்காட்டியுள்ளது. ஆசிரியரின் தீர்வும் சற்றும் எதிர்பாராதது. பணம் கொடுத்து சீட் வாங்கும் பணக்காரர்கள் எல்லாம் சிவாவைப் போல் மனம் திருந்திவிட்டால் சமுதாயப் புரட்சியே நடக்கும். உண்மையாகவே அப்படி ஒரு காலம் வருமா? - சென்னிமலை. வி. துகாராம், சின்னதாராபுரம் ஏ. கிருஷ்ணப்பா, திருத்தணி ஆண்டியப்பன், திருநெல்வேலி மு. சாரதாமணி, ராணிப்பேட்டை அ. அப்துல் அஜீஸ், சைதை ஜி.கே. வெண்ணிலா, விருத்தாசலம் வி. பிரபாகர், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், கச்சனம் எஸ். இராமகிருஷ்ணன், திருச்சுழி சுந்தர் அழகேசன்.


✉ குழந்தைக் கவிஞரின் மனைவி திருமதி வள்ளியம்மையின் சிறப்பை மிகச் சிறப்பாக எழுதியிருந்தீர்கள். பழகியவர்கள் மனத்தில் என்ன இருந்ததோ அது அப்படியே கட்டுரையில் வெளிவந்திருந்தது! - பெங்களூர் அழ. பொன்னுசாமி, குன்றக்குடி விஜயா பெரியசாமி, கொத்தமங்கலம் அரு. பழனியப்பன், காரைக்குடி மதுரம் வேணுகோபால், மதுரை. சுப்பு பவானி, காயக்காடு ப. ராமகிருஷ்ணன், தேனி முருகேசன், சென்னை - 1 கே. ஆர். உதயகுமார்.

✉ பெற்றோரைப் பேணிக் காப்பதன் அவசியத்தை மிக அழகாக உணர்த்தியது வல்லபனின் வான்யாத்திரை படக்கதை. மனத்தில் பசுமையாகப் பதிந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நெகிழ வைத்து விட்டது!- திண்டிவனம் அரு. இராமையன், புலியூர் து. மதிவாணன், சிதம்பரம் வா. பெரியநாயகி, பாளை வி. பெர்னாண்டஸ், சாத்தூர் ஏ. லட்சுமி நாராயணன், மேட்டுப்பாளையம் கு. சித்திரவல்லி, கோல்டன்ராக் ச. தேம்பவாணி, அத்திராயன்பட்டி கு. சுக்கூர், மேலப்பாதி எஸ். நாகராஜன், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், சைதை ஜி.கே. வெண்ணிலா, விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ 'ஆழி'க்கு என்று எங்கிருந்துதான் தகவல்கள் கிடைக்கின்றனவோ! பறத்தலைத் தான் குறிப்பிடுகிறேன். பாம்புத்தாரா அதற்கு மேல்! - பாலூர் கி. மதனகோபால், செங்குன்றம் வெ. தீரப்பன், திருவரங்கம். எம்: கோதைநாயகி, அருள்கொண்டான் பள்ளி வி. பூமணி, திருவண்ணாமலை ஆர். வானதிராமு, கச்சன்வயல் என். அன்பரசன், மேலப்பாதி என். ராஜி, நெய்வேலி எஸ். ஸ்ரீகாந்த்.

திக்...திக்...திக் கதைகள்!

பயமின்றிப் படியுங்கள்



தாடகை ஆடிய தாயம்!

சின்னபாபு

சாலைக்குக் குறுக்கே போடப் பட்டிருந்த தடுப்புக்கு அருகில் நின்றிருந்த போலீஸ்காரர் உறுதியாகக் கூறினார்.

''இது சாதாரணமான தரைப்பாலம் இல்லை தம்பி. மலைச்சரிவில் இருந்து இங்கேதான் தாடகா நதி சம தரைக்கு இறங்குது. அதனால், பயங்கரமான வேகம் இருக்கும். ஒரு யானையையே கூடப் புரட்டி உருட்டிக்கிட்டுப் போயிடும். போன வாரம், இப்படித் தான், சொல்ல சொல்லக் கேட்காமல் ஒரு செங்கல் லாரிக்காரன் தரைப் பாலத்துல லாரியை ஓட்டிக்கிட்டுப் போனான். பாதிப் பாலத்தில், லாரியையே புரட்டித் தலைகீழாத் திருப்பி அடிச்சிட்டுப் போயிடுச்சு வெள்ளம். இதுக்கு ஜனங்க வைச்சிருக்கிற பேரே பலி வாங்கிப் பாலம்தான். லாரி பலியானதுக்கு அப்புறம்தான் அரசாங்கம் இப்படித் தடுப்பு அடைப்புப் போட்டிருக்கு''

குரலில் பணிவை வரவழைத்துக் கொண்ட பொன்முடி போலீஸ் காரரிடம் குழைந்தான்.

''ஐயா, எப்படியாவது இருட்டுவதற்குள் நாங்க ரெண்டு பேரும் பலிப்பாளையத்துக்குப் போயாகணும். இந்த தரைப் பாலத்தைத் தவிர வேற வழி ஏதாவது இருக்கா?''

''அட, பலிப்பாளையத்துக்குப் போக வேண்டியவங்களா நீங்க? என்ன காரியமா போறீங்க?''

''அங்க, சபாபதின்னு எங்க நண்பன் ஒருத்தன் இருக்கான். அவங்க அப்பாகூட அங்கேதான் கிளை போஸ்ட் மாஸ்டா. இன்னிக்கி அவங்க குல தெய்வத்துக்கு பூஜை போடறாங்களாம். அதுக்கு வரச் சொல்லி இருக்கான். நாங்க போயாகணும். அதுக்கு ஒரு வழி சொல்லுங்க?'' என்று கெஞ்சினான் செல்லமணி.

''தம்பி ரொம்ப நெருங்கி வந்


துட்டீங்க. எனக்கும் சொந்த ஊர் பலிப் பாளையம் தான். உங்க நண்பன் சபாபதி யோட அப்பா, எனக்குப் பெரியப்பா முறை. எங்களுக்கும் குலதெய்வம் தாடகா தேவிதான்" என்று சிரித்தார் போலீஸ் காரர்.

"நெருங்கிட்டீங்கங்கறது மகிழ்ச்சிதான். அது அதிகமாகணும்னா, எங்களுக்கு ஒரு வழி சொல்லுங்க. இந்த வெள்ளம் வடிய இன்னும் ஒரு வாரம் ஆகும்போல இருக்கே?"

"தம்பி, பலிப்பாளையத்து லேருந்து நீங்க தாடகா தேவி பூஜைக்குத் தானே போகப் போறீங்க:"

"ஆமாங்க...!"

"பூஜை நடக்கும் கோவில் அடர்ந்த காட்டுக்கு நடுவில் தாடகைக் கோட்டைங்கற இடத்துல இருக்கு. பலிபாளை யத்துல இருந்து எல்லோரும் மாட்டு வண்டிலதான் வரு



வாங்க. மாட்டு வண்டிங்களைக்கூட யானை அடிங்கற இடத்துல நிறுத்திடுவாங்க. அங்கிருந்து கோட்டைக் கோவிலுக்கு கால் நடையா இரண்டு கிலோ மீட்டர் நடக்கணும். பூஜை இரவு பன்னிரண்டு மணிக்குமேல்தான். பூஜை முடிய இரண்டு மணி ஆயிடும். கோட்டைக் கோவிலில் யாரும் தங்கக் கூடாது. மறுபடி நடந்து யானைஅடிக்கு வந்து மாட்டு வண்டியைப் புடிச்சு, வீடு வரும்போது விடிந்துவிடும்'' என்றார் போலீஸ்காரர்.


"ஐயா, இதையெல்லாம் எங்க நண்பன் சபாபதி ஏற்கனவே சொல்லியிருக்கான். எப்படியாவது நாங்க பூஜைல கலந்துக்கணும். அதுக்காகத்தான் வந்திருக்கிறோம். இந்த எதிர்பாரா வெள்ளமும் மழையும் கெடுத்திடுச்சு. பூஜை நேரத்துக்கு நாங்க அங்கு இருக்க நீங்க ஏதாவது உதவ முடியுமா?"


"கண்டிப்பா முடியும். வந்த வழியே திரும்பிப் போங்க. கரும்புக்கரைன்னு ஓர் ஊர் வரும். போர்டே இருக்கும். அதுல இடது பக்க சாலை, நீங்க வந்த வழி. அதுல திரும்பாம, வலது பக்க சாலைல போங்க. தானகி கட்டில், புலிவமுக்கி, மலை உருட்டின்னு ஏழு ஊர்கள் வரும். அதையெல்லாம் தாண்டிப் போனால் ஆடுமுட்டின்னு ஒரு ஊர். அதில் உயரத்துல இரண்டு சரிவையும் இணைக்கும் ஒரு மூங்கில் மேம்பாலம் இருக்கு. அதுல போனால், நேராக யானையடிதான். அங்கே போனால், கண்டிப்பா பூஜைக்குப் போறவங்களை சந்திக்கலாம். ஆனால் முப்பது கிலோ மீட்டர் காட்டுவழிப் பயணம். முடியுமா உங்களால? வண்டி தாங்குமா? பெட்ரோல் இருக்கா?"

பொன்முடி அசந்து போய் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

"கலங்காதே தம்பி. நான்கூட தாடகா தேவி பூஜைக்குப் போக வேண்டியவன் தான்."

பொன்முடி உற்சாகத்துடன்





''20-அடி உயரத்துல, மெல்லிக கம்பி மேலே ஒருத்தன் நடக்கப் போறானாம்டா... எவ்வளவு கஷ்டமான காரியம் அது?''

''பரிட்சையைவிட அது ஒண்ணும் பெரிய காரியம் இல்லைடா!''

—சீர்காழி வி.ரேவதி

நிமிர்ந்து உட்கார்ந்தான். செல்லமணி போலீஸ்காரரின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"தம்பிங்களா... நீங்க என்ன கேட்கப் போறீங்கன்னு புரியுது." என்று சிரித்த போலீஸ்காரர், "ஒன்பது மணிக்குமேல மேல் கேம்ப்பில் இருந்து தபால் எடுத்துக் கொண்டு வரும் ஜீப் இப்படித்தான் வரும். யானைஅடி வழியாகத்தான் போகும். அதுல இடம் இருந்தா நாம்ப மூணு பேருமே போகலாம்" என்றார்.

பூஜையைப் பார்க்க தாடகைக் கோட்டைக்குப் போக ஏதோ ஒரு வழி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிந்தவுடன், பொன்முடிக்கும் செல்லமணிக்கும் பசி எடுக்க ஆரம்பித்து விட்டது!

பையிலிருந்த பிளாஸ்கையும், ஜாம் தடவிய ரொட்டியையும் எடுத்து ஜமுக்கான விரிப்பில் வைத்தான் பொன்முடி. செல்லமணி தண்ணீரை எடுத்து வைத்தான்.

"ஐயா, நீங்களும் வாங்க" என்று இருவரும் போலீஸ்காரரை அழைத்தனர். பிகு பண்ணாமல் அவரும் வந்து அமர்ந்து கொண்டார். மூவரும் ரொட்டியைக் காலி பண்ணுவதில் மும்முரமாக இறங்கினர்.

தற்செயலாக பொன்முடியின் 'கிட்'டில் இருந்த பிளாஷ் காமிராவைக் கவனித்து விட்ட போலீஸ்காரர், "தம்பி, கோவிலுக்குள் புகைப்படம் எடுக்க அனுமதிக்க மாட்டாங்களே?" என்றார்.

"என்னது! ஒரே கட்டுப்பட்டித்தனமா இருக்கே!" என்றான் பொன்முடி.

"இதுக்கு மேல் கட்டுப்பட்டித்தனம் எல்லாம்கூட இருக்கு. கோவிலுக்குள் மின் விளக்குக் கிடையாது. பூஜை மேடையில்கூட நெய் விளக்குத்தான்"

"ஒரே பத்தாம் பசலித்தனம்!"

"ஆனால் இத்தனை இருந்தும் தாடகா தேவி சக்தி மிக்க தெய்வம் தம்பி. இங்கே ஊர்ல அக்கம் பக்க கிராம மக்களுக்கு தாடகா தேவிதான் குல தெய்வம்" என்றார் போலீஸ்காரர்.

"தாடகா தேவிங்கற பெயரே புதுமையா இருக்கே!"

"இராமாயணத்தில் வரும் அரக்கி தாடகைக்கும் இந்தத் தாடகா தேவிக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?"

போலீஸ்காரர் சிரித்தார்.

"கோவில்ல போய் அரக்கி கிரக்கின்னு சொன்னே... வெட்டிப் போட்டுடுவாங்க! ஏன்னா, அந்த இராமாயணத் தாடகையே தான் இந்தத் தாடகா தேவி. இந்த மலைக் காட்டுப் பகுதிக்குப் பெயரே தாடகா வனம்தான். தாடகை ஆட்சி செலுத்திய இடம்தான் தாடகைக் கோட்டை. தேவி, யானையை அடித்துச் சாப்பிட்ட இடம்தான் யானை அடி"

"தாடகையைத் தான் விசுவாமித்திரர் தலைமையில் இராமரும் இலட்சுமணரும் கொன்று விட்டார்களே?" என்று கேட்டான் பொன்முடி.

"தாடகை அரக்கி என்றாலும் மந்திர சக்தி மிக்கவள். இறந்து மறைந்தாலும், தாடகை இன்னமும் இந்த இடங்களில் வாழ்வதாக இங்குள்ள மக்கள் நம்புகிறார்கள். தாடகை ஆண்ட கோட்டையில் பாதாள குகைகளில் தாடகாதேவிக்கு ஒரு கோயிலே இருக்கு. ஒவ்வொரு அமாவாசை இரவும் தேவிக்கு நள்ளிரவுக்கு மேல் பூஜை நடக்கும். அந்த பூஜையை ஏற்று தாடகா தேவி தாயக்கட்டம் ஆடுவாள்."

"நீங்கள் பார்த்திருக்கிறீர்களா சார்?"

"ஆகா! இந்த இரண்டு கண்களாலும் பார்த்திருக்கிறேன்: பார்க்கப் பயமா இருக்கும்" என்றார் போலீஸ்காரர்.

"அதை நீங்கள் நம்புகிறீர்களா?"

"நம்பறேன் தம்பி. நான் மட்டும் என்ன, இன்றைக்கு பூஜையைக் காண வந்திருக்கும் நீங்கள்கூட அதைப் பார்க்கத்தான் போகிறீர்கள்; நம்பத்தான் போகிறீர்கள். வாழ்க்கை முழுவதும் மறக்க முடியாத பயங்கரமான அனுபவம் அது!" என்றார் போலீஸ்காரர்.


திகிலோடு அவரை நோக்கினர் பொன்முடியும் செல்லமணியும்.

(அடுத்த இதழில் முடியும்)

என்ன ஒற்றுமை? -போட்டி


• ஆபிரகாம் லிங்கன்


• பரமஹம்சர்


• ஜார்ஜ் வாஷிங்டன்


• சரோஜினி நாயுடு


• மொரார்ஜி தேசாய்

இங்கே உலகப் புகழ் பெற்ற சிலர் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் தொண்டாற்றிப் பெருமை பெற்றவர்கள். பல நாட்டைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் இவர்களிடையே ஓர் ஒற்றுமை இருக்கிறது. இது என்ன என்பதைக் கண்டுபிடித்து, எழுதுங்கள். முடிவு தேதி 28.2.97. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதினால் பரிசு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் கண்டிப்பாகத் தங்கள் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். முகவரிக் கூப்பன் இல்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா.

ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் முதல் கதை

மன்னிப்பாயா முகுந்த்?

அ. கங்காதரன்

முகுந்த் மிகுந்த கோபத்தில் இருந்தான். அந்தக் கோபத்தில் ஏமாற்றமும் கலந்திருந்ததால் கிட்டத்தட்ட அவன் அழும் நிலையிலிருந்தான். கையிலிருந்த வினாத்தாளைக் கசக்கித் தூக்கி எறிந்தான்.

பரீட்சை மண்டபத்திலிருந்து மகிழ்ச்சியுடன் வெளியே வந்த ராகேஷ், முகுந்தைப் பார்த்ததும் திகைத்து நின்றான்.

"என்னடா முகுந்த்! என்னாச்சு?" - ராகேஷ் தான் கேட்டான்.

ராகேஷை எரித்து விடுவது போல பார்த்தான் முகுந்த். பின், ஒன்றும் பேசாமல் வெறுப்புடன் மரத்தில் சாய்ந்து கொண்டான்.

நடந்தது இதுதான்.

ஒன்பதாம் வகுப்பு வரை நன்றாகப் படித்துக் கொண்டு வந்த முகுந்த், பத்தாம் வகுப்பு வந்ததும் அதிகமாகப் பொழுதை வெட்டியாகப் போக்கிக் கொண்டு, படிப்பில் கவனத்தைச் சிதற விட்டான். ஆரம்பத்தில் படிக்காமல் இருந்ததால் காலாண்டுத் தேர்வு வந்ததும் எங்கே பெயில் மார்க் வாங்கி விடுவோமோ என்ற பயம் அவனைப் பிடித்துக் கொண்டது. உயிர் நண்பன் ராகேஷைக் காப்பியடிக்கக் காட்டி உதவும்படி கேட்டுப் பார்த்தான். ராகேஷ் மறுத்து விட்டான். முகுந்த் விடவில்லை.

"ராகேஷ்! இந்த காலாண்டுல மட்டும் எனக்குக் காட்டுடா. படிக்காதது தவறு தான். இதுவரை உன்னிடம் எப்பவாவது இப்படிக் கேட்டிருக்கிறேனா? இந்த ஒருமுறை மட்டும் எனக்கு உதவு. காலாண்டுக்கப்புறம் நல்லா படிச்சு எழுதறேன்டா! ப்ளீஸ்" என்று அவன் அழாத குறையாகக் கெஞ்சினான்.

நண்பனுக்கு உதவ ராகேஷ் துடித்தாலும், அது தவறான பாதையில் போகத் துடிக்கும் அவனுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்து விடும் என்று அவன் கருதினான். அதோடு அவனைத் திருத்த வேண்டியது தன் பொறுப்பு என்றும் அவன் உறுதியாக எண்ணினான்.

"என்னை மன்னிச்சிடு முகுந்த்! உண்மையான நட்பு என்பது நல்ல செயல்களுக்கு உதவி பண்ணுவதாக இருக்கணுமே தவிர தவறுக்குத் துணை போவதாக ஆகிவிடக் கூடாது" என்றான் ராகேஷ் உறுதியுடன்.


"அதான் காலாண்டுக்குப்புறம் நல்லாப் படிப்பேன்னு சொல்லிட்டேனேடா? இந்த ஒருதடவை மட்டும்தான்"

"நீ நினைப்பதுபோல நடக்காது முகுந்த். ஏன்னா ஒருமுறை தவறு செய்து பயனைக் கண்டுவிட்டால், பிறகு அதே தவறைத்தான் செய்யத் தோன்றும்."

இறுதியில் முகுந்த் கோபம் பொங்கக் கேட்டான்.

"நல்லாப் படிக்கிற திமிர்ல பேசுற ராகேஷ். கடைசியா கேட்கிறேன். உன்னால முடியுமா, முடியாதா?"

"முடியாது முகுந்த். மன்னித்து விடு."




ராகேஷ் மேலும் அங்கே நிற்காமல் சென்று விட்டான். முகுந்த் ஏமாற்றமடைந்தான். "பரவாயில்லை. இன்று இரவெல்லாம் விழித்தாலும், சரி. நன்றாகப் படித்து முதல் மார்க் வாங்கி, இந்தத் திமிர் பிடித்த ராகேஷின் கர்வத்தை அடக்க வேண்டும் என்ற முடிவுடன் வீட்டுக்கு விரைந்தான் அவன்.

ஆனால், அவன் எண்ணியதுபோல், நடந்த பாடங்களின் அளவு எளிதாக இல்லை. எல்லாம் மலைபோல் இருந்தன. திடுதிப்பென படிக்க உட்கார்ந்ததால் எதுவுமே புரியவில்லை. அழுது கொண்டேயிருந்தவன், பாஸ் பண்ணத் தேவையான நாற்பது மார்க்குகள் வாங்கும் அளவுக்கு மட்டும் படித்துவிட்டுத் தன்னையறியாமல் தூங்கி விட்டான்.

அடுத்தநாள் முதல் தேர்வை எழுதிவிட்டு வந்த நண்பர்கள் இருவரும் வழியில் சந்தித்துக் கொண்டனர்.

"நீயெல்லாம் நண்பனே இல்லடா" என்று வெறுப்பை உமிழ்ந்தான் முகுந்த்.

ராகேஷ் மௌனமாக நின்றான். வகுப்பிலேயே முதல் மாணவனாகத் திகழும் ராகேஷ் ஒழுக்கமான மாணவன் என்றும் பெயர் எடுத்திருந்தான். எனவே காப்பியடிக்கத்தான் உதவாதது நல்ல செயலே; நியாயமானதே என்றளவில் அவன் இருந்தான். இப்போது என்ன சொன்னாலும் முகுந்த் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருக்க மாட்டான் என்று முடிவு கட்டிய ராகேஷ் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.



நண்பர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த மேகநாதன் மெல்ல முகுந்தின் அருகில் வந்தான். மேகநாதன் வகுப்பில் மூன்றாவது ரேங்க் வாங்குபவன். இரண்டாம் இடத்தை சென்ற வருஷம் வரை முகுந்த்தான் வாங்கிக் கொண்டிருந்தான். ராகேஷ்தான் முதல் ரேங்க்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளியில் இரண்டாவது மாணவனாக நிச்சயம் வந்துவிட வேண்டும் என மேகநாதன் நினைத்துக் கொண்டிருந்தான். ராகேஷைவிட அதிக மதிப்பெண்கள் வாங்குவது அவனைப் பொறுத்தவரை கண்டிப்பாக முடியாத செயல். அதனால் இரண்டாவது இடத்தையாவது உறுதியாகக் கைப்பற்றினால் போதும் என்று அவன் ஏங்கிக் கொண்டிருந்தான்.


நடந்ததைக் கவனித்த மேகநாதனின் உள்ளம் குறுகுறுக்க ஆரம்பித்தது. அவனுக்கு இந்த நண்பர்களின் பிளவு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. அவனுக்கு இது அருமையான வாய்ப்பு ஆயிற்றே!


"கவலைப்படாதே முகுந்த்! நான் உனக்கு உதவி பண்ணுகிறேன்'' என்றான் மேகநாதன்.

"உனக்கு எப்படி...?'' என்று திகைப்புடன் அவனைப் பார்த்தான் முகுந்த்.

"எனக்குத் தெரியாமலா? பரவாயில்லை. ஆபத்துக்கு உதவுபவன்தான் உண்மையான நண்பன். நானே உனக்குக் காட்டுகிறேன்."

"இந்த ஒருமுறை மட்டும்தான்.'' என்று தயங்கினான் முகுந்த்.





"கடிதத்துல மாமா என்னடா எழுதியிருக்கார்?"

"தீபாவளி பலகாரம் தீர்ந்திடுச்சா, வரலாமான்னுகேட்டு எழுதியிருக்கார்."

— மு.தனகோபாலன்

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

"சரி" என்ற மேகநாதன், விஷமப்புன்னகையுடன் முகுந்த்தின் தோள்களில் கைபோட்டுக் கொண்டு சென்றான். இதை அறிந்த ராகேஷின் மனம் பதைபதைத்தது.

காலாண்டுத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மேகநாதனுக்குச் சமமாக முகுந்த்தும் மதிப்பெண்கள் பெற்றிருந்தான். முகுந்த் கர்வத்தோடு ராகேஷைப் பார்த்தான்.

இடைவேளையின்போது, முகுந்த் மேகநாதனுடன் ராகேஷிடம் வந்தான்.

"நீ இல்லாவிட்டால் என்னால் மார்க் வாங்க முடியாது என நினைத்தாயா? எனக்கும் உண்மையான நண்பர்கள் இருக்கிறார்கள்" என்றான் பெருமையுடன்.

ராகேஷ் மேகநாதனைப் பார்த்தான். வேறு எதையோ பார்ப்பதுபோல பாவனை செய்தான் மேகநாதன்.

"மகிழ்ச்சி முகுந்த். ஆனால் நீ வாங்கின மார்க் உண்மையானதுதானா என்பது உனக்கே தெரியும்."

ராகேஷ் கூறியது காதில் விழாததுபோல மௌனமாக நின்றிருந்தான் முகுந்த்.

"முகுந்த்! சொல்வதைக் கேள். நீ செய்யறது தப்பு. ஒருதடவை காப்பியடிச்சு எழுதினா பிறகு படிக்கும் எண்ணமே வராது."

ராகேஷ்தான் புத்திமதி கூறினான்.

"நீ வாடா! அவன் ஏதோ காந்தி மாதிரி பேசறான். இதுல மட்டுமில்ல பப்ளிக் எக்ஸாமில வேணாலும் நான் உனக்குக் காப்பியடிக்கக் காட்டுவேன்."– மேகநாதன் முகுந்த்திடம் சொன்னான்.

இருவரும் சிரித்தபடி நகர்ந்தனர்.

ராகேஷ் மனம் ஒடிந்து போனான். தன் கண் எதிரிலேயே நண்பன் தவறு செய்தும் தன்னால் திருத்த முடியவில்லையே என்பதை நினைக்க நினைக்க அவன் தவித்தான்.

மேகநாதனின் திட்டம் இப்பொழுது ஓரளவுக்கு அவனுக்குப் புரிந்து விட்டது. இதை எத்தனை முறை எடுத்துக் கூறினாலும் முகுந்த் கேட்க மறுப்பான் என்பதையும் அவன் புரிந்து கொண்டான். எப்படியோ, மேகநாதனின் திட்ட மிட்டபடி ராகேஷ் - முகுந்த் நட்பு முறிந்தது!

அடுத்தடுத்து நடந்த தேர்வுகளிலெல்லாம் மேகநாதன் முகுந்த்திற்கு தாராளமாகவே காப்பியடிக்கக் காட்டினான். எனவே முகுந்த் இரண்டு-மூன்று மதிப்பெண்களில் மேகநாதனைக்கூட முந்திக் கொண்டுதான் இருந்தான்.

இருவரும் திட்டமிட்டபடி பாடங்களைப் பிரித்துக் கொண்டு, ஒரு பாதியை மேகநாதனும், மறுபாதியை முகுந்த்தும் படித்தனர். பரீட்சையில் இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

ஆனால், உண்மையில் மேகநாதன் முழுப் பாடங்களையும் படித்து விடுவான். தேர்வில் முகுந்த்திற்கு சந்தேகம் வராதிருக்க அவனைப் பார்த்து எழுதுவதுபோல் பாசாங்கு செய்தான்.

அவனுடைய திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வந்தது.

மேகநாதனும் முகுந்த்தும் மிகவும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். ஆவலோடு எதிர்பார்த்திருந்த பொதுத் தேர்வு நெருங்கியது.

'அதிர்ஷ்டவசமாக' மேகநாதன் - முகுந்த் இவர்களது பரீட்சை எண்கள் அடுத்தடுத்து வந்தன. இருவருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி. முன்போலவே பாதி-பாதி பாடங்களைப் படிக்கலாமென மேகநாதன் கூறியபோது, முகுந்த் முதலில் பயந்தான். இது விபரீதமாகும் என்று தயங்கினான்.

ஆனால் மேகநாதன் பல காரணங்களைக் கூறி ஒருவழியாக முகுந்த்தை சம்மதிக்க வைத்தான். மேகநாதனின் மீதிருந்த உறுதியான நம்பிக்கையில் முகுந்த்தும் இசைந்தான்.

ராகேஷிற்கு இந்த விபரம் தெரியாது. தெரிந்திருந்தால் முகுந்த்தின் அப்பாவிடம் சொல்லியாவது அவனைப் படிக்கச் செய்திருப்பான்.

பரீட்சையின் முதல் நாள். அன்று தமிழ் முதல் தாள். ராகேஷ் "வாழ்த்துக்கள்" என்று கூறியபோதுகூட முகுந்த் முகம் கொடுத்துப் பேசாமல் தேர்வு மண்டபத்திலிருந்து சென்று விட்டான்.

பரீட்சை துவங்கி எல்லோரும் எழுத ஆரம்பித்தனர். முகுந்த், தான் படித்த பகுதியிலிருந்து வந்த வினாக்களை எல்லாம் முதலில் எழுதி விட்டு, மேகநாதனின் உதவிக்காகக் காத்திருந்தான்.

சூப்பரவைஸர் கொஞ்சம் திரும்பிய போது மெதுவாக மேகநாதனைக் கூப்பிட்டான்.

மேகநாதன் திரும்பவே இல்லை!

அது கேட்டிருக்காதோ என ஐயமுற்று, பெஞ்சுக்கு அடியில் காலை நீட்டி மேகநாதனின் கால்களில் இடித்தான். அப்படியும் அவன் திரும்பவில்லை.

திடுக்கிட்டுப் போனான் முகுந்த்.

எத்தனையோ முயன்றும், மேகநாதன் மறந்தும்கூட முகுந்த் பக்கம் திரும்பவே இல்லை. கண்ணீர் நெஞ்சையடைக்க என்ன செய்வதென்று புரியாமல் திகைத்துப் போனான் முகுந்த். நல்லவேளையாக தமிழ்ப்புத்தகத்தை அடிக்கடி வாசித்துப் பழகியதால் ஒப்பேற்றி மீதமுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதினான்.

பரீட்சை மண்டபத்தை விட்டு இடிந்து போய் வெளியே வந்தான் முகுந்த். மேகநாதன் வெளியில் வந்தும் அவனைக் கவனிக்காதது போலச் சென்று விட்டான். அவனது திட்டம் அப்போதுதான் முகுந்த்துக்குப் புரிய ஆரம்பித்தது. ஆனால் இனி என்ன செய்வது? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்ய முடியுமா?

முகுந்த்தின் நிலையை ராகேஷ் நன்கு அறிந்து கொண்டான். அவனுக்கு முதலில் முகுந்த் மீது கோபம் வந்தாலும், பரிதாபமே மேலோங்கி நின்றது.

"என்னை மன்னிப்பாயா முகுந்த்!"

"நீதான் என்னை மன்னிக்க வேண்டும ராகேஷ். நீ உண்மை நண்பன். அதனால்தான் நல்ல வழியில் செல்ல என்னைத் தூண்டி, தவறான பாதையில் நடக்க உதவ மறுத்தாய். ஆனால், நான்தான் உன்னைப் புரிந்து கொள்ளத் தவறியவன். அதன் பயனை அனுபவிக்கிறேன். நீதான் என்னை மன்னிக்க வேண்டும். அன்று கொஞ்சம் அளவு பாடங்கள் இருந்த போதே என்னால் படிக்க முடியவில்லை. இப்போது பாதிப் பாடங்களை புதுசாக எப்படிப் படிக்கப் போகிறேன்" என்று கூறிவிட்டு அழுதான். முகுந்த்.

ராகேஷ் நண்பனைத் தேற்றினான்.

"பயப்படாதே முகுந்த். இன்றிலிருந்து பரீட்சை முடியும்வரை தினமும் நீ என் வீட்டிலேயே தங்கி விடு. நாம் இருவரும் சேர்ந்தே படிப்போம். உனக்கு நான் கண்டிப்பாக உதவி செய்வேன். உன்னைத் தயாராக்குவது என் பொறுப்பு. தூக்கத்தை மட்டும் மறந்து விடு. உன் தவறை உணர்ந்து விட்டாய். உன்னால் கண்டிப்பாக முடியும்."

வலுவிழந்த முகுந்த்தின் உள்ளத்திற்கு ராகேஷ் கூறியது நம்பிக்கை அளிப்பதாக இருந்தது.

"நீதான் உண்மையான நண்பன்" என்றபடி ராகேஷின் கையைப் பிடித்தான் முகுந்த்.

பரீட்சை முடிவுகள் வந்துவிட்டன. முதலாவதாக ராகேஷூம், இரண்டாவது மூன்றாவதாக முகுந்த், மேகநாதனும் வந்திருந்தனர். தன் திட்டம் பலிக்காமல் போனதில் மேகநாதனுக்கு வருத்தம் என்றாலும், குறுக்கு வழியில் முன்னேற முடியாது என்ற பாடத்தை அவனும் கற்றுக் கொண்டான்.

ராகேஷ், மாவட்டத்திலேயே முதல் மாணவனாக வந்திருந்தான். எனவே, மாவட்டத் தலைநகரில் நாளை மறுநாள் ஆட்சித் தலைவர் தரப் போகும் பரிசைப் பெற ராகேஷூடன் முகுந்தும் செல்ல இருக்கிறான்.

பரிசு பெறும் ராகேஷைவிட, அதிகம் மகிழ்வது முகுந்த்தான் என்று எல்லோரும் சொல்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?



''பொண்ணு பார்க்கப் போயிருந்தியே, ஏன் வேண்டாம்னுட்டியாம்?''

''வால் ரொம்ப குட்டையா இருக்கு!''

– சீர்காழி வி.ரேவதி

மன்னித்து விடு!



குடியரசுத் தலைவரின் மாளிகைக்கு ராஷ்டிரப்தி பவன் என்று பெயர். அதில் அசோகா ஹால் என்று ஓர் மண்டபம். குடியரசுத் தலைவருககு வரும் பரிசுப் பொருள்களை அங்குதான் அழகாக அலங்கரித்து வைத்திருப்பார்கள்.

அப்படிக் காட்சியாக இருந்த பொருள்களில் ஓர் அழகிய சின்னஞ்சிறிய பேனாவும் இருந்தது. அது சாதாரணப் பேனா அல்ல. சலவைக்கல் போன்ற உயர்ரகக் கல்லில் குடைந்து செய்யப் பட்டது. வெளிநாடு ஏதோ ஒன்றுக்கு குடியரசுத் தலைவர் விஜயம் செய்தபோது வழங்கப்பட்ட அற்புதமான கலைப்பொருள் அது.

அடிக்கடி அந்தக் காட்சிப்பொருள் அறையைச் சுத்தம் செய்வார்கள். அப்படி ஒருமுறை சுத்தம் செய்வதற்காகக் கையில் பேனாவை எடுத்த பணியாள் ஒருவன் அதைக் கை தவறிக் கீழே போட்டு உடைத்து விட்டான்!

விஷயம் குடியரசுத்தலைவருக்குப் போனது. "அரசின் பொருள் களை கவனக் குறைவாகக் கையாண்டு உடைப்பதற்காகவா சம்பளம் கொடுத்து அரசாங்கம் உன்னை இங்கு வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறது? உனக்கு இனி இங்கு வேலை இல்லை. போ வெளியே..." என்று படபடவென்று பணியாளரிடம் பேசி விட்டார் குடியரசுத் தலைவர்.

குடியரசுத் தலைவர் கோபத்தில் பணியாளரை விரட்டி விட்டாரே தவிர, அடுத்தகணம் அவர் அமைதியிழந்து விட்டார். காந்தியவாதியான அவரால், தான் அப்படி நடந்து கொண்டதை மன்னிக்கவே முடியவில்லை. மனம் வருந்தினார். "அந்தப் பணியாளரைத் தேடி அழைத்து வாருங்கள்..." என்று ஆட்களை அனுப்பினார்.

பணியாளரைக் கண்டதும், குடியரசுத் தலைவரின் கண்களில் நீர் ததும்பியது. அவனருகில் போய், ஆறுதலுடன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தவாறு சொன்னார். "பாவம்' நீ என்ன செய்வாய்...? கை தவறி விழுந்து விட்டது. உனக்குப் பதில் நானேகூட அதைக் கீழே போட்டிருந்தாலும், அது உடைந்துதானே போயிருக்கும்? இது புரியாமல் கோபத்தில் கூச்சலிட்டு விட்டேன். மன்னித்து விடு..." என்றார்.

அடுத்த நிமிடம் அந்தப் பணியாள், அழுதுகொண்டே, அவர் காலடியில் விழுந்து விட்டான். அவர், அவனைத் தூக்கி நிறுத்தி ஆறுதல் கூறினார்.

அத்துடன் அவர் நிற்கவில்லை. "உன்னைக் கடுமையாகப் பேசிதற்கு என்னை மன்னித்தேன் என்று நீ ஒரு வார்த்தை சொல்..." என்று வற்புறுத்தினார்.

பணியாளர் பதறினார்.

"உங்களை நான் மன்னித்தேன் ஐயா...." என்று அவன் சொன்னபிறகுதான், அவரது மனதுக்கு ஆறுதல் கிடைத்தது.

இந்த அளவுக்கு மனிதாபிமானப் பண்புகளுடன் வாழ்ந்த அந்த குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள். எத்தனை பெரிய பதவியில் இருந்தபோதும் மனிதாபிமானப் பண்புகளுடன் ஒரு முழுமையான காந்தியவாதியாக வாழ்ந்து காட்டிய பண்பாளர் அவர்.

—ஜானகி மணாளன்



நோன்பு பலித்தது!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி:1

பள்ளிக்கூடத்திற்கு எதிரே மரத்தடியில் முகமது பேனா விற்றுக் கொண்டிருக்கிறான்.

முகமது: பேனா...பேனா! வண்ண வண்ணப் பேனா. கண்ணைக் கவரும் பேனா! மலிவான விலை; பொலிவான பொருள்!

(உசேன் வருகிறான்)

உசேன்: முகமது! இந்தப் பேனா என்ன விலை?

முகமது: யாரது? ஆமாம், உனக்கு எப்படி என் பேரு தெரிஞ்சது?

உசேன்: நீ தோள்லே மாட்டிக்கிட்டிருக்கிற இந்தப் பேனா பெட்டியிலேதான் உன்பேரை அழகா எழுதி வச்சிருக்கியே!

முகமது: அடேடே! ஆமாம். கெட்டிக்காரன்தான் நீ! உன் பேர் என்ன தம்பி?

உசேன்: (தயங்கியபடி) ம்... வந்து... என் பேர் உனக்கு எதுக்கு? இந்தப் பள்ளிக்கூடத்துலேதான் படிக்கறேன். இப்போ அவசரமா ஒரு பேனா வேணும்!

முகமது: எந்தப் பேனா வேணும்? தொட்டுக் காட்டு! எடுத்துத் தரேன்!

உசேன்: இந்த சிவப்புக்கலர் பேனா வேணும்! என்ன விலை?

முகமது: ரெண்டு ரூபாதான்!

உசேன்: இந்தப் பச்சைபேனா?

முகமது: அதுவும் ரெண்டு ரூபா தான் தம்பி!

உசேன்: சரி, சிவப்புப் பேனாவையே எடுத்துக்கறேன்! நல்லா தொட்டுப் பாத்துக்க... ஒரே ஒரு பேனாவைத்தான் எடுத்துக்கறேன்!

முகமது: சரி தம்பி! நீங்க எல்லாம் படிக்கற பிள்ளைங்க... பார்வை இல்லாத என்னை ஏமாத்துவீங்களா என்ன? அதனாலதான் எனக்குப் பார்வை இல்லேன்னாலும், உங்களை நம்பி இங்கே பேனா வியாபாரம் செய்துக்கிட்டிருக்கேன். உன் குரல் மட்டும் புதுசா தெரிஞ்சது... அதனாலதான் பேரைக் கேட்டேன்!

உசேன்: இந்தா ரெண்டு ரூபாய்! ரெண்டு ஒத்த ரூபாயா கொடுத்திருக்கேன்! (போகிறான்)

(கடலை விற்கும் ராஜா வருகிறான்)

ராஜா: முகமது... முகமது!

முகமது: யாரு ராஜாவா... வா! நானும் உன்னைத்தான் நினைச்சேன். முதல்ல நான் வாங்கினால்தானே நல்லா வியாபாரம் ஆகும்னு சொல்லுவே? இருபது காசுக்குக் கடலை கொடு.

ராஜா: இந்தா கடலை?

முகமது: ராஜா, இன்னிலிருந்து ரமலான் நோன்பு. இந்தக் கடலையை நான் இப்போ சாப்பிட முடியாது. வேற யாருக்காவது கொடுத்திடு. ஒரு ரூபாய்க்கு சில்லறை இருக்கா? (கொடுக்கிறான்)

ராஜா: முகமது! இந்த ரூபாயை யார்கிட்டே வாங்கினே? இது பழங்காலத்து நாணயம். இப்போ செல்லாது!

முகமது: (அதிர்ச்சியுடன்) செல்லாதா?

ராஜா: அதைப்பத்தி அப்புறமா யோசிக்கலாம். நீ மொதல்லே இந்த வேர்க்கடலையை வாங்கிக்க! யாராவது பசின்னு வந்து கேட்டால் நீயே உன் கையால் தந்துடு. நான் வரேன்!

(வஹீதா வருகிறாள்)

வஹீதா: என்ன முகமது ஒரு மாதிரியா இருக்கே?

முகமது: வஹீதா! மொதல்லே இந்த ரெண்டு ஒத்த ரூபாயையும் செல்லுமா செல்லாதான்னு பார்த்துச் சொல்லு?

வஹீதா: ஐயையோ! இப்ப செல்லாதே! யார்கிட்டே வாங்கினே?

முகமது: யாரோ ஒரு தம்பி, பேனாவை வாங்கிக்கிட்டு இந்த இரண்டு ரூபாயைக் கொடுத்துட்டுப்போனான்.

வஹீதா: யாரு, அவன்? பேராவது தெரியுமா உனக்கு?

முகமது: பேரைக் கேட்டேன். சொல்லலே. இந்தப் பள்ளிக்கூடத்துலேதான் படிக்கிறேன்னு சொல் லிட்டுப் போயிட்டான்!

வஹீதா: முகமது, இந்த ரெண்டு ரூபாயிலேயும் மல்லிகைப் பூ வாசனை அடிக்கறது! நீ கவனிச்சியா?

முகமது: ஆமாம்! பேனா வாங்கிக்கிட்டுப் போன தம்பி இங்கே வந்தப்போகூட இதே மல்லிகை வாசனை வந்ததுக்கா! அவன் தொட்டுப் பார்த்த பச்சைப் பேனாவையும் எடுத்துப் பார்.

வஹீதா: முகமது. இதுலயும் மல்லிகை சென்ட் வாசனை! இதை வைச்சே உன்னை ஏமாத்தின அந்தப் பையனைக் கண்டுபிடிச்சிடுவேன். இந்த ரெண்டு ரூபாய்களை நான் எடுத்துக்கறேன்... இதுக்குப் பதிலா இந்த இருபது ரூபாயை வாங்கிக்க!

முகமது: இருபது ரூபாயா! எதுக்குக்கா? வேண்டாம். சும்மா காசு வாங்கறது தப்பு!

வஹீதா: உனக்கு சும்மா கொடுக்கல்லே! விலையாத்தான் கொடுக்கறேன்!

முகமது: எதுக்கு விலை?

வஹீதா: வெளிநாடுகள்ளே நம்ம பழைய இந்திய நாணயங்களுக்கு நல்ல மதிப்பு! நிறையப் பணம் கொடுத்து வாங்கிக்கறாங்க. டெல்லியிலே எங்க பெரியப்பா இருக்கார். அவர்கூட இந்த மாதிரி பழங்கால நாணயங்களை சேகரிச்சு நல்ல விலைக்கு வித்துக் கொடுக்கிறாராம்! பழங்கால நாணயங்களை வாங்கி அனுப்பச் சொல்லி எனக்கு முன் பணமும் அனுப்பிச்சிருக்கார்! புரிஞ்சுதா?

முகமது: அப்படியா, ரொம்ப நன்றிக்கா.

வஹீதா: சரி, இனிமேலாவது ஜாக்கிரதையா வியாபாரம் செய், நான் வரேன்!



காட்சி: 2

(பள்ளி மைதானம்)

வஹீதா: உசேன்! உசேன்!

உசேன்: வகுப்புத் தலைவி வஹீதாவா... என்ன?

வஹீதா: என்ன இங்கே ஒரே மல்லிகைப்பூ வாசனையாயிருக்கு?

உசேன்: எல்லாம் ஐயா போட்டிருக்கிற மல்லிகை சென்ட்டோட மகிமைதான்!

வஹீதா: அப்பா... பிரமாதமான வாசனை! உசேன்... இந்த சிவப்புப் பேனா புதுசா? எப்போ வாங்கினே?

உசேன்: இதை முகமதுகிட்டேந்து நேத்துத்தான் வாங்கினேன்.

வஹீதா: அப்படியா? அது சரி! உங்க வீட்டுல பழங்கால இந்திய நாணயம் ஏதாவது இருக்கா? இருந்தா, ஒரு நாணயத்துக்கு பத்து ரூபா தரேன்!

உசேன்: உண்மையாவா!

வஹீதா: ஆமாம்! டெல்லியிலே இருக்கிற எங்க பெரியப்பா பழங்கால இந்திய நாணயங்களை சேகரிச்சு அனுப்பச் சொல்லி எனக்குப் பணம் அனுப்பி யிருக்கார்!

உசேன்: இதை நேத்தே சொல்லியிருந்தா உனக்கு ரெண்டு பழங்கால நாணயம் கிடைச்சிருக்கும்! எனக்கும் இருபது ரூபா கிடைச்சிருக்கும்!

வஹீதா: ஏன்? இப்போ அந்த நாணயங்கள் உங்கிட்டே இல்லையா?


உசேன்: (பதற்றத்துடன்) ம்! இல்லை... இருக்கு... இல்லை... வந்து ஹூம் தொலைஞ்சு போச்சு!

வஹீதா: என்ன உசேன்! இருக்குங்கறே, இல்லைங்கறே! தொலைஞ்சு போச்சுங்கறே!

உசேன்: (பதற்றம் மாறாமல்) தொலைச்சிட்டேன் வஹிதா.

வஹிதா: நாணயங்களை தொலைச்ச இடத்திலே நல்லா,





தூறலுக்கும் மழைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

தூறல் போடும். மழை பேயும்.

— டி.பிரகாஷ்

மறுபடி தேடிப் பார்த்தா கிடைச்சாலும் கிடைக்கும்! நானும் கூட வரவா?

உசேன்: நீ எதுக்கு? நானே தேடிக் கொண்டு வரேன்!

வஹீதா: உசைன்! போறதுக்கு முன்னாடி ஒரு குட்டிக் கதையைக் கேட்டுட்டுப் போ... நல்லாயிருக்கும்!

உசேன்: ம்! சொல்லு.

வஹீதா: ஒரு ஊர்லே ஒரு மீனவன். அவனிடம் இருந்த மீன் வலை கிழிஞ்சு போச்சு. அதுனால தன்னிடம் உயிரோடு இருந்த பெரிய மீனைக் கொடுத்து ஒரு வலையை வாங்கிக்கிட்டான். கொஞ்ச நாள் கழிச்சு அந்த மீன், ஐந்து குட்டிகள் போட்டது. அத்தனை குட்டிகளும் தங்க மீன் குட்டிகள்!

உசேன்: மீனை வலைக்கு விலையா வாங்கிக்கிட்ட மீனவன் அதிர்ஷ்டசாலி தான்! மேலே சொல்லு வஹீதா?

வஹீதா: விஷயம் வலையை வாங்கின மீனவனுக்கும் தெரிஞ்சு போச்சு! உடனே என் மீனையும் அதனோட தங்க மீன் குட்டிகளையும் எனக்கே திருப்பிக் கொடு. உன் வலைக்கு விலையா நீ கேக்கற பணத்தைத் தரேன்னு கேட்டான். எப்படி இந்த நியாயம்?

உசேன்: நிச்சயமா இது நியாயமே இல்லை! ஒரு பொருளுக்கு விலையா கொடுத்ததை, திருப்பிக் கேக்கறது சரியில்லை. சரி, அந்த மீனவன் மீனையும் தங்க மீன் குட்டிகளையும் கொடுத்தானா? நானா இருந்தா கொடுத்தே இருக்க மாட்டேன்! போடா போன்னு விரட்டியிருப்பேன்.

வஹீதா: அப்படியா! ஒரு வேளை நீயே அந்த மீனை விற்றவனா இருந்தா என்ன பண்ணுவே?

உசேன்: நிச்சயம் திருப்பிக் கேட்டிருக்க மாட்டேன்.

வஹீதா: வெரிகுட்! இனிமே தொலைச்ச நாணயங்களைத் தேடிப்பார்... உசேன்! நீ ரம்ஜான் நோன்பிருக்கே. இறை உணர்வும் உயர்ந்த பண்புகளும், மனித நேயமும் மனத்தில் நிறைஞ்சு இருக்கணும். நினைவிலே வச்சுக்கிட்டுப்போ!

காட்சி 3

(பள்ளி எதிரே)

உசேன்: முகமது! நேத்து உங்கிட்டே கொடுத்த ரெண்டு ரூபாய்களையும் திருப்பிக் கொடுத்துடு! அவை செல்லாத ரூபாய்! அதுக்குப் பதிலா வேற ரூபா தரேன்!

முகமது: அட! அந்தத் தம்பியா! அவை எங்கிட்டே இப்போ இல்லை தம்பி. வஹீதா அக்கா விலைக்கு வாங்கிக்கிட்டு போயிடுச்சு! எனக்கு இருபது ரூபாயும் கொடுத்துச்சு!

உசேன்: அப்படியானா அந்த இருபது ரூபாயும் எனக்குத்தான் வந்து சேரணும்! பேனாவுக்கு விலையா ரெண்டு ரூபாயைக் கழிச்சுக்கிட்டு மீதியைக் கொடு! இல்லேன்னா அந்த ரெண்டு ரூபாய் நாணயங்களைத் திருப்பிக் கொடு!

(வஹீதா வருகிறாள்)

வஹீதா: சபாஷ் உசேன்! விலையாக் கொடுத்த மீனையும் அதனோட தங்கக் குட்டிகளையும் திருப்பிக் கேக்கறியா? என்னமோ மாட்டேன், அது நியாயமில்லேன்னு சொன்னியே! இப்போ நியாயம் மாறிப் போச்சா? பார்வை இல்லாத முகமதை ஏமாத்தினது முதல் தப்பு- அதுவும் இந்தப் புனித ரமலான் நோன்பு இருக்கும் போது இப்படி நடந்துக்கிட்டது அடுத்த தப்பு. இப்போ லாபத்துக்காக, நேர்மை தவறி நடக்கிறது மன்னிக்கவே முடியாத தவறு.

உசேன்: (தலை குனிந்து) ம்... தப்புதான்.. போனவாரம் அப்பா வாங்கிக் கொடுத்த புதுப் பேனாவைத் தொலைச்சுட்டேன்! அப்பாவுக்குத் தெரிஞ்சா அடிப்பாரேங்கிற பயத்துலேதான், எங்கிட்டே இருந்த செல்லாத ரூபாய்களைக் கொடுத்து, முகமதை ஏமாத்திட்டேன்!

வஹீதா: உசேன்! இந்த முகமதைப் போல கண்ணில்லாம, காலில்லாம, கையில்லாம பலபேர் இருக்காங்க! இவங்களுக்கு நாமதான் கண்ணா, காலா இருந்து உதவி செய்யணும்! அதுதான் ரமலான் நோன்பின் இலட்சியம். அதைத் தவற விட்டதும் அல்லாமல் மனிதத் தன்மையே இல்லாமல் இப்படி ஏமாத்தறது பெரிய தப்பு!

உசேன்: முகமது! என்னை மன்னிச்சுடு! தெரியாத்தனமா உன்னை ஏமாத்திட்டேன்! அது எவ்வளவு பெரிய தப்புன்னு வஹீதா அக்கா உணர வைச்சிட்டா.

முகமது: தவறான பாதையில் போக இருந்த உன்னைத் திருத்த, நானே காரணமாக இருந்ததை எண்ணிப் பெருமைப்படறேன் தம்பி. என் நோன்பு பலிச்சிட்டது.

சிட்டாய் மங்கள!

குளிர்ந்த காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது. வானத்தில் கரிய மேகம் திரள் திரளாக விரைவாகப் பறப்பது போன்று தோன்றியது.

நிமிர்ந்து பார்த்த நன்மாறன் தன் தம்பி இளமாறனின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். "காலை பத்து மணிக்கே மாலை ஆறு மணி போல் இருள் குவியத் தொடங்கிடிச்சே!'' என்று சொல்லிக் கொண்டே தம்பியின் கையைப் பிடித்த படி வேகமாக நடக்க முற்பட்டான்.

"அண்ணா! மழை வந்திடும் போலி ருக்கே!" என்றான் இளமாறன்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன். தூறல் வர்றதுக்கு முன்னாடி ஊர் போய்ச் சேர்ந்திட்டா நல்லது. ஏற்கெனவே உனக்குக் காய்ச்சல். மழையிலே நனைஞ்சா இன்னும் உடம்பு மோசமாயிடுமே?" என்று கவலைப்பட்டான் நன்மாறன்.

"நான் என்னண்ணா பண்ணுவேன்! இந்த நொண்டிக் காலை இழுத்துக்கிட்டு என்னாலே வேகமா நடக்கவே முடியாது. என் காலு நல்லாயிருந்தால் உன் கூட ஓடி வருவேனே?" என்று வருந்தினான் இள மாறன்.

"நான் எத்தனையோ தடவை சொல் லிட்டேன் உன்னை நீயே நொண்டி நொண்டின்னு சொல்லிக்கக் கூடாதுன்னு" என்று வேதனையும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறினான் நன்மாறன்.

"என்னாலே எல்லாருக்கும் கஷ்டம். உனக்குத்தான் ரொம்ப ரொம்பக் கஷ்டம்!" என்று இளமாறன் சொன்னபோது அவன் குரல் கம்மிப் போனதைக் கவனித்தான் நன்மாறன்.

"வருத்தப்பட்டால் இருக்கிற குறை போயிடுமா இல்லை குறைஞ்சிடுமா? நீ பர வாயில்லையே. பூவிருந்தவல்லியிலே பார்வையிழந்தோர் பள்ளி இருக்கு தெரியுமா?"

"ஓ... தெரியுமே! அங்கேதானே நம்ம மாமா பையன் மாணிக்கத்தைச் சேர்த் திருக்காங்க, படிக்கிறதுக்கு?"

"மாணிக்கத்துக்கு ரெண்டு கண்ணும் தெரியாது. அவன் அங்கே படிச்சிக்கிட்டு சந்தோஷமாயிருக்கான் தெரியுமா? நான் படிக்கிற உயர்நிலைப் பள்ளியிலே ஓர் ஆசிரியர்... அவருக்கும் ரெண்டு கண் ணிலேயும் பார்வை இல்லே. அவர் எம்.ஏ. படிச்சி ஆசிரியராயிருக்காரு. உனக்குக் கால்தானே கொஞ்சம் ஊனம்? பார் வையிருக்கே? நல்லா படிக்கலாமே? பெரிய பெரிய உத்யோகமெல்லாம் பார்க் கலாமே...? கண்பார்வையே இல்லாத வங்களை விட வா, உனக்குப் பெரிய கஷ்டம்? கவலைப்படாமே, வா!"

நன்மாறன் பெரிய மனிதனைப் போல், தன் தம்பிக்கு ஆறுதல் கூறினான். என் றாலும் அவன் முகமும் கவலைப்படுவது போலவே தெரிந்தது இளமாறனுக்கு.

அப்போது அவர்கள் பின்பக்கமாக ஒரு கார் அதிக வேகமில்லாமல் மெது வாகத்தான் வந்து கொண்டிருந்தது. வேகம் குறைவாக இருந்தாலும் அது எழுப்பிக் கொண்டு வந்த சப்தம் மட்டும் அதிக மாகவே இருந்தது.

இருவரும் திரும்பிப் பார்ப்பதற்குள் அந்தக் கார், அவர்களுக்கு முன்னே சென்று ஒரு பத்து மீட்டர் தூரத்திற்குப் போய் நின்று விட்டது.

அந்தக் காரிலிருந்து இறங்கினார் ஒரு பெரியவர். காரின் முன்பக்கம் சென்று மூடியைத் திறந்து எஞ்ஜினைப் பார்த்தார். அதற்குள் சிறுவர்கள் இருவரும் காரின் அருகே போய் விட்டார்கள்.

"தம்பிகளா? எஞ்ஜின் சூடாயிடுச்சி. டின்னிலே தண்ணியில்லே. பக்கத்திலே எங்காவது தண்ணி கிடைக்குமா?" என்று

பூவை அமுதன்

கேட்டார் பெரியவர்.

"அதோ பாருங்க. அங்கே ஒரு கிணறு இருக்கு. அதிலே தண்ணியிருக்கும்!" என்று சாலையை அடுத்துத் தெரிந்த வயல் புறத்துக்குக் கையைக் காட்டினான் நன்மாறன்.

"கிணத்திலே தண்ணியிருக்குமா?"

"இருக்கும், இருக்கும்!" என்றார்கள் இருவரும்.

பெரியவர் காரிலிருந்த டின்னை எடுத்துக் கொண்டு வேகமாக இரண்டு அடி எடுத்து வைத்தவர் ஏதோ நினைவுக்கு வந்தவரைப் போல நின்று விட்டார்.

"பெரிய தம்பி! கிணற்றிலே படிக்கட்டுகள் இருக்குமா?" என்று கேட்டார்.

"இருக்கும். ரெண்டொரு படிக்கட்டுங்க உடைஞ்சி போயும் இருக்கும்!" என்றான் நன்மாறன்.

அப்போது வானத்திலிருந்து இரண்டொரு தூறல் துளிகள் விழத் தொடங்கின.

"அடடே! மழை வரும் போலிருக்கே. கார் இப்படி மக்கர் பண்ணிட்டதே நடு வழியிலே. எனக்கு நீச்சல் தெரியாது தம்பி. தவறி கிணத்திலே விழுந்திட்டேன்னா...?"

உண்மையிலேயே அவர் பயப்படுகிறார் என்பது புரிந்தது நன்மாறனுக்கு.

"தம்பீ! நீ இங்கேயே இரு. இதோ வந்திடறேன். ஐயா... டின்னை இப்படிக் கொடுங்க. நான் ஓடிப் போய்த் தண்ணி எடுத்திட்டு வந்திடறேன்!" என்று கையை நீட்டினான் நன்மாறன்.

"கிணத்திலே நீ இறங்குவியா?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் பெரியவர்.

"ஐயா... எனக்கு நீச்சல் தெரியும். கிராமத்திலே இருந்துகிட்டு நீந்தப் பழகாமே இருக்க முடியுமா?" என்று சிரித்துக் கொண்டே டின்னோடு ஓடினான் நன்மாறன்.

இளமாறன் அந்தப் பெரியவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அதைக் கவனித்தார் பெரியவர்.

"பயப்படாதே தம்பி. இப்ப வந்திடுவான் பாரு" என்றார்.

"நான் பயப்படலியே!" என்றான் இளமாறன்.

"உடம்பு நடுங்குதே...! ஒருவேளை குளிருதோ..? காரிலே ஏறி உட்காரேன்?"



என்று கதவைத் திறந்தார்.

"வேணாம். இருக்கட்டுங்க. இப்படியே நிற்கிறேன். எனக்கு நேத்திலிருந்து காய்ச்சல். அரசாங்க ஆஸ்பத்திரியிலே காட்டி அண்ணன் மருந்து வாங்கிக்கிட்டுக் கூட்டிக்கிட்டுப் போகுது?"


"அடடே! ஜுரமா!" என்று தொட்டுப் பார்த்தார். இலேசாகக் காய்ச்சல் இருந்தது.

"சில்லென்று காற்று வீசுதில்லே. அதான் பாவம் உன் உடம்பு நடுங்குது. ஆமாம்... நீங்க எங்கே போகணும்?" என்று கேட்டார் பெரியவர்.

"பக்கத்திலேதான் ஊர் இருக்கு. மலையம்பாக்கம். செம்பரம்பாக்கம் ஏரிக்கரை கிழேயிருக்கே, அந்த ஊரு."

"அடடே! நான் குன்றத்தூர் தாண்டித் தான் போகணும். அமரம்பேடு தெரியுமா...? அங்கேதான் நான் போகணும். ஆமாம்.. நீயும் உன் அண்ணனும் படிக்கறீங்களா?"

"அண்ணன் குன்றத்தூர் பள்ளியில தான் ஏழாவது படிக்குது. எனக்கு மருந்து வாங்கறதுக்காக அது இன்னைக்கு பள்ளிக்குப் போகல்லே. நான் மலையம்பாக்கத்



திலே நாலாவது படிக்கிறேன்" என்றான் இளமாறன்.

"அது சரி. உங்க வீட்டிலே பெரியவங்க இல்லையா! சின்னப் பசங்க ரெண்டு பேரும் ஆஸ்பிடலுக்குப் போய் வர்றீங் களே!"

"அம்மாயிருக்காங்க. அவங்க காலை யிலேயே களை எடுக்கிற வேலைக்குப் போயிடுவாங்க. அப்பா... மிலிட்டரியிலே இருந்தாரு... செத்துப் போயிட்டாரு. நான் அவர் மூஞ்சியைக்கூடப் பார்த்ததே இல்லை."

அவன் தொண்டை அடைத்துக் கொண்டது. அழுது விடுவான் போல் தோன்றியது.

அவனை அன்பாகத் தட்டிக் கொடுத் தார் பெரியவர். அப்போது நன்மாறன் அங்கு தண்ணீரோடு வந்து நின்றான். அவனை நன்றியோடு நோக்கினார் அவர்.

"தம்பீ! சின்னப் பையன் நீ... மற்றவங்க கஷ்டத்துக்கு உதவி செய்யணும்ங்கிற மனசு இருக்கு பாரு உனக்கு! நீ பெரிய... மனுஷனா வருவே!" என்று அவனை வாழ்த்தினார் பெரியவர்.

"இது என்னாங்க பெரிய உதவி? என் னாலே முடியாததையா, நான் செய் திட்டேன்?" என்றான் நன்மாறன்.

"தம்பி! தங்களாலே முடிஞ்சதைச் செய் யறதுக்கு பெரியவர்களே தயங்குகிற காலம் இது. உன் தம்பிக்கு உடம்பு சரியில்லை.... மழை வேற வரும் போல பயமுறுத்துது. இருந்தும், யாரோ ஊர் பேர் தெரியாத எனக்கு உதவி பண்ணியிருக்கியே...! உங்க பேரைக் கூட நான் தெரிஞ் சிருக்கலே, பாரு!" என்றார் அவர்.

நன்மாறன் இருவர் பெயர்களையும் சொன் னான். பெரியவர் டின்னி லிருந்து தண்ணீரைக் கார் எஞ்ஜினில் கொட்டி, என் னென்னவோ பண்ணிச் சிறிது நேரத்தில் காரை ஸ்டார்ட் செய்து விட்டார். அதற்குப் பிறகுதான் கவனித் தார் அந்தச் சிறுவர்கள் இருவரும் சாலையில் முன்னே நடந்து கொண்டிருந்தார்கள்.


காரை ஓட்டிக் கொண்டு அவர்கள் அருகில் நிறுத்தினார் பெரியவர்.

"காரைக் கவனிக்கிறதுக்குள்ளே, நீங்க புறப்பட்டிட்டீங்களே! சரி சரி ஏறுங்க. நான் உங்களை உங்க ஊர்லேயே விட்டுட் டுப் போறேன்" என்றார்.

இருவரும் தயங்கினார்கள். அவர் களைப் பார்த்துச் சிரித்தார் பெரியவர். அப்போது பலமாக தூறல் தொடங்கி விட்டது.

"நனைஞ்சிடாதீங்க, ஏறிக்குங்க!" என் றார். இருவரும் காரின் பின்சீட்டில் அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் இரு வரையும் காரின் கண்ணாடி வழியே பார்த்தார் பெரியவர்.

"தம்பீ! உங்க ஊரிலே எனக்கு வீடு வாடகைக்குக் கிடைக்குமா? நான் வெளி நாட்டிலிருந்து தனி ஆளாத் தமிழ்நாட் டுக்கு வந்திருக்கேன். நானும் தமிழன்தான். ஆனால் தமிழ் பேச மட்டும்தான் தெரியும். அவ்வளவா எழுதப் படிக்கத் தெரியாது. வெளிநாட்டிலேயே பல வருஷம் இருந்



நட்பு!

ஆடை அவிழும் போதிலே
அணைக்கும் கைகள் போலவே
தேட வேண்டும் நட்பினை
தெரிந்து கொள்வாய் தம்பியே!

மணியின் வீடு உயரமாய்
மாடி யோடு இருப்பதால்
மணியின் நட்பு உயர்ந்ததாய்
மனதில் எண்ண லாகுமோ?

கோடி வீட்டுக் குப்புவின்
குடிசை தாழ்ந்து இருப்பதால்
ஏழை என்றே நட்பினை
இகழலாமோ சொல்லுவாய்?

உயர்வு தாழ்வு என்பதே
உயர்ந்த நட்பில் இல்லையே
உயர்ந்த குணங்கள் உள்ளவர்
உனக்கும் எனக்கும் நண்பரே!

-எஸ்.வஜ்ரவேலு

திட்டதனாலே இப்படி ஆயிடுச்சு."

"உங்களுக்கு இங்கே சொந்தக்காரங்க..."

"நிறைய இருக்காங்க. ஆனால் நான் கொஞ்ச காலம் யார் தொந்தரவும் இல்லாமே, யாருக்கும் தொந்தரவு கொடுக்காமே சுதந்தரமா இருக்கலாமுன்னு பார்க்கிறேன். அதனாலே உங்க ஊரிலே எனக்கு வீடு பாருங்க. இங்கே வந்திடறேன். நான் உங்களுக்கு உதவியாயிருப்பேன். எனக்கு நீங்க உதவியாயிருக்கணும். எனக்குத் தமிழ்ச் செய்தித்தாளைப் படிச்சுச் சொல்லணும். கொஞ்சம் கொஞ்சமா தமிழ் எழுதப் படிக்கக் கற்றுத் தரணும். ஒரு நல்ல குடும்பத்துக்கு உதவி செய்யணும்ங்கிற நினைப்பு ரொம்ப காலமா எனக்கு இருந்துகிட்டிருக்கு" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் பெரியவர்.

"ஐயா... நான் படிக்கிறதை விட என் தம்பி படிக்கிறதுதான் எனக்கு முக்கியம்" என்றான் நன்மாறன்.

"அது ஏன் தம்பீ அப்படி?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் பெரியவர் காரை ஓட்டிக் கொண்டே.

"ஐயா... எனக்குக் கை கால் நல்லாயிருக்கு. படிக்கலேன்னா கூட, கஷ்டப்பட்டு உழைச்சிப் பிழைச்சிக்க முடியும்...! ஆனால் என் தம்பிக்கு... ஒரு கால் சரியில்லே..." – அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

அவனுடைய பாச உணர்வைப் புரிந்து கொண்டு நெகிழ்ந்து போனார் பெரியவர்.

"தம்பீ! உன் அப்பா நாட்டைக் காக்கிற சிப்பாயாயிருந்து உயிரை விட்டிருக்காரு. அவர் பிள்ளைங்க நீங்க, கவனிக்கிறதுக்கு யாரும் இல்லாமே கஷ்டப்படக்கூடாது. நான் உங்களைக் கவனிச்சிக்கறேன்" என்றார் அன்போடு.

"வேண்டாம் ஐயா... உங்களுக்கு ஏன் சிரமம்...?" என்றான் நன்மாறன்.

"என்னைக் கஷ்டப்படுத்திக்கிட்டு நான் உங்களுக்கு உதவி செய்ய வரல்லே. நானும் உங்களாலே உதவி பெறுவதற்கு வழியிருக்கே!" என்றார் பெரியவர்.

நன்மாறன் உள்ளத்திலே தன் தம்பி இளமாறன் ஒரு பெரிய அதிகாரியாக உயர்ந்து நிற்கிற தோற்றம் தெரிந்தது.

இரண்டு கைகளையும் கூப்பினான் பெரியவர் முதுகுக்குப் பின்னால். அதைக் காரின் கண்ணாடி மூலம் கண்டு புன்னகை புரிந்தார் பெரியவர்.

கண் மை போடுவது கெடுதலா?

டாக்டர். கு. கணேசன்



● ச. முத்துக்குமரன், பட்டுக்கோட்டை.

? உடல் ஆரோக்கியத்திற்கு ஒருநாளில் எத்தனை முட்டை சாப்பிடலாம்? எப்படிச் சாப்பிடலாம்?

! வயதிற்கு ஏற்றபடி சரியான உடல் எடை உள்ளவர்கள் தினமும் ஒரு முட்டை சாப்பிடலாம். ஒல்லியாக இருப்பவர்களும் உடலை வளர்க்க விரும்புகிறவர்களும் தினமும் இரண்டு முட்டை சாப்பிடலாம். முட்டையை வேகவைக்காமல் பச்சையாகச் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்குக் கெடுதல். சில நோய்கள் வருவதற்கு வழிகொடுக்கும். அரை வேக்காட்டில் முட்டையை வேகவைத்துச் சாப்பிடுவது மிக நல்லது; அல்லது ஆம்லெட் போட்டும் சாப்பிடலாம்; தவறில்லை.

● எஸ். அப்துல் ரெஜாக், அதிராம்பட்டினம்.

? தடுப்பு ஊசி போட்டால் வீங்கி விடுகிறதே... காரணம் என்ன, டாக்டர்?

! அப்துல்ரெஜாக்! முதலில் தடுப்பு ஊசி என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது



நோய்க் கிருமிகளை இறந்த நிலையில் ஒரு குறிப்பிட்ட அளவு உடலுக்குள் செலுத்துவதுதான், தடுப்பு ஊசி. இந்த ஊசியைப் போட்டதும் நம் உடம்பில் உள்ள 'நோய் எதிர்ப்புப் படை' என்று அழைக்கப்படுகிற 'நிணநீர் அணுக்கள்' (LYMPHOCYTES) 'நோய்க் கிருமிகள் உடம்புக்குள் புகுந்துவிட்டன; உடனே அவற்றை எதிர்த்துப் போராடி அழித்து விடவேண்டும்' என்றெண்ணி தடுப்பு ஊசி போடப்பட்ட இடத்திற்கு வந்து போராடுகின்றன. இதன் விளைவாக அந்த இடத்தில் சிறிய வீக்கம் தோன்றுவது இயல்பு. இதனால் நன்மையே தவிர கெடுதல் ஒன்றுமில்லை. மாறாக, ஊசி மற்றும் ஊசிக்குழல் (NEEDLE AND SYRINGE) இரண்டையும் கொதிநீரில் நன்றாகச் சுத்தப்படுத்தத் தவறினால், ஊசிக்குழலில் உள்ள பாக்டீரியாக் கிருமிகள் ஊசி போடப்பட்ட இடத்தில் வீக்கத்தை ஏற்படுத்தும். இது உடல் நலத்திற்குக் கெடுதல். முறைப்படி சிகிச்சை பெற்றால்தான் குணமாகும்.

● டி. கமலக்கண்ணன், சேலம்.

? பாலில் பல வைட்டமின்கள் உள்ளன. பாலுடன் டிகாஷன் அல்லது தேயிலை கலந்து காப்பி அல்லது தேநீர் சாப்பிடுகிறோம். இதனால் பாலில் இருக்கும் வைட்டமின்கள் சேதமடையுமா? இல்லை, இந்த வைட்டமின்கள் நமக்கு முழுமையாகக் கிடைக்குமா?

! பாலில் டிகாஷன் மற்றும்



தேயிலையைக் கலப்பதால் அதிலுள்ள வைட்டமின்கள் சேதமடையாது; முழுமையாகக் கிடைக்கும். அதே சமயம் டிகாஷனிலும், தேயிலையிலும் காணப்படுகின்ற நச்சுப் பொருட்களும் நம் உடம்பில் சேருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், கமலக்கண்ணன்!

● ***சு. அருணாதேவி, தக்கோலம்.***
? என்னுடைய தோழிக்கு முகத்தில் தீ பட்டு ஆறிவிட்டது. என்றாலும் அந்த இடத்தில் தழும்பு தெளிவாகத் தெரிகிறது. தழும்பு மறைவதற்கு என்ன வழி, டாக்டர்?



! அழகூட்டும் அறுவை சிகிச்சை (COSMETIC SURGERY) உன் தோழியின் முகத்தில் உள்ள தழும்பை மறைக்க உதவும், அருணாதேவி! உடனடியாக உன் தோழியை ஓர் அழகூட்டும் அறுவை சிகிச்சை நிபுணரைச் சந்திக்கச் சொல்.

● ***கே.பி. ஜவாஹர் சசிகுமார், ஈரோடு.***
? எயிட்ஸ் என்ற நோய் மனிதர்களுக்கு மட்டுமில்லாமல் மிருகங்களுக்கும் வருமா?
! வரும். சொல்லப் போனால் மிருகங்களிடமிருந்து மனிதர்களுக்கு வந்ததுதான், எய்ட்ஸ்! முதன் முதலில் தென்னாப்பிரிக்காவில் உள்ள காடுகளில் வாழ்ந்து வரும் ஒருவகைக் குரங்கு இனத்தின் இரத்தத்தில் எயிட்ஸ் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைதான் காலப்போக்கில் மனிதர்களுக்குப் பரவி எய்ட்ஸ் நோயை உண்டாக்கின.

● ***கே. காயத்ரி, ஏம்பலம்.***
? அனாசின் மாத்திரையை ஒரே சமயத்தில் அதிகமாக சாப்பிட்டதால் எனக்கு அலர்ஜி ஏற்பட்டு விட்டது. அதற்கு முன்னால் எனக்கு அலர்ஜி கிடையாது. இப்போது தலைவலி வரும் போது அனாசின் சாப்பிட்டால் அலர்ஜி உண்டாகி விடுகிறது. அலர்ஜி ஏற்படாதவாறு தடுக்க என்ன செய்யலாம், டாக்டர்?



! ஒருவருக்கு ஒரு மாத்திரை ஒருமுறை அலர்ஜி ஏற்பட்டு விட்டால் அதன் பிறகு வாழ்நாள் முழுவதும் அவருக்கு அந்த மாத்திரை ஒத்துக் கொள்ளாது. உங்களுக்கு அனாசின் மாத்திரை அலர்ஜி. தலைவலி வரும்போது இனிமேல் அனாசின் மாத்திரையைச் சாப்பிடாதீர்கள். பதிலாக 'பாராசிட்டமால்' மாத்திரையைச் சாப்பிடலாம். அவ்வளவாக அலர்ஜி வராது.

● ***நா. சௌமியா ஸ்வாமி, கொரட்டூர்.***
? இரவு தூங்கும் போது எந்தப் பக்கம் படுத்துறங்க வேண்டும்?
! மல்லாந்து படுத்துறங்குவது நல்லது. புரண்டு படுக்க விரும்பினால் வலது பக்கம் புரண்டு படுக்கலாம். குப்புறப் படுப்பதும், இடதுபக்கமாகப் புரண்டு படுப்பதும் இதயத்திற்கு சுமையைத் தரும்.

● ***ம. கார்த்திக்ராஜா, நிரூர் (அந்தமான்).***
? கண்ணில் மை போடுவதால் ஏதும் கெடுதலா, டாக்டர்?



! தரமான கண்மையைப் போடுவதால் கெடுதல் ஏற்படுவதில்லை. விலை குறைவு என்பதற்காகத் தரம் குறைந்த கண்மையை உபயோகிப்பதால் கண்ணுக்குக் கெடுதல். அப்படித்தான் ஒரு முறை ஆறாம் வகுப்புப் படிக்கும் கமலா தரம் குறைந்த கண்மையைப் போட்டு விட்டு ஒரு வாரம் கண் பட்டைகள் வீங்கி சிரமப் பட்டாள்; அடுத்த தெரு கமலாவுக்கு கண்மை போட்ட இடத்தில் அழற்சி ஏற்பட்டு புண்ணாகி சீழ் பிடித்து காய்ச்சலே வந்து விட்டது.

பாசம் அப்பா!



முகமது ஹில்மி

அப்பாவுடன் வெளியில் செல்வது என்றால் பாலகுமாருக்கு மிகவும் பிடிக்கும். தெருக்களில் அவர் நடக்கும்போது ஒரு இயல்பான கம்பீரம் இருக்கும். வழியில் சந்திப்பவர்கள் அவருக்கு மரியாதை செய்வார்கள். அல்லது மரியாதை நிமித்தமாக சற்று ஒதுங்கிச் செல்வார்கள், இதையெல்லாம் பார்க்கும்போது பாலகுமாருக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.

எந்த அலுவலகத்திற்குச் சென்றாலும் சரிதான். அல்லது எந்தக் கடைக்குச் சென்றாலும் சரிதான். அவரிடம் படித்த மாணவர்களில் யாராவது ஒருவர் அங்கே இருப்பார். அவர்கள் அப்பாவுக்குக் கொடுக்கும் மரியாதையைப் பார்க்க வேண்டுமே! பாலகுமாருக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அவர் வெறும் ஆசிரியர் என்பதால் மட்டும் இந்தப் பெருமை இல்லை. உயர்ந்தவர். பண்புள்ளவர். திறமைமிக்கவர்.

கண்டிப்பும் அன்பும் கலந்து அவர் பாடங்களை நடத்துவார். எத்தனையோ ஏழை மாணவர்களுக்கு தனது வருமானத்தின் ஒரு சிறு பகுதியை ஒதுக்கி புத்தகங்களும் நோட்டுக்களும் வாங்க உதவி செய்துள்ளார்.

அவரின் தோற்றமும் மரியாதையை ஏற்படுத்தும் தோற்றமாகும். கண்களில் இயற்கையிலேயே ஒரு ஒளி.

ஆனால், ஏனோ தெரியவில்லை, இன்று அப்பாவின் நடையில் வழக்கமான கம்பீரம் இல்லை. கண்களில் தெரியும் மிடுக்கு சற்றுக் குறைவாகவே அவனுக்குத் தெரிந்தது.

இருவரும் நடந்து செல்லும் போது தெற்கு பஜாரில் ஒருவர் அப்பாவை நோக்கி மலர்ந்த முகத்துடன் வந்தார்.

"ஐயா, தாங்கள் ஆசிரியர் செல்வ ராஜநாயகம்!" என்றார் அந்தப் புதியவர்.

"ஆம்" என்று அப்பா ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னார்.

"சார், நான் தங்களுடைய பழைய மாணவன். இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன் தொண்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினீர்கள். உங்களுக்கு அது முதல் வேலை. அப்பொழுது நான் தங்களின் மாணவன். இவ்வளவு ஆண்டுகளுக்குப்பின் இங்கு உங்களை எதிர்பாராமல் சந்திப்பதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி ஐயா!" – அந்தப் புதியவரின் முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி.

அப்பாவின் முகம் இலேசாக மலர்ந்தது.

"இங்கே நீ என்ன செய்கிறாய் தம்பி?" என்றார்.

"ஹைகிரவுண்டில் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். என் ஆசிரியர் பணிக்கு தாங்கள் ஒரு முன் மாதிரி ஐயா. உங்களை இவ்வளவு காலம் ஆகியும் மறக்க முடியவில்லை" என்றார் புதியவர்.

அப்பா இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஏதோ லட்ச ரூபாய் கிடைத்துவிட்டதைப் போல மிக

வும் சந்தோஷப்படுவார். ஆனால், இன்றோ! அப்பாவுக்கு என்ன வந்து விட்டது?

அவரது முகத்தில் உயிரே இல்லாத சிரிப்பு. சிலவார்த்தைகள் அந்தப் புதியவரிடம் உதிர்த்துவிட்டு மேலே நடக்கத் துவங்கினார்.

பாலகுமாருக்குக் கோபம் வந்தது. இந்த அப்பா அந்தப் புதியவரிடம் இன்னும் கொஞ்சம் அன்பாய்ப் பேசினால் என்ன? ஏன்தான் இன்று இப்படி இருக்கிறாரோ?

ஒன்றும் பேசாமல் அவர் பின்னே மீண்டும் நடக்கத் துவங்கினான்.

வள்ளுவர் மேல்நிலைப்பள்ளியின் பெரிய அகன்ற கேட் திறந்து இருந்தது. பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுடன் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அட்மிஷன் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நேராக அப்பா தலைமை ஆசிரியரின் அறையை நோக்கி நடந்தார்.

அங்கே ஏகப்பட்ட கூட்டம்.

தனது பெயரை ஒரு துண்டுச் சீட்டில் எழுதி பியூனிடம் கொடுத்தார். உள்ளே சென்ற பியூன் உடனே வெளியே வந்து,

"ஐயா உடனே உங்களை உள்ளே அழைக்கிறார்" என்றார்.

அப்பா அறையின் உள்ளே நுழைந்தார்.

பாலகுமாருக்கு ஏகப்பட்ட பெருமை. அப்பாவுக்கு எங்கு சென்றாலும் மதிப்பும் மரியாதையும் என்னமாய்க் கிடைக்கிறது!

அப்பா அவன் கண் முன்னே ஒரு இமயத்தைப் போல உயர்ந்து நிமிர்ந்து நின்றார்.

தலைமை ஆசிரியர் தர்மராஜ் அப்பாவை எழுந்து நின்று வரவேற்றார்.

நெடிய உருவம், கனிந்த பார்வை, கணீர் என்ற குரல்.

"ஐயா, தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? நான் தங்களின் பழைய மாணவன். உங்களின் அன்பும், கல்வியில் தாங்கள் இட்ட அடித்தளமும்தான் இன்று நான் இந்த நிலைக்கு வருவதற்கு முக்கியக் காரணங்கள்" என்றார்.

அப்பா தயங்கினார்.

தனக்கு வழக்கம் இல்லாத ஒரு காரியத்தைத் தான் செய்யும் பொழுது ஏற்படும் ஒரு தடுமாற்றம்!

"இவன் என் ஒரே மகன், நான் பணியாற்றும் உயர் நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளான். தங்கள் பள்ளியில் அவனுக்கு மேல் நிலை முத லாம் ஆண்டிற்கு இடம் வேண்டும்" என் றார்.

"எந்தப் பிரிவு வேண்டும்?" என்றார் தர்மராஜ்.

"கணிதப் பிரிவு."

"மதிப்பெண்கள்?" என்று சிரித்தவாறே தர்மராஜ் கேட்ட போது, அப்பா மிகவும் சோர்ந்து போனார். இந்தக் கேள்விக்காக அவர் மிகவும் பயந்து கொண்டே இருந்தார்.

"முன்னூற்று ஐம்பது மதிப்பெண்கள்," அப்பாவின் குரல் மிகவும் தாழ்ந்து இருந்தது. தலை கவிழ்ந்திருந்தது.

தர்மராஜன் அப்படியே சற்று யோசனையில் ஆழ்ந்தார். அவர் நெற்றியில் சுருக்கங்கள் தெரிந்தன.

பின்னர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசினார்.

"ஐயா, தங்களுக்கு உதவி செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்குள்ள சூழ்நிலையால், கைகளுக்குக் கட்டுப் போட்டதைப் போல ஆகிவிட்டேன். முதல் பிரிவில் ஒரு மாணவனைச் சேர்ப்பதற்கு குறைந்தபட்ச மதிப் பெண்கள் எவ்வளவு இருக்க வேண்டும் என்று பள்ளி நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது. அதன்படி குறைந்தது முன்னூற்றி எண்பது மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். எனினும் தங்களுக்கு இல்லை என்று



சொல்ல என்னால் முடியவில்லை. எதற்கும் எங்களின் பள்ளி நிர்வாகியைத் தொடர்பு கொண்டு கேட்டுப் பார்க்கிறேன்'' என்றார்.

அப்பா மேலும் நிலை குலைந்து போனார்.

''எனக்கு இவன் ஒரே பிள்ளை. எப்படியாவது இவனைப் படிக்க வைத்து நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று எனக்கு ஒரே கவலை. அவன் நன்கு படிக்கக் கூடியவன்தான். ஏதோ பரீட்சை நேரத்தில் உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அவனுக்கு எப்படியாவது ஒரு சீட் வாங்கிக் கொடுத்தால் ரொம்பப் புண்ணியமாக இருக்கும்.'' - சாதாரணமாகப் பெற்றோர்கள் சொல்லும் காரணங்களையெல்லாம் எடுத்துரைத்து இமயம் போன்ற அப்பா கெஞ்சினார்.



பாலகுமாருக்கு நெஞ்சம் பதறியது.

அவரின் மிடுக்கான பார்வை எங்கே போய்விட்டது? அதிகாரம் கலந்த குரல் ஏன் தழுதழுக்கிறது!

''சரி சார். நீங்கள் பக்கத்தில் உள்ள அறையில் இருங்கள். நான் நிர்வாகியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பள்ளியின் விதியைத் தளர்த்துவதற்கு முயற்சிக்கிறேன்'' என்றார் தர்மராஜ்.

அப்பா சோகமாக எழுந்து வெளியே வந்தார்.

அவரது நடையில் சோர்வு. தலை கவிழ்ந்தவாறே வந்தார்.

உயர்ந்து நிமிர்ந்து நின்ற இமயம் சரிந்து மண்டியிட்டு நிற்பதைப் போல இருந்தது அப்பாவின் நிலை.

பாலகுமாருக்கு அழுகை அழுகையாக வந்தது.

அப்பா தனது உழைப்பால் தனது திறமையால் தனக்கு என்று ஒரு பெயரையும் கௌரவத்தையும் ஈட்டியுள்ளார். தலை நிமிர்ந்து மிடுக்காக வாழ்கிறார்.

ஆனால் எனது அக்கறையின்மையாலும் சோம்பலாலும் தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்று இன்று அப்பாவுக்கு தலைக் குனிவை ஏற்படுத்தி விட்டேன்.

பாலகுமாரன் வருந்தினான்.

தான் நன்கு படிக்காமல் காலத்தை விரயம் செய்ததற்கு இப்படி ஒரு விளைவா? அவன் கனவிலும் இதை நினைத்துப் பார்க்கவில்லை.

அப்பாவுக்காக தனக்குள்ளே அழுதான். தன் மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.


இனி ஒருபோதும் அவ்விதம் இருக்கக் கூடாது. கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி வகுப்பில் முதல் மாணவனாக வர வேண்டும். அப்பாவிற்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

அப்பொழுது தர்மராஜ் விரைந்து அப்பாவின் அருகே வந்து,

''ஐயா, தங்கள் விருப்பப்படி முதல் பிரிவில் பையனைச் சேர்த்து விடுங்கள். விண்ணப்பத்தை நிரப்பிக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அப்பாவுக்குக் கண்களில் கண்ணீர்.

பாலகுமாருக்கு புதிய மனிதனாகி சாதனை படைக்க இதோ ஒரு பொன்னான வாய்ப்பு!



புக்கிட் மேரா

டமாசிக் என்பது சிங்கப்பூரின் பழங்காலப் பெயர். இந்த டமாசிக்கில் "புக்கிட் மேரா" என்ற கடலோரக் கிராமம் ஒன்று இருந்தது. புக்கிட் மேரா என்றால் மலாய் மொழியில் "சிவப்பு மலை" என்று பொருள். இந்த புக்கிட்மேராவில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் மீன் பிடிப்பவர்கள்; ஏழைகள். மீன்பிடிப்பதே அவர்களது தொழில். இந்த மீன்பிடித் தொழிலைக் கூட அவர்களால் அமைதியாகச் செய்ய முடியவில்லை. காரணம், அவர்கள் மீன்பிடித்த கடல் பகுதியில் ஆட்கொல்லி கத்தி-மீன்கள் ஏராளமாக இருந்தன.

அதனால், மீனவ மக்கள் பயந்து பயந்து மீன்பிடித்தனர். அமைதியாக அவர்களால் மீன் பிடிக்க முடியவில்லை. அடிக்கடி கத்திமீன்கள் அவர்களைத் தாக்கி விழுங்கி வந்தன. இந்தக் கத்தி மீன்களை அழித்துத் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த யாராவது வரமாட்டார்களா என்று மீனவ மக்கள் ஏங்கினர். தங்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர். தங்களையும் தங்கள் தொழிலையும் காக்குமாறு வேண்டினர்.

அரசரும் அவர்களுக்கு உதவ அந்த மீன்களைக் கொல்வதற்கு திறமையான போர் வீரர்கள் சிலரை அனுப்பி வைத்தார். ஆனால் அத்தனை போர் வீரர்களையும் அந்தக் கத்தி மீன்கள் கொன்று விட்டன.

அரசருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கலங்கிப் போனார். அப்போது அங்கு ஒரு சிறுவன் அரசரிடம் வந்து "அந்தக் கத்தி மீன்களைக் கொன்று அழிக்க என்னிடம் அருமையான ஒரு திட்டம் இருக்கிறது" என்றான்.

அரசரும், மற்றவர்களும் சிறுவனைப் பார்த்துச் சிரித்தனர்.

"பெரிய பெரிய வீரர்களால் முயன்றும் முடியாததை, உன்னால் மட்டும் எப்படிச் செய்ய முடியும்? சிறுவனான நீ ஏதாவது விளையாட்டுத் தனமாக உளராதே!" என்று ஏளனமாகப் பேசினார்.

"அரசே, வலிமையால் முடியாததை தந்திரத்தால் முடிக்கலாம் என்பதை மறக்க வேண்டாம்" என்றான் சிறுவன்.

"சரி, உன் திட்டம் என்ன கூறு?" என்று கேட்டார் அரசர்.

"கத்தி மீன்கள் தாக்கும் கரை யோரப் பகுதிகளில் வாழை மரங்களை வெட்டிப் போட்டுக் காத்திருக்கலாம்.

தாக்க வரும் கத்தி மீன்களின் கத்தி மூக்கு உறுப்பு, வாழை மரங்களில் குத்தி சிக்கிக் கொள்ளும். அந்த நேரத்தில் நமது வீரர்கள் எளிதாக அவைகளைத் தாக்கிக் கொன்று விடலாம். இது கண்டிப்பாக வெற்றி தரும் முயற்சி" என்றான் சிறுவன்.

அதற்குமேல் அரசர் தயங்கவில்லை. சிறுவனின் திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டார். சிறுவனின் திட்டம் நன்கு செயல்பட்டது. தாக்க வந்த கத்தி மீன்கள் வாழை மரங்களில் தங்கள் கத்தி மூக்கை சிக்க வைத்துக் கொண்டு திண்டாட, காத்திருந்த வீரர்கள் எளிதில் அவைகளை அழித்தனர்.


மக்களுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சிறுவனைத் தலையில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் ஆடினர்; பரிசுகள் வழங்கினர்; தனி மரியாதை தந்தனர்.

சிறுவனின், வளர்ந்து வரும் செல்வாக்கை அரசன் கண்டான். அரசனுக்கு சிறுவன் மேல் பொறாமை உண்டாயிற்று. தன்னையே அகற்றிவிட்டு மக்கள் அவனையே அரசனாக்கி விடுவார்களோ என்று அஞ்சினான். மக்களுக்கு நன்மை செய்தவன் ஆயிற்றே என்று கூடத் தயங்கவில்லை. தன்னுடைய பதவிக்குப் போட்டியாக மாறிவிடுமுன் அவனை அழிப்பது என்று முடிவு செய்தான். தனது மெய்க் காவலர்களை அனுப்பி, சிறுவனைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தான்.

அரசனின் மெய்க்காவலர்கள் அரசனின் உத்தரவை உடனே நிறைவேற்றினர். புக்கிட் மேராவின் மணல் இன்றும்கூட சிவப்பாக உள்ளதன் காரணம் இதுவே.

(சிங்கப்பூர் நாடோடிக் கதை)

- தி. அ.தினகரன்



மாமரம்



ஒரு வியாபாரி பக்கத்து ஊருக்குச் சென்று வியாபாரம் செய்து விட்டுத் தனது கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் காடு ஒன்று வந்தது. காட்டின் நடுவில் சக்திவாய்ந்த கோயில் ஒன்று இருந்தது. அக் கோயிலுக்குச் சென்று வணங்கி விட்டு வரலாம் என்று எண்ணினார். ஆனால் வியாபாரம் செய்த பணம் இருபதாயிரம் ரூபாய் மடியில் இருந்தது. இப் பணத்தை யாரிடமாவது வீட்டுக்குக் கொடுத்து அனுப்பி விட்டு பிறகு கோயிலுக்குப் போய் நிம்மதியாக வணங்கலாம் என்று எண்ணிக் கொண்டு, தனது கிராமத்துக்கு யாராவது போவார்களா என்று ஒரு மாமரத்தின் நிழலில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது வியாபாரியின் பக்கத்து வீட்டுக்காரர் மாணிக்கம் அவ்வழியாக வந்து கொண்டிருந்தார். மாணிக்கம், வியாபாரியைப் பார்த்து, "என்ன இங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள்? வாங்க போகலாம். நானும் வீட்டுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார்.

மாணிக்கம், "நான் கோயிலுக்குப் போய் வணங்கி விட்டு வருகிறேன். நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இந்த இருபதாயிரம் ரூபாயை என் மனைவியிடம் ஒப்படைத்து விட வேண்டும். செய்கிறாயா?" என்றார்.

"அதனாலென்ன கொடு. சேர்த்து விடுகிறேன்" என்று சொல்லி மாணிக்கம் பணத்தை வாங்கிக் கொண்டு சென்றார்.

வியாபாரி கோயிலுக்குச் சென்று வணங்கி விட்டு வீட்டுக்கு வந்தார். மனைவியிடம், "அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு வா" என்றார்.

"எந்தப் பணம்?" என்றாள் மனைவி.

"மாணிக்கத்திடம் கொடுத்து அனுப்பினேனே. அந்தப் பணம்தான்."

"மாணிக்கம் பணம் எதுவும் எடுத்து வந்து கொடுக்கவில்லையே" என்றாள் மனைவி.

வியாபாரி மாணிக்கத்திடம் சென்று பணம் கேட்டார். "பணமா! எப்பொழுது கொடுத்தீர்கள்? உங்களிடம் பணம் வாங்கி வந்தேனா! என்ன கதை அளக்கிறீர்கள்?" என்றார் மாணிக்கம்.

வியாபாரிக்கு மாணிக்கத்தின் பதிலைக் கேட்டவுடன், அதிர்ச்சியாயிருந்தது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. ஊர்ப் பஞ்சாயத்திடம் சென்று முறையிட்டார்.

பஞ்சாயத்து கூட்டப்பட்டது. மாணிக்கம் வரவழைக்கப்பட்டார். வியாபாரி நடந்தது அனைத்தையும்



என்றான் சிறுவன்.

எல்லோரும் சிறுவனைப் பார்த்தார்கள். ''போங்கள் போய் மரத்தைக் கூப்பிடுங்கள் உடனடிப்பாக வரும்'' என்றான் சிறுவன் மறுபடியும்.

வியாபாரி தயங்கியபடி அங்கிருந்து சென்றார். ஒரு மணி நேரம் ஆனது "என்ன வியாபாரியைக் காணவில்லை என்றான் சிறுவன். எல்லோரும் அமைதியாய் இருந்தனர். ஆனால் மாணிக்கம், ''எப்படி அவரால் சீக்கிரம் வர முடியும்? அந்த மரத்தின் அருகில் கூட வியாபாரி சென்றிருக்க மாட்டாரே"? என்றான்.

உடனே சிறுவன் "தலைவரே, வியாபாரி சொன்னது அத்தனையும் உண்மை. மாணிக்கம் சற்று முன்னர் அந்த மரம் எங்கிருக்குன்னே எனக்குத் தெரியாது என்று சொன்னார். இப்பொழுது அவர் வாயிலாகவே உண்மையைச் சொல்லி விட்டார். ஆதலால் வியாபாரி கொடுத்த ரூபாய் இருபதாயிரம், தண்டனையாக பத்தாயிரமும் ஆக மொத்தம் முப்பதாயிரம் ரூபாய் இவரிடம் வாங்குங்கள்'' என்று கூறினான்.

பஞ்சாயத்தார் மாணிக்கத்திடம் முப்பதாயிரம் ரூபாய் வசூலித்தனர். வியாபாரி வரவழைக்கப்பட்டு அவரிடம் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தனர். மீதி ஐயாயிரம் ரூபாயை இக்கட்டான இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்த சிறுவனுக்குக் கொடுத்தனர் பரிசாக!

(நாடோடிக் கதை)

கூறினார். மாணிக்கத்தை விசாரித்தனர். "தலைவர் அவர்களே, நான் நேற்று பக்கத்துக்கு கிராமத்துக்கும் போகலே, அந்த மாமரம் எங்கிருக்குன்னுகூடத் தெரியாது" என்று அடித்து கூறினார்.

பஞ்சாயத்தாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது ஒரு சிறுவன் எழுந்திருந்து "நான் இதற்கு தீர்ப்பு கூறுகிறேன்'' என்றான். தலைவரும் "சரி"யென்று சொன்னார்.

சிறுவன் வியாபாரியை அழைத்து, "நீங்கள் மாணிக்கத்திடம் பணம் கொடுத்ததற்கு யார் சாட்சி?" என்றான்.

"அந்தக் காட்டில் இருக்கும் மாமரம்" என்றார் வியாபாரி. "நீங்கள் போய் அந்த மரத்தை பஞ்சாயத்து தலைவர் கூப்பிட்டதாகச் சொல்லுங்கள். அந்த மரம் வரும்"

தக்கோலம். அ. முஸ்தபா

விலைக்கு வாங்க முடியாதவர்!


ஐந்தடி எட்டு அங்குலம் உயரமுள்ள இவரது செல்லப் பெயர் டிக்கோ. அக்டோபர் மாதம் 23ம் தேதி 1940ம் வருடம் பிரேஸிலில் பிறந்தவர். சிறுவயதிலேயே பந்து விளையாட்டில் ஆர்வமுடையவராக இருந்தும் பந்து வாங்கக் காசு இல்லாமல் பழைய துணியை சுருட்டி உருண்டையாகப் பந்து மாதிரி செய்து விளையாட ஆரம்பித்தார். தனது எட்டாவது வயதிலேயே மிக நன்றாகக் கால்பந்தாட்டம் விளையாடினார்.

இவரது பதினாறாவது வயதில், அதாவது செப்டம்பர் 7ஆம் தேதி 1956ஆம் வருடத்தில் கால் பந்தாட்டக் குழுவில் சேர்ந்து முதன் முதலாக விளையாடினார். தனது 17ஆம் வயதிலேயே கால்பந்தாட்ட ஹீரோவாக உயர்ந்த இவருடைய குழுவினருக்கு முதன் முறையாக 'உலகக் கோப்பை' கிடைத்தது 1958ஆம் வருடத்தில்.

உலகிலேயே மிக அதிகமாப் பணம் வாங்கி விளையாடிய இந்த கால்பந்தாட்ட வீரரை ஒரு மில்லியன் டாலர் பணம் கொடுத்து வாங்க முயற்சித்தது இத்தாலி! பிற நாடுகளும் இப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்கவே வேறு வழியின்றி, பிரேஸிலின் ஜனாதிபதி இவரை 'நாட்டின் சொத்து' என்று அறிவித்து விட்டார். இதனால், இவரை யாரும் விற்கவோ வாங்கவோ முடியாமல் போனது!

நூறு மீட்டர் தூரத்தைப் பதினோறு செகண்டுகளில் கடந்த இந்தக் கால்பந்தாட்ட மன்னரின் திறமையைக் கண்டு உலகமே வியந்தது. டாக்டர்கள் குழு இவரைப் பலத்த சோதனைகளுக்குள்ளாக்கியது. இவரது மூளையைச் சோதித்தார்கள்... இவரது தசை வகையை ஆராய்ந்தார்கள். கடைசியில் இவரது இதயத் துடிப்பு மிக மெதுவாகத் துடிப்பதைக் கண்டுபிடித்தார்கள். இதனால் தான் இவர் எளிதில் களைப்படைவதில்லையாம்! இது இவருக்கு 'இறைவனளித்த வரம்' என்கிறார்கள்.


இவ்வளவு திறமையுடையவருக்கு எப்படி மரியாதையளித்தார்கள் தெரியுமா? நைஜீரியாவுக்கும், பயோப்ராவுக்குமிடையே சண்டை நடந்து கொண்டிருந்த போது, இவர் இந்த இடங்களை கடந்து செல்லும் போதும், திரும்பும் போதும், இவருக்காக சண்டையையே ஒரு நாள் வீதம் இரு நாட்டினருமே நிறுத்தி வைத்திருந்தார்கள்! இத்தகைய மேன்மைக்குரிய இவரை 'கால் பந்தாட்ட மன்னர்' என்று அழைப்பதும்கூட நியாயம் தானே? கால்பந்தாட்ட விளையாட்டிலிருந்து ஓய்வு பெறும் முன்னர் இவர் விளையாடிய கடைசி விளையாட்டின் போது, ஒரு லட்சத்து இருபதாயிரம் ரசிகர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்தார்கள். அவர்களது அளவு கடந்த, கரை காணா அன்பின் வெளிப்பாட்டினால் உணர்ச்சி வசப்பட்ட இவரது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. 'நம்பர் 10' என்று பொறித்திருந்த தனது சட்டையைக் கழற்றி அந்தக் கண்ணீரைத் துடைத்து தனது நன்றியைத் தெரிவித்தார்.



இவர்தான் 'கறுப்பு முத்து' என்று பொருள் படும் பெயருடைய உலகப் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர் பீலே.

— எஸ். இ. பாத்திமா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



● என் மாதிரி இருந்து
என்னையேவா முறைக்கிறே!

Registered with the Registrar of Newspaper of India Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

